
சுவடி : 42
ஏடு : 8
பிப்ரவரி 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.272/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# மக்களுக்கு எதிரான தமிழக அரசை எதிர்த்தும் மக்கள் நாயகத்தை மதிக்காத தமிழக ஆளுநரை எதிர்த்தும் தமிழக மக்களும், எல்லாக் கட்சிகளும் போராட வேண்டும்!



திராவிட இயக்க ஆட்சிகள் இரண்டு வரலாற்றுக் கட்டங்களில் சென்னை மாகாணத்தையும், தமிழகத்தையும் ஆட்சி செய்தன.

17.12.1920 முதல் 1937 சூலை வரையில் ஆண்டது, நீதிக்கட்சி. அந்த ஆட்சி மக்கள் நலன் நாடுவதாக இருந்தது. இது முதலாவது கட்டம்.

6.3.1967 முதல் 31.1.2018 முடிய ஆண்டதும் ஆளுவதும் தி.மு.க. - அ.தி.மு.க. என்கிற திராவிடக் கட்சிகள். இது இரண்டாவது கட்டம்.

**ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்குக் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு தரும் கொள்கையில் மட்டும், இவ்விரண்டு கட்சிகளும் நேர்மையாக நடந்துகொண்டன.**

மற்றுமுள்ள அரசுத்துறைகளான - பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை நிருவாகம், நீர்நிலைகளைப் பாழாக்குவது, ஆற்றுமணலைக் கொள்ளை அடிப்பது, சாராய ஆலைகளை அமைப்பது, மக்களைக் குடிகாரர்களாக ஆக்குவது இவற்றில் இரண்டு கட்சிகளும் கள்ளக் கூட்டாளிகளாகவும், மக்களை வறுமையில் வாடவிடுகிறவர்களாகவும், வேளாண்மையைப் புறக்கணிப்பவர்களாகவும், தொழில் வளத்தைப் பெருக்காதவர்களாகவும் கூட்டுறவு நிறுவனங்களைக் கொள்ளையடிப்பவர்களாகவும் உள்ளாட்சி நிறவனங்களை உளுத்துப் போகச் செய்பவர்களாகவும் விளங்கினர்.

அண்மையில் 2009க்குப் பிறகு, இந்த எட்டு ஆண்டுகளில் தமிழக மீனவர்களுக்கு ஏற்பட்ட கேடுகளைக் களையப் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை; மய்ய அரசுக்கு நெருக்குதல் தந்து சென்னை முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள மீனவர்களுக்கு நேர்ந்த கேடுகளைக் களையத் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

2004இல் ஏற்பட்ட சுனாமி புயலையும், 2016இல் ஏற்பட்ட வெள்ளப் பாழையும், 2017 நவம்பர் 29, 30இல் ஏற்பட்ட 'ஒகி'ப் புயலால் குமரி மாவட்ட மீனவர்களுக்கு ஏற்பட்ட இடர்களைக் களையவும் உரிய நேரத்தில் எந்த ஏற்பாட்டையும் தமிழக அரசு செய்யவில்லை; இந்திய அரசும் செய்யவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தூத்தூர் பகுதியில் 2017 நவம்பர் 30 அன்று காலை ஏற்பட்ட 'ஒகி'ப் புயலால், கடலில் மீன்பிடிக்கப்போன 104 பேர் மாண்டனர்; 376 பேர், கரைக்குத் திரும்பவில்லை; இவர்களுள் 47 பேர் மட்டும் 2017 திசம்பர் 21 அன்று கரைக்குத் திரும்பினர். திசம்பர் 25இல் கிறிஸ்துமஸ் கொண்டாட வந்துவிடும் மீனவர்கள், பெரிதும் உயிரோடு திரும்பவில்லை.

குமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரமாக 48 மீனவர் ஊர்கள் இருக்கின்றன; அங்கு 80,000 பேர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுள் 'ஒகி'ப் புயல் தாக்கிய போது மீன்பிடித்துக் கொண்டிருந்த மீன்வர்களில் 400 பேர் காணாமற் போய்விட்டனர்; 700 பேர் கரை திரும்பவில்லை. ஏன்? "புயல் அடிக்கப் போகிறது" என்கிற வானிலை எச்சரிக்கை 30.11.2017 மாலையில்தான் மக்களுக்குப் போய்ச் சேர்ந்தது.

இந்திய அரசு பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தா ராமன் அவர்கள் பார்வையாளராக மட்டும் வந்தார்; அவரும் ஏதும் செய்யவில்லை.

2006 சூலைக்கும் 2009 மே 18-க்கும் இடையில் ஈழவிடுதலைப் போராளிகளை அழிக்கும் போரிலும், முல்லைத்தீவிலும் புதுக்குடியிருப்பிலும் வன்னியிலும் 1.40 இலட்சம் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த அந்தக் காலத்தில்-இலங்கை அரசுக்கு இந்திய காங்கிரசு மன்மோகன் அரசு வெளிப்படையாகத் துணை போயிற்று.

"தமிழக மீனவர்கள் எல்லைத்தாண்டி வந்து மீன் பிடித்தார்கள்" என்று குற்றஞ்சாட்டி, அப்போது 700 மீனவர்கள் கொல்லப்பட்டனர்; அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. தமிழக மீனவர்கள் படும் அல்லலுக்கு, எப்போது இந்திய அரசு பாதுகாப்பு அளித்தது?

**இதுபற்றித் தமிழகம் புதுச்சேரி சார்பில் இந்திய நாடாளுமன்ற இரு அவைகளிலும் உள்ள உறுப்பினர்கள் 59 பேர் - எப்போதாவது ஒன்றுபட்டு, மன்மோகன் சிங் அரசைத் தட்டிக் கேட்டார்களா? பாரதிய சனதா நரேந்திர மோடி அரசை 2014க்குப் பிறகு தட்டிக்கேட்டார்களா? இல்லையே!**

இனி, தமிழின மக்கள் ஒன்றுதிரண்டு, கட்சி வேறுபாடு கருதாமல், இந்திய அரசையும், தமிழக அ.இ.அ.தி.மு.க. அரசையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

அடுத்து, தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்துத் துறைப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் தமிழ்நாட்டில்தான் 1980களில் சிறப்பாக இயங்கின. நான் பஞ்சாப், அரியானா, உ.பி., பீகார், கர்நாடகா மாநிலங்களில் பேருந்திலும், தொடர் வண்டியிலும், மகிழுந்திலும் பல தடவைகள் போயிருக்கிறேன். அங்கெல்லாம், பேருந்தின் மேல் தட்டிலும், தொடர் வண்டிப் பெட்டியின் கூரையிலும் பலர் பயணம் போவர்.

தமிழ்நாட்டில் அப்படி எப்போதும் இல்லை. நிற்க.

ஆனால், இன்று தமிழ்நாட்டு அரசு நடத்துகிற பொதுப் பேருந்துகள் 27,318 ஆகும். இவற்றுள் 70 விழுக்காடு பேருந்துகள் ஓட்டையும், உடைசல்களும், குப்பையும், அழுக்கும் நிறைந்தவை. ஏன்?

**எந்திரம் (Engine) வாங்குவது, கூடு கட்டுவது (Body Building), உதிரி உறுப்புகள் கொள்முதல் செய்வது, அவற்றைப் பூட்ட ஊதியம் தருவது என்கிற எல்லா வற்றிலும்-அமைச்சர் முதல் பேருந்துத் துறை அலுவலக எழுத்தர் வரை பொதுப் போக்குவரத்துத் துறைக்காக ஒதுக்கப்பட்ட பணம் இவர்களால் தொடர்ந்து கொள்ளை அடிக்கப்பட்டது.**

ஆனால், அரசுப் போக்குவரத்துத் துறை ஓட்டுநர்கள், நடத்துநர்கள் 1,43,000 பேர். 45 தொழிற்சங்கங்களின் சார்பில் ஊதிய உயர்வு கோரி 23 தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

தரப்படுத்தும் ஊதியத் தொகையை 1700லிருந்து 2400ஆக உயர்த்தக் கோரினார்கள். 4.1.2018 அன்று பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

எனவே மொத்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களும், 4.1.2018 முதல் 11.1.2018 முடிய 8 நாள்கள், பல வடிவங்களில், தமிழ்நாடு முழுவதிலும் போராடினார்கள்; வேலைக்கு வரவில்லை.

**அவர்கள் கோரியது 2.57 மடங்கு உயர்வு; அரசு ஒத்துக் கொண்டது 2.44 மடங்கு உயர்வு; எஞ்சிய 0.13 மடங்கு என்பது ரூ.1,800க்குச் சமம்.**

**இதை 2.57 மடங்காகவே தர அரசு ஒப்புக் கொள்வதே நீதியாகும்.**

வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஒவ்வொரு நாளைக்கும் ஏற்பட்ட இழப்பு ரூ.9 கோடியே 42 இலட்சம் ஆகும்.

பொதுப் போக்குவரத்துத் துறைப் பேருந்துகள் 27,318 போதாது; இது 1,00,000 (ஒரு இலட்சம்) பேருந்துகள் ஆக்கப்பட வேண்டும்; இவை பேட்டரி மூலம் இயக்கப்பட வேண்டும்; எண்ணெய்ச் செலவு அதிகம் ஆகாமல் இருக்க வழிகாண வேண்டும்.

இதன் வழியாக-நாம் கணந்தோறும் இழுத்துவிடும் காற்றுத் தூய்மை ஆகும்; மக்களும் மகிழுந்து வாங்காமல், பேருந்திலேயே - பொது மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், பணக்காரர்கள், ஏழைகள் எல்லோரும் குறைந்த கட்டணத்தில் தங்கள் தங்கள் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட மக்களுக்கு நலன் தரும் திட்டங்களை நிறைவேற்ற முனையாமல், சட்டமன்ற உறுப்பினரின் மாத ஊதியத்தை ரூ.55,000 என்பதிலிருந்து ரூ.1,05,000 ஆக உயர்த்துவதற்குச் சட்ட முன்வரைவு ஒன்றை - ஆளுநரின் தொடக்க உரையில் சொல்லாத ஒன்றைச் சட்டமாக நிறைவேற்ற இன்றைய அ.தி.மு.க. அரசு முயற்சிப்பதை எல்லா மக்களும், எல்லாக் கட்சிகளும் எதிர்த்துப் போராட வேண்டும் என அன்புடன் வேண்டுகிறோம். நிற்க.

அண்மையில் தமிழக ஆளுநராக அமர்த்தப்பட்ட பன்வாரிலால் புரோகித் - எந்த ஓர் ஆளுநரும் 1947 முதல் 2017 வரை வந்தவர்கள் செய்யாத - தரங்கெட்ட பணிகளைச் செய்வதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய அரசமைப்புச் சட்டப்படி, ஒரு மாநில ஆளுநர் என்பவர் ஆளுநர் மாளிகைச் செயலக அதிகாரிகள் மூலம், மாநில அரசின் நிர்வாகமும் - சட்டமும், ஒழுங்கும் சரிவர இயங்குகின்றனவா என்று அறிந்து, அதை இந்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

மாநிலச் சட்டமன்றத்தின், ஆண்டு முதலாவது சட்ட மன்றக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து, மாநில அரசு அச்சிட்டுத் தரும் அறிக்கையைப் படிக்க வேண்டும். சட்டமன்ற வளாகத்தில் ஆளுநருக்கு என உள்ள அறையில் தங்க வேண்டும்.

மாநில அரசு, புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றி னால், அது மக்கள் நலனுக்குப் பொருத்தமில்லாதது என்று ஆளுநர் கருதினால் - அதைத் தக்க குறிப்பு களுடன், மாநில அரசுக்குத் திருப்பி அனுப்பலாம். அதுபற்றி முதலமைச்சரிடமோ, குறிப்பிட்ட துறை அமைச்சரிடமோ நேரில் வரச் சொல்லிப் பேசலாம். அவ்வளவே!

இதையெல்லாம் விட்டுவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை, போதிய பெரும்பான்மையைப் பெற்றி ருக்கிறதா என்பதை, சென்ற வாரம் நடந்த சட்டசபைக் கூட்டத்தில் நிரூபிக்க வேண்டும் என்று கூறத் துணிச்சல் இல்லாமல் - 235-க்கு 111 பேர் மட்டுமே கொண்ட அ.தி.மு.க. அரசு எழுதிக் கொடுத்த ஆங்கில அறிக்கை யைப் படிப்பதற்குத்தான் ஆளுநரா?

மூன்று மாவட்டங்களில் மட்டுமே-அமைச்சரவைக்குத் தெரியாமல், உளவறியும் காவல் துறைப் பணியாளர் போல் நேரில் சென்று, அந்தந்த மாவட்ட ஆட்சியரையும் மாவட்ட மற்ற துறைகளின் மாவட்ட அதிகாரிகளையும் அழைத்துக் கூட்டம் போட்டு ஆய்வு செய்வது - ஆளுநரின் மரியாதையின் சிறப்பு (Protocal)க்கு எதிரானது அல்லவா?

8.1.2018 அன்று தமிழகச் சட்டமன்றக் கூட்டத்தை நடத்திவிட்டு, 9.1.2018 அன்றே புதுதில்லிக்குப் போய் - பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேரில் பார்த்து - ஒட்டுமொத்தத் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பற்றிய தமது அறிக்கையையும், தமிழக அமைச்சர்களில் 21 பேர் செய்த ஊழல் பற்றிய பட்டியலையும் தந்தது, இவருடைய இப்போதைய அவசரப் பணியா?

5.50 கோடி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையும், ஆளுங்கட்சியினரின் பெரும்பான்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச் சரும் இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை, தமிழக ஆளுநர் தீர்மானிக்காதது ஏன்? பிரதமர்மோடி சொன்னால்தான், அதை பன்வாரிலால் புரோகித் செய் வாரா? வெட்கம்! வெட்கம்!

**மக்கள் நாயகத்தின் மதிப்புப் பற்றிக் கவலைப் படாத தமிழக அ.இ.அ.தி.மு.க. அரசையும், மரியா தையின் சிறப்புப் பற்றித் தெரிந்து கொள்ளாத தமிழக ஆளுநரையும் எதிர்த்துப் போராடுவோம், வாருங்கள்!**

**1.2.2018** - **வே.ஆனைமுத்து**

## முதன்மையான அறிவிப்பு

## சிந்தனையாளன்

அலுவலக புதிய முகவரி

**மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை-600 050**

என்கிற புதிய முகவரியில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சிந்தனையாளன் இதழுக்கு அனுப்பும் மடல்கள், கட்டுரைகள், பணவிடை, செய்திகள் முதலானவற்றைப் புதிய முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கைப்பேசி : **9444804980, 9597526990**

*- ஆசிரியர்*

## வேலூர் கவிஞர் கோ. இருசன் மறைந்தார்



இனிய தோழர், வேலூர் பொதிகைத் தமிழ்மன்ற நிறுவனர், அ.இ.அ.தி.மு.க. வேலூர் மாவட்ட இலக்கிய அணித் தலைவர், பணிஓய்வு பெற்ற சார்பதி வாளர் அன்பூண்டி கோ. இருசன் உடல் நலக்குறைவால் தம் 68ஆம் அகவை யில் 9.1.2018 அன்று மறைந்தார். தோழர் இருசன் மா.பெ.பொ.க.வின் செயல்பாடுகளுக்கு நீண்டகாலமாக உதவியாக இருந்துவந்தவராவர்.

அன்னாரின் உடல் 10.1.2018இல் அவரின் சொந்த ஊரான அன்பூண்டி கிராமத்தில், பொது மக்கள் அஞ்சலிக் குப்பின், நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை மா.பெ.பொ.க. உரித்தாக்குகிறது.

## க. நீலாவதியம்மாள் மறைவு



வேலூர் நீலா ஓவிய மன்றம் உரி மையாளரும், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயல்வீரருமான க.பன்னீர் செல்வம் அவர்களின் தாயார் க.நீலாவதியம்மாள் 23.1.2018 செவ் வாய்க்கிழமை மறைவுற்றார். மா.பெ.பொ.க. தோழர்கள் மோ.சி.சங்கர், பொ.காளியப்பன், மீ.டில்லிபாபு, மா.தசரதன் ஆகியோர் பன்னீர்செல்வத்தின் இல்லத்திற்குச் சென்று இரங்கலைத் தெரிவித்தனர். மறுநாள் 24.1.2018 புதன் அன்று வேலூரில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள மின் மயானத்தில் உடல் எரியூட்டப்பட்டது.

தோழர் க.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# மக்களைக் கசக்கிப் பிழியும் பேருந்துக் கட்டண உயர்வைத் திரும்பப் பெறு

## பேருந்துக் கட்டணம் - பேசும் புள்ளி விவரம்

- க. முகிலன்

### சென்னை மாநகரில் பேருந்துகளின் கட்டண விவரம் (ரூபாயில்)

| பேருந்து வகைப்பாடு | பழைய கட்டணம் | | உயர்த்தப்பட்ட கட்டணம் | | மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிகபட்சம் | குறைந்த பட்சம் | அதிகபட்சம் |
| சாதாரணப் பேருந்து வெள்ளைப் பெயர்ப் பலகை | 3 | 12 | 5 | 23 | 4 | 22 |
| விரைவுப் பேருந்து பச்சைப் பெயர்ப் பலகை | 5 | 21 | 8 | 35 | 7 | 34 |
| டீலக்ஸ் பேருந்து நீலப் பெயர்ப் பலகை | 7 | 29 | 12 | 48 | 11 | 47 |
| குளிர்சாதனப் பேருந்து | 18 | 73 | 25 | 125 | 24 | 124 |



30-1-2018 அன்று வேலூரில் பேருந்து கட்டண உயர்வைக் கண்டித்துப் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தடியடி நடத்தும் காவல்துறையினர்

மேலே உள்ள புள்ளிவிவரம் பேருந்துக் கட்டண உயர்வு எல்லா நிலைப் பேருந்துகளிலும் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக உயர்ந்திருப்பதைக் காட்டுகிறது. மேலும் கட்டணக் குறைப்பு எனும் அறிவிப்பு எந்த அளவுக்குப் பித்தலாட்டமானது என்பதையும் இப்புள்ளி விவரம் புலப்படுத்துகிறது.

மொத்த பேருந்துகளில் 40 விழுக்காடு மட்டுமே சாதாரணக் கட்டப் பேருந்துகள். நீண்ட தொலைவு வழித் தடங்களில் சாதாரண பேருந்துகளே இயக்கப்படுவதில்லை. அதனால் மக்கள் விரைவு அல்லது சொகுசுப் பேருந்துகளில் அதிகக் கட்டணம் கொடுத்துப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. சென்னை மாநகருக்கு நூறு கிலோ மீட்டர் தொலைவிலிருந்து நாள் தோறும் பலவகையான கூலி வேலை செய்வதற்குப் பல இலட்சம் பேர் வருகின்றனர். இவர்கள் ஒரு நாளைக்கு ரூ.300 முதல் 500 வரைதான் கூலியாகவோ சம்பளமாகவோ பெறுகின்றனர். இவர்கள் ஒரு நாளைக்குப் போக்குவரத்துக்காகக் குறைந்தது ரூ.100 செலவிட வேண்டிய நிலைக்கு இக்கட்டண உயர்வால் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் இவர்களின் இன்றியாமையா வாழ்க்கைத் தேவைகளுக்குச் செலவிடுவதைக் குறைக்க நேரிடும்.

தமிழ்நாடு முழுவதும் 22,000 அரசுப் பேருந்துகளில் ஒரு நாளைக்கு 2 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 55 விழுக்காடு மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். வேலை செய்யும் அகவையில் சிற்றூர்களில் இருப்பவர்களும் வேலைக்காக நாள்தோறும் நகரங்களுக்குச் செல்கின்றனர். வேளாண் விளைபொருள்களை-காய்கறி-பழங்களை நகரங்களில்தான் விற்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு பொருளாதாரச் செயல்பாடும் போக்குவரத்து வசதியைச் சார்ந்தே உள்ளது. குறைந்த கட்டணத்தில் பேருந்து போக்குவரத்தை வழங்க வேண்டியது அரசின் தலையாயக் கடமையாகும். இதில் லாபநட்டக் கணக்கைக் காட்டி தமிழக அரசு கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் பிழைப்பைச் சூறையாடுவது கொடும் கயமைத்தனம்.

எனவே, தமிழக அரசு பேருந்துக்கட்டண உயர்வைக் கட்டாயம் உடனே திரும்பப் பெறவேண்டும்.

# தமிழ்நாட்டை விட்டு ஓடு!



ஆண்டாள் செய்தியை
அடுத்தத்
தமிழ்நாட்டின்
தலைப்புச் செய்திகளில்
இன்னொன்று

தண்டச்சோற்றுத்
தடிமாடு
காஞ்சி சின்னசங்கரன்
தமிழ் வாழ்த்துப் பாடலுக்குத்
தகுமதிப்புத் தராமல்
சீமை எருது கனத்தில்
தியானத்தில் இருந்துள்ளார்

அன்று
மற்றவர்கள் அமைதியாய்
எழுந்து நிற்க
இவருக்கென்ன எகத்தாளம்?
தமிழுக்கு மதிப்பளிக்காச்
சனாதனக் கொழுப்பு – இது
தமிழினத்திற்கே நேர்ந்த
தன்மான இழுக்கு!

பெரியவாள் என்ற பெயரோடு
என்றோ பிணமாய்ப் போன
பெரியசங்கரன்
நிஷ்டையில் இருக்கையிலே
நீச பாஷையில் பேசேன் எனத்
தமிழை நித்தித்தார்

அதே கொழுப்புத்தான்
இந்தத் தேவநாதன் வகையறா
சின்ன சங்கரனுக்கும்!

செத்தமொழி இவர்களுக்குத்
'தேவபாடை'
தேனினும் இனிய நம் செந்தமிழ்
தீண்டத்தகாதோர் 'பீடை'

வாழை இலையில் வெளிக்குப்போகும்
வண்டவாளம் அறிந்தும்
இந்தமண்டை வீங்கிகளுக்குச்
சில இந்து மதவெறியர்களிடத்து
மதிப்புக் குறையவில்லை

பட்டிமன்றப் புகழ்
சாலமன் பாப்பையாவே
பவ்வியம் காட்டுகிறார்
அங்கவை சங்கவை
பாரி மகளிரையே
அவமானப்படுத்தியவர்
பார்ப்பன முண்டத்துக்குப்
பணிந்து தொடை நடுங்குகிறார்

இப்போது
பீடாதிபதிகள் எல்லாம்
பேட்டை ரவுடிகள் ஆய்விட்டார்கள்
சோடா புட்டிகள் பறக்கும் எனக்
கம்பு சுற்றுகிறார்கள்

பூணூல் கூட்டம் இன்று
புலிவேடம் போடும் எனில்
ஏறு தழுவுதல் கண்ட எங்கள் இனம்
எலிவளையில் ஒளியுமா?
இந்த வெட்டிப் பயல்கள்
வீரமெல்லாம் எங்கே?


தில்லைக் கோயில்
சிற்றம்பல மேடையில்
அன்னைத் தமிழில்
தேவராம் பாடிய
ஆறுமுகசாமியை இவர்கள்
அடித்துத் துவைத்தார்கள்
அவரைப் பெரியவர் என்றும்
பாராமல்
பெருந்தாக்குதல் தொடுத்தது
சிண்டு முடிந்த இந்த
தீட்சதப் பார்ப்பனக் கூட்டம்

செத்தமொழிக்கு
மக்கள் வரிப்பணத்தில்
செலவிட்டு மகிழ்வார்
மோடி!
இவர் இந்திக்கும் வடமொழிக்கும்
ஏவல் செய்யும் இந்திவெறிபிடித்த
இளந்தாடி!

தமிழ் உய7ர்தனிச் செம்மொழி
என்பதெல்லாம்
ஒருபுறம் இருக்கட்டும்
முதலில் அது
ஏழுகோடித் தமிழர்களின்
இதயத்தில் வாழும் மொழி
உழைப்பாளி மக்கள்தம்
உயிர்மூர்ச்சுத் தாய்மொழி
அந்தத் தமிழுக்கு மதிப்புத்தா
தடிமாடே!
தமிழ்நாட்டை விட்டு ஓடு!

– தமிழேந்தி

# ALAS, PYARELAL LODHI IS DEAD! GREAT LOSS TO THE DOWNTRODDEN!



From 1944 December, Periyar E.V. Ramasami, the mighty champion of the backward classes, scheduled castes and religious minorities toured in Uttar Pradesh, Kanpur and Lucknow. Shiv Dayal Singh Chourasia of Lucknow invited Periyar E.V.R.

In 1959, Cheddi Lal Sathi the renounced lawyer and Chaurasia jointly invited Periyar E.V.R. to U.P.

On 7.5.1978 Ram Awadhesh Singh, M.P. took myself Comrde M. Muthusami to Mazaffar Nagar, in U.P. to inaugurate the U.P. Backward classes convention. S.D. Singh Chaurasia presided over the conference. I, V. Anaimuthu inaugurated the U.P. convention. C.L.Sathi translated my speech into Hindi. That was my first visit to U.P. M. Muthusamy distributed to all the 2000 people assembled there, the pamphlet on reservation, in Hindi.

**After the demise of Periyar E.V.R. in December 1973, I was the first person to take his message to North India particularly Aligarh and Lucknow in U.P. and Patna in Bihar and Kolkota in West Bengal.**

For the first time I met Messers Pyarelal Lodhi, Dr. Prof. H.S. Yadav, Prof. Arjun Singh and some others of Aligarh on 23.3.1979, at New Delhi in a massive rally held to celebrate the centenary of Periyar E.V.R. and the 80th birthday of Dr. R.M. Lohia.

Then all the above the Aligarh leaders participated in the agitation for reservation to backward classes held at New Delhi, between 15.11.1979 and 1.12.1979. None of them courted arrest.

After a long gap there were continuous activities by the Aligarh leaders including Prof. Dr. D. Moorthy of Aligarh Muslim University.

On behalf of the All India Federation of B.Cs., S.Cs., S.Ts. and R.Ms, we invited Pyarelal Lodhi, Dr. H.S. Yadhav, Arjun Singh Yadhav, Dr. D. Moorthy to deliver speeches in the convention held on 20.10.1991 at MAVLANKAR AUDITORIUM, in New Delhi, demanding proportional reservation to backward classes.

We, consisting of 50 men and 10 women, all in a group of 60 had programmed to halt for a day or two at Aligarh, Kanpur, Lucknow, Patna and Kolkata and propagate the messages of Periyar E.V.R. and Baba Saheb Dr. Ambedkar, on our return journey to Tamilnadu.

Accordingly, we the 60 arrived at Aligarh at noon on 23.10.1991. All of us were received warmly at the Railway Station and taken to a STAR HOTEL at Aligarh and provided with 30 double -bed rooms for our stay. Pyarelal Lodhi and his beloved wife Premavati Devi felt pleasure in serving ghee-pulav (Veg. Briyani) and sumstuous items in the night to all the 60.

Next day, we arrived Kanpur 400 kms from Aligarh and visited important places and met and discussed over proportional reservation with local leaders and left for Lucknow at 7 p.m. and reached there at 9 p.m.

Dr. Dauji Gupta another Vice-President of the Federation and then sitting Mayor of Lucknow and his friends received us at the Railway Station and took all of us to Ambedkar Bhavan and hosted us for two full days and held a big meeting on one night.

Thereafter we invited Pyarelal Lodhi Dr. H.S. Yadav and others from Aligarh to all the conferences held at New Delhi and Tamil Nadu.

**Proportional Reservation for Backward Classes: The Uttar Pradhesh Campaign**

**1. The task :**

In August 2000, V. Anaimuthu the Patron - President of All India Federation of BC, SC, ST and RM - deputed three of us M. Raju, D. Thillaivanam and myself to Uttar Pradesh to explore the possibilities to

launch an intensive campaign demanding proportional reservation to backward following grounds:

1. Only 27% reservation has been given to the backward classes who are as much as 60% of total population.
2. Such reservation is not available in several important fields of power and authority like judiciary, defence services, scientific establishments and so on.
3. The reservation is denied in education; without reservation in education - reservation in posts and appointments could only be an eye-wash.
4. An unwanted ingenuous judge-made concept of 'creamy layer' has been clamped on only backward classes - which weapon effectively excludes the capable among backward classes - while the disabled poor are heartily welcomed. This is nothing but a mockery of reservation.
5. A judge-made law of 50% ceiling on reservation has been imposed which is un-realistic, unjust and irrational.
6. Reservation has been denied in promotion which means that reservation will be applicable only at the lowest cadres.
7. Though as a precedence - the reservation to SC/ST is proportional - their predicament has been made unenviable that in spite of more than 50 years of reservation facility - their percentage at higher echelons of administration is less than 10 while their population percentage is around 24. This is because they were not given the support systems and infrastructures needed for reservation to be effective.

**2. The delegation :**

The delegation contacted reservationists of yester-years like 1. Pyarelal Lodhi, 2. Dr. H.S. Yadav, 3. Ajrun Singh, 4. Mahendra Singh Lodhi all of Aligarh and 1. Dr. Dauji Gupta and 2. Dr. Cheddilal Sathi both of Lucknow. Several drawing-room meetings of like minded thinkers and scholars were conducted by the delegation, explaining the above points. Easy hand-outs were distributed.

**3. The campaign :**

As a result, the U.P. organisers decided that an intensive month long awakening campaign by means of hall meetings, public meetings, press meets and person to person contacts should be undertaken from 4.10.2000 to 5.11.2000 and invited the Madras team consisting of 1. V. Anaimuthu, 2. Salem M. Raju, 3. Sangamitra, 3. D. Thillaivanam, 5. Sinthanai (Periya sami), (Pachamalai) and Pugazh. Several leaders and enthusiasts from Aligarh and Lucknow coordinated the campaign. Prof. D. Moorthy of Aligarh Muslim University was a good link between Chennai - Aligarh and Lucknow.

**4. The mode of Operation :**

On 5.10.2000 at Aligarh a huge "Campaign Launch" conference was organised by the able team headed by Mr. Pyarelal Lodhi and Dr. H.S. Yadav. This was followed by 22 days of campaign in Western U.P. The Tamilnadu team then reached Lucknow on 27.10.2000. An intensive campaign was carried in and around Lucknow till 5.11.2000 when a final conference was held - under the chairmanship of Chowdhary Narendra Singh - Cabinet Minister for Food and Civil Supplies of U.P. The awakening campaign ended with resounding success as in 33 days more than 26 meetings were held in small and big centres of Western and Eastern U.P. where not less than 4000 scholars, educationists, teachers, lawyers and political activists were met. Hindi News papers like Aaj. Amar Ujala and Dhynic Jagran and English News paper, Times of India gave good coverage to the campaign.

**5. The result**

The campaign was a great success in bringing out the following results :

1. Inner party pro-proportional reservation B/C uprising was visible in BJP, Congress, Samajwadi Party, Bahujan Samaj Party and Bharatiya Kranti (Kalyan Singh).
2. Several scholars and educationists came forward to stand by and plunge into the campaign and work for the success of our demands.
3. New activists like Er. H.S. Rajput, Er. Hari Singh, Trilok Singh Verma and several others in Aligarh and Ministers like Chowdhary Narendra Singh and Ashok Yadav and several other social leaders in Lucknow, declared their whole - hearted support for the success of the proportional reservation demands.
4. **People in general were awe - struck that in 53 years of independence, the 60 crores backward**

**classes have been fooled in a big way - educationally, economically and politically.**

**6. The future**

The future plan is to take the issue home to Central Ministers, political VIPs in Delhi, all the Members of Parliament, all the Members of both Houses of UP and have a press meet at Delhi. The proportional reservation demand was launched in UP to attract maximum attention and benefit in minimum time. Now with our third stage of strategic schemes and activities of Delhi we are sure to succeed.

Proportional reservation is our birth right and we will get it.

***(Sangamitra)***

On 23.9.2001, all the leaders from Aligarh attended the celebration of Periyar E.V.R. at New Delhi. Justice AJIT SIGH BAINS, Chairman of the "Federal India Discussion Group" released the birthday souvenir of E.V.R. and Pyarelal Lodhi received the first copy (see picture).

The last occasion in which the leaders of our federation met, was the "All India Convention on Proportional Reservation" held at AVADI near Chennai city on 9th January 2005.

It was inaugurated by the then Tamilnadu Government Education Minister K. Anbazhagan and presided over by V. Anaimuthu.

Ram Awadhesh Singh of Bihar, Pyarelal Lodhi, Dr. H.S. Yadhav of Aligarh, Dr. Dauji Gupta of Lucknow, Neela Lokitha Dasan Nadar of Kerala, K. Kondala Rao of Andhra and All the Office Bearers of the Marxist Periyarist Communist Party and Leaders of Students, Wing and otter wings and the Federation leaders participated in that convention.


Now alas, our Federation Senior Vice President Mr. Pyarelal Lodhi is dead. He breathed his last on 12th January 2018 at 89th of age. It is a huge loss to the Federation and the downtrodden.

We readily share the grief of Lodhiji's beloved wife Mrs. Premavati Devi ji and sons M/s. Mohendra Singh Lodhi, Suresh Singh Lodhi, Prem Singh Lodhi and Jasvant Singh Lodhi and daughter Mrs. Rani Singh Lodhi.

Long live the name and fame of Mr. Pyarelal Lodhi!

**- V. ANAIMUTHU**

## ALAS, WE HAVE LOST Prof. Dr. H.S. YADHAV OF ALIGARH !



We, the members and office holders of the All India Federation of B.Scs., S.Cs., S.Ts. and R.Ms. of which Prof. Dr. Hukum Singh Yadhav alias H.S. Yadhav of Aligarh, the Senior General Secretary have lost him on the 24th of March 2017 - 9 months from 24th January 2018.

It is an a replbefore loss to the Federation and the multitude of the downtrodden people - particularly the B.Cs., S.Ts. and R.M.s. in India.

Many times between 1991 October 2005 January we, in a batch of comrades of the Federation visited Aligarh, and stayed at Lodhi's residence and dined with the members Pyarelal Lodhi's family and Prof. H.S. Yadhav family.

We have invited Pyarelal Lodhi, Dr. H.S. Yadhav, Prof. Arjun Singh Yadhav, Mahendra Singh Lodhi to Tamil Nadu and all of them gladly participated in some Conferences held in Tamilnadu, the last occasion being 8th and 9th January 2005 at Avadi near Madras.

H.S. Yadhav's wife Mrs. Shoba Yadhav died in 2003. V. Anaimuthu and Sangamitra met Dr. H.S. Yadhav and shared our grief with him.

On behalf of the Federation, in my capacity as Patron - President and another General Secretary Kalasa. Ramalingam express our heart felt condolences to H.S. Yadhav's three sons, two brothers - Balram Singh Yadhav and J.S. Yadhav and his four sisters.

We request all of them to gather courage and live a happy life.

Long live Prof. H.S. Yadhav's fame!

**V. Anaimuthu**
Kalasa Ramalingam

# "புதிய பேஷ்வாக்களுக்குத்" தலித்துகளின் அறைகூவல்


**- க. முகிலன்**

1984இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய சனதாக் கட்சி இரண்டு தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. எனவே மத அரசியலை முன்னெடுப்பதன் மூலம் தேர்தல் அரசியலை வென்றெடுப்பது என முடிவு செய்தது. அயோத்தியில் இராமன் பிறந்தஇடத்தில் கட்டப்பட்டிருந்த கோயிலை இடித்துவிட்டு பாபர் மசூதியைக் கட்டினர்; இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட இந்த வரலாற்று இழிவைத் துடைத்தெறிய, பாபர் மசூதியை இடித்துவிட்டு, மீண்டும் அங்கே இராமன் கோயிலைக் கட்டி, இந்துக்களின் பெருமையை மீட்டெடுக்க வேண்டும் என்பதை பா.ச.க. தன்னுடைய அரசியல் குறிக்கோளாக அறிவித்தது.

இதற்காக, ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான சங்பரி வாரங்கள் இந்தியா முழுவதும் இந்து மத வெறியையும் இசுலாமிய வெறுப்பையும் வளர்த்தன. 1992 திசம்பர் 6 அன்று சங் பரிவாரங்களால் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. மக்கள் நல அரசியல் என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டு, மதவெறி அரசியல் மேலோங்கியது. இதனால் சாதி அரசியலும் மோதல்களும் வளர்ந்தன. ஒரு பதற்றமான நிலை எப்போதும் இருக்குமாறு மத-சாதி அரசியல் சக்திகள் செயல்படுகின்றன. இத்தன்மையில்தான் மகாராட்டிர மாநிலத்தில் புனே அருகில் உள்ள பீமா கோரேகானில் தலித்துகள் மீது சங்பரிவாரங்கள் நடத்திய தாக்குதலையும், அதற்குத் தலித்துகள் நிகழ்த்திய எதிர்வினையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியா சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளுக்குப் பின்னும் தீண்டாமையின் அடிப்படையிலான இழிவுகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் தலித்துகள் ஆளாக்கப்பட்டு வருகின்றனர். ஆகவே தங்களுடைய சாதிய அடையாளத்தை முன்னிறுத்தியே தங்களின் உரிமைகளுக்காகவும் சுயமரியாதைக்காகவும் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வர்க்க அரசியல் சிந்தனை தலித்துகளிடையே வளரவிடாமல் இது தடுக்கிறது. எனவே அம்பேத்கரோடு மட்டுமே தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். 1991இல் அம்பேத்கரின் நூற்றாண்டு விழா முதல் இந்தியா முழுவதும் தலித்துகள் அம்பேத்கரின் பிறந்த நாளை ஒவ்வொரு சிற்றூரிலும் கொண்டாடுகின்றனர். அதேபோன்று அம்பேத்கர் மறைந்த திசம்பர் 6ஆம் நாளையும் தங்கள் மீட்பர் இல்லையே என்ற ஏக்கத்துடன் நினைவுகூருகின்றனர்.

1956 அக்டோபர் 14 அன்று நாக்பூரில் அம்பேத்கர் பத்து இலட்சம் மகர்களுடன் பவுத்த மதத்தைத் தழுவினார். அந்த இடம் தீட்சா பூமி எனப்படுகிறது. ஆண்டுதோறும் இந்தியா முழுவதிலிருந்தும் இலட்சக்கணக்கான தலித் மக்கள் தீட்சா பூமியில் அம்பேத்கர் புத்த மதத்தில் தீட்சை பெற்ற நாளில்



*கோரேகானில் 1818இல் நடந்த போரின் வெற்றித் தூண்*

கூடுகின்றனர், தங்கள் உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தங்கள் தலைவருக்குக் கண்ணீர் மல்க நன்றி தெரிவிக்கின்றனர். "இந்து மதத்தின் சாதிய ஆதிக்கக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவோம்" என்கிற உறுதியை ஏற்கின்றனர். இதேபோன்று மும்பையில் அம்பேத்கர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் - சைத்யா பூமியில் - அம்பேத்கர் மறைந்த திசம்பர் 6 அன்று தலித்துகள் பெரும் எண்ணிக்கையில் கூடி, தங்கள் மரியாதையைச் செலுத்துகின்றனர்.

மகாராட்டிர மாநிலத்தில் அம்பேத்கர் தலைமையில் நடந்த மகத் குளப் போராட்டத்தின் போது 1927 திசம்பர் 25 அன்று நடந்த மாநாட்டில் மனுஸ்மிருதி எரிக்கப்பட்டது. மகாராட்டித்தில் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பெண்கள் ஆண்டுதோறும் திசம்பர் 25ஆம் நாளைப் பெண்களின் விடுதலை நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

சூத்திரர், ஆதிசூத்திரர் (தலித்துகள்) அடிமைத்தனத்திற்குக் காரணமாக இருக்கும் பார்ப்பன ஆதிக்கத்தையும் இந்துமத புராண, இதிகாசங்களையும் ஒழிக்க வேண்டும்



*கோரேகான் வெற்றித் தூணுக்கு 1927 சனவரி 1 அன்று அம்பேத்கர் தோழர்களுடன் வீரவணக்கம் செலுத்தியபோது*

என்பதற்காக மராட்டியத்தில் மக்கள் இயக்கம் கண்டவர் சோதிபா புலே. அவருடைய துணைவியார் சாவித்திரிபாய் தான் சூத்திர - ஆதிசூத்திரப் பிள்ளைகளுக்காக புலேவால் இந்தியாவில் முதன்முதலாக அமைக்கப்பட்ட பள்ளியில் முதல் ஆசிரியர். சாதி இந்துக்கள் இழைத்த பல துன்புறுத்தல்களை யும் இழிவுகளையும் பொருட்படுத்தாமல் கல்வி கற்பித்தவர் சாவித்திரிபாய். அதனால் மகாராட்டிரத்தில் தலித்துகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் சாவித்திரி பாய் பிறந்த சனவரி 3ஆம் நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுகின்றனர். பார்ப்பனிய ஆதிக்கக் கலாச்சாரத்துக்கு எதிரான மாற்று கலாச்சார நடவடிக்கைகளாகவே நாம் இவற்றைப் பார்க்க வேண்டும்.

**தமிழகத்தில் ஆரியப் பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராகத் திராவிடக் கருத்தியலும், திராவிட இயக்கமும் வளர்த்தெடுக்கப் பட்டன. இந்துமதப் புராண இதிகாசங்களுக்கு எதிராக, பெரியார் திருக்குறளை முன்னிறுத்தினார். பார்ப்பனியப் பக்தியின் அடையாளமான கர்நாடக இசைக்கு எதிராகத் தமிழிசை முன்னிறுத்தப்பட்டது. இந்து மதப் பண்டிகைகளுக்கு எதிராக, தை முதல்நாளைத் தமிழர் திருநாளாக - பொங்கல் விழாவாகக் கொண்டாடுகிறோம். மத ஆதிக்கக் கருத்தியல் களைத் தாங்கிப் பிடிக்கும் கலாச்சார வடிவங்களை மாற்றுப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட வடிவங்கள் மூலம் வீழ்த்துவது சமூக நடைமுறை உத்தியாகும்.**

மனித சமுதாய வரலாறு என்பது வர்க்கப் போராட்டங் களின் வரலாறே ஆகும் என்றார், காரல் மார்க்சு. அதுபோல் தற்போதைய நிகழ்ச்சி என்பதும் கடந்த கால வரலாற்றின் நீட்சியே ஆகும். அத்தன்மையில் மகாராட்டிரத்தில் புனே அருகில் பீமாகோரேகானில் போர் நினைவிடத்தில் போரின் 200ஆவது ஆண்டையொட்டி இலட்சக்கணக்கில் தலித்துகள் திரண்டதற்கும் வரலாற்றுப் பின்னணி உள்ளது.

மராட்டியத்தின் வீர சிவாஜியை வீழ்த்திட முகலாயப் பேரரசன் அவுரங்கசீப் முயன்றார். அதில் அவுரங்கசீப் வெற்றி பெறவில்லை. சிவாஜியின் படையில் தாழ்த்தப்பட்டவர்களான மகர்கள் கோட்டையையும் முல்லை நிலப்பகுதிகளையும் காத்து நின்றனர். சிவாஜிக்குப்பின் 1689இல் ஆட்சிக்கு வந்த சிவாஜியின் மகன் சம்பாஜியை முகாலயப் படைகள் போரில் வென்று தளைப்படுத்தி. அவரது கை, கால்களைத் துண்டித்து அவரது உடலை பீமா ஆற்றில் வீசி எறிந்தனர். பீமா ஆற்றங் கரையில் வாது பத்ருக் என்ற சிற்றூரில் வாழ்ந்த கோவிந்த் மகர், சம்பாஜி உடலின் பகுதிகளை ஒன்றாகத் திரட்டி, இறுதிச்சடங்குகள் செய்து அடக்கம் செய்தார். அத்துடன் சம்பாஜிக்கு ஒரு நினைவிடமும் அமைத்தார். கோவிந்த் இறந்த பின், சம்பாஜி அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்குப் பக்கத்திலேயே புதைக்கப்பட்டார். அவருக்கு ஒருநினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. முகலாயப் பேரரசுக்கு அஞ்சாமல் சம்பாஜியின் உடல் பகுதிகளை ஒன்றாகத் திரட்டி இறுதிச் சடங்குகள் செய்த கோவிந்த் மகரின் துணிவு மக்களால் நினைவுகூரப்பட்டு வந்தது.

சிவாஜியின் பேரன் இளம் அகவையில் மன்னராக்கப் பட்ட போது, முதலமைச்சராக - பேஷ்வாவாக இருந்த சித்பவன் பார்ப்பான் அரசாட்சியைக் கைப்பற்றினான். 1720 முதல் மராட்டியத்தில் சித்பவன் பார்ப்பனர்களான பேஷ்




*2017 திசம்பர் 31 அன்று தலித்துகள் நடத்திய போர் முழக்க மாநாட்டு மேடையில் ஜிக்னேஷ் மேவானி, இராதிகா வெமுலா*

வாக்கள் அரசர்களாக இருந்தனர். இவர்கள் மனுஸ்மிருதியின்படி சூத்திரர்களையும் ஆதிசூத்திரர்களையும் (தலித்துகள்) கொடுமையாக ஒடுக்கினர். பேஷ்வா ஆட்சியால் ஒடுக்கப்பட்ட மகர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் படையில் சேர்ந்தனர்.

1818இல் புனேவைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த இரண்டாம் பேஷ்வா அரசன் பாஜிராவ் படைகளுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகளுக்கும் இடையே போர் நடந்தது. 28,000 வீரர்களைக் கொண்ட பாஜிராவின் படையை 834 வீரர்களைக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனியின் படை தோற்கடித்தது. பாஜிராவின் படைத்தளபதிகள் குறிவைத்துக் கொல்லப்பட்டதால், பாஜிராவின் படைகள் புறமுதுகிட்டுத் தோற்று ஓடின. கிழக்கிந்தியப் படையின் 834 பேரில் 500 பேர் மகர்களாக இருந்தனர். கொடுமையான பார்ப்பன பேஷ்வா ஆட்சியின் வீழ்ச்சியால் மகர்கள் மகிழ்ச்சியடைந்தனர். 1851இல் ஆங்கிலேயர் ஆட்சி மகர்களின் வீரத்தைப் போற்றும் வகையில் போர் நடைபெற்ற பீமா கோரேகானில் போரில் வீரமரணம் அடைந்த 22 மகர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட போர் நினைவுத்துணை நிறுவியது.

ஆங்கிலேயரின் படையில் சேர்ந்ததால், மகர்களில் ஒரு பகுதியினர் சாதிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்றதுடன், கல்வி கற்கும் வாய்ப்பையும் பெற்றனர். படைவீரர்களின் குடும்பத்துப் பிள்ளைகள் கட்டாயம் படிக்க வேண்டும் என்பதற்காக இராணுவமே பள்ளிகளை நடத்தியது. 1857இல் சிப்பாய்க் கலகம் நடந்தது. மதம் சார்ந்த நம்பிக்கைகளே இதற்குக் காரணம் என்று ஆங்கிலேய ஆட்சி உணர்ந்தது. சிப்பாய்க் கலகத்திற்குப்பின் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் இருந்த இந்தியாவின் ஆட்சி பிரித்தானிய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு செல்லப்பட்டது. அப்போது 'விக்டோரியா பேரரசி, மதம் சார்ந்த நம்பிக்கைகளில் அரசு தலையிடாது' என்று உறுதி அளித்தார். அந்த வகையில் 1857க்குப்பின் தீண்டப்படாதவர்கள் படையில் சேருவதற்கு ஆங்கிலேயே ஆட்சி தடைவிதித்தது.

மகர்களுக்கு உரிமைகளையும். நல்ல வாழ்வையும். கல்வியையும் வழங்கும் இராணுவப் பணியை வழங்க வேண்டும் என்று இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற கோபால் பாபா வாலன்கர், சிவ்ராவ் காம்னே போன்றவர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தி வந்தனர். இதன் தொடர்ச்சியாக அம்பேத்கர் 1918இல் சவுத்பரோ குழுவிடம் அளித்த அறிக்கையில், மகர்கள் படையில் சேருவதற்கான தடையை நீக்க வேண்டும் என்று கோரியிருந்தார். பின்னாளில் அம்பேத்கர், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியை நிலைநாட்டும் வரையில் மகர்களைப் படைவீரர்களாகப் பயன்படுத்திக் கொண்டனர்; பிறகு அவர்களைப் புறக்கணித்துவிட்டனர்; நன்றி மறந்த ஆங்கிலேயர்கள் என்று கண்டித்துள்ளார், அம்பேத்கரின் தந்தை ராம்ஜி இராணுவத்தில் சுபேதாராகப் பணியாற்றியவர். அதனால் இராணுவத்தில் பணிபுரியும் குடும்பங்கள் சாதிய ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு, முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பெறுகின்றன என்பதை அம்பேத்கர் நன்கு அறிந்திருந்தார். எனவே இராணுவத்தில் தீண்டப்படாதவர்கள் சேருவதற்கான தடையை நீக்குமாறு பிரித்தானிய ஆட்சியிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். மகர்கள் ஓரணியாகத் திரள்வதற்கான ஒருதிசை வழியாகவும் இக்கோரிக்கை இருந்து வந்தது.

**இந்தப் பின்னணியில் அம்பேத்கர் 1927 சனவரி 1 அன்று தன் தோழர்களுடன் பீமாகோரேகான் சென்று 22 மகர் வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள போர் நினைவு வெற்றித் தூண் முன் நின்று வீர வணக்கம் செலுத்தினார். அதன்பின் ஒவ்வொரு ஆண்டும் சனவரி முதல் நாளன்று மகர்கள் போர் நினைவிடத்துக்கு வந்து வீரவணக்கம் செலுத்தும் வழக்கம் ஏற்பட்டது.**

2005இல் ''பீமாகோரேகான் வெற்றித்தூண் சேவா சங்கம்'' என்கிற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சனவரி 1 அன்று பல்லாயிரக்கணக்கில் பீமா கோரேகானுக்கு வரும் தலித்துகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதுதான் இச்சங்கத்தின் நோக்கம். கடந்த பத்தாண்டுகளில் சனவரி 1 அன்று மூன்று முதல் நான்கு இலட்சம் தலித்துகள் இங்கு வந்தனர். இந்த வெற்றித்தூண் மகர்களின் வீரத்தைப் பறைசாற்றுவதாகவும், அவர்களின் உரிமை வேட்கைக்கும், போராட்டத்திற்கும் ஓர் உந்துவிசையாகவும் திகழ்கிறது.

2018ஆம் ஆண்டு - பீமாகோரேகானில் பிரித்தானியப் படைக்கும் இரண்டாம் பாஜிராவின் பேஷ்வா படைக்குப் போர் நடந்த 200ஆவது ஆண்டாகும். மகர்களின் வீரத்தைக் குறிக்கும் வெற்றித்தூணின் 200ஆவது ஆண்டை மாபெரும் விழாவாகக் கொண்டாட மகர்கள் திட்டமிட்டனர்.

பீமாகோரேகானுக்கு அருகில் உள்ள வாதுபத்ருக் சிற்றூரில் மன்னர் சம்பாஜிக்கு இறுதிச் சடங்குகள் செய்த கோவிந்த் மகரின் வீரத்தைப் போற்றும் வகையில் ஒரு

பதாகையைத் தலித்துகள் வைத்தனர். பல உள்சாதிகளைக் கொண்ட மராத்தாக்கள் எனப்படும் பெரும் பிரிவினர் மகாராட்டிரத்தில் அரசியலில் ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் பெருநிலவுடைமையாளர்களாகவும் இருந்து வருகின்றனர். வீரசிவாஜி இந்த மராத்தா பிரிவைச் சேர்ந்தவர். மராத்தாக்கள் அந்தப் பதாகையை அகற்றுமாறு கூறினார்கள். மகர்கள் அகற்ற மறுத்தனர். அதனால் மராத்தாக்கள் கோவிந்த் மகரின் நினைவிடத்தைச் சேதப்படுத்தினர். மராத்தாக்களுக்கும் தலித்துகளுக்கும் மோதல் ஏற்படுவதற்கான முதல் காரணியாக இந்நிகழ்வு அமைந்தது.

மேலும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் இயக்கப்படும் நரேந்திர மோடியின் ஆட்சி, கடந்த மூன்றரை ஆண்டுகளாக நடத்தி வரும் இந்துமதவெறியாட்டங்களுக்கு அறைகூவல் விடுக்கும் நோக்கத்துடன் தலித்துகள் 2017 திசம்பர் 31 அன்று பேஷ்வாக்களின் அரண்மனை இருந்த இடத்தில் ‘‘போர் முழக்க மாநாடு’’ நடத்தினர். இம்மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் தலித்துகளும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், முசுலீம்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் அம்பேத்கரின் பெயரன் பிரகாஷ் அம்பேத்கரும், குசராத்தின் தலித் போராளி ஜிக்னேஷ் மேவானி, சத்தீஷ்கர் மாநிலத்தின் சமூகச் செயற்பாட்டாளர் சோனி சோரி, மராட்டியத்தின் உல்கா மகாஜன், உமர் காலித், ஆந்திரத்தின் இராதிகா வெமுலா முதலானோர் உரையாற்றினர். மோடியின் ஆட்சி புதிய பேஷ்வாக்களின் ஆட்சியாக ஒடுக்கப்பட்ட மக்களைக் கொடுமைப்படுத்துகிறது; புதிய பேஷ்வாக்களை - புதிய பார்ப்பனியத்தை எதிர்த்திட அணியமாக இருக்கிறோம் என்று அம்மாநாட்டில் சங்பரிவாரங்களுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டது.

இதனால் இந்துத்துவச் சக்திகள் சினம் கொண்டனர். 2018 சனவரி 1 அன்று வெற்றித்தூணின் 200ஆவது ஆண்டையொட்டி பீமாகோரேகானுக்கு வந்த தலித்துகளையும் பிற்பட்ட வகுப்பினரையும் வரும் வழிகளிலும், பீமாகோரேகானிலும் தாக்கினர். இதில் ஒருவர் உயிரிழந்தார்; பலர் படுகாயமடைந்தனர். அதனால் 200ஆவது ஆண்டு நிகழ்ச்சி இடையிலேயே முடிவுற்றது. பீமாகோரேகானில் சங்பரிவாரங்களால் தாக்கப்பட்ட தலித்துகள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிய பின், இத்தாக்குதலைக் கேட்டறிந்த தலித் மக்கள் சனவரி 2 அன்று மகாராட்டிரம் முழுவதும் நகரங்களில் வீதிகளில் திரண்டு தங்கள் எதிர்ப்பைக் காட்டும் வகையில் கலவரத்தில் ஈடுபட்டனர். பிரகாஷ் அம்பேத்கர் தலைமையின் கீழ், தலித்து அமைப்புகள் மகாராட்டிர மாநிலத்தில் சனவரி 3 அன்று முழு அடைப்பு நடைபெறும் என அறிவித்தன. அதேபோன்று சனவரி 3 அன்று மகாராட்டிரத்தின் எல்லா நகரங்களிலும் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியது. தலித் இளைஞர்கள் - ஆண்களும் பெண்களுமாக - நகரங்களின் வீதிகளில் ஊர்திகள் இயக்கவிடாமல் தடுத்தனர். மகாராட்டிரத்தில் சிவசேனா கட்சி பலமுறை முழு அடைப்பு நடத்தி தன் வலியைக் காட்டியுள்ளது. இப்போதுதான் தலித்துகள் முதன்முறையாக முழு அடைப்பை நடத்தி தங்கள் ஆற்றலை நிறுவியிருக்கிறார்கள்.




*சனவரி 3 அன்று நடத்தப்பட்ட முழு அடைப்பின்போது தலித் இளைஞர்கள் தானே தொடர்வண்டி நிலையத்தை முற்றுகையிடல்*

இந்தியா பல்வேறு தேசிய இனங்களையும், மொழிகளையும், பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும், மரபுகளையும் கொண்ட ஒரு துணைக் கண்டம். ஆனால் சங்பரிவாரங்கள் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம் என்ற பெயரில் பார்ப்பனிய ஆதிக்கத்தை நிலைநாட்டிட முயல்கின்றன. பார்ப்பனிய மேலாண்மை என்பது வரலாறு நெடுகிலும் சூத்திரர்கள், தலித்துகள் மீதான கொடிய ஒடுக்குமுறையாகவும் சுரண்டலாகவுமே இருந்து வந்துள்ளது. எனவே சங்பரிவாரங்களின் இந்துத்துவ மேலாதிக்கத்தை தலித்துகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களும் ஓரணியில் திரண்டு வீதியில் இறங்கிப் போராடுவதன் மூலமே வீழ்த்த முடியும் என்பதை, பீமாகோரேகான் நிகழ்வு உணர்த்துகிறது. கற்பி, போராடு, ஒன்றுசேர் என்று அம்பேத்கர் அளித்த முழக்கமே இந்துத்துவ ஆதிக்கத்தை முறியடிப்பதற்கான ஆயுதமாகும்.

## கன்னியாகுமரியில் ‘‘மய்ய-மாநில அரசுகளின் உறவுகள்’’ கருத்தரங்கம்

கன்னியாகுமரியில் 24.1.2018 அன்று வரலாற்று மையத்தில் ‘‘மைய - மாநில அரசுகளின் நிர்வாகம் பற்றி மக்களின் மதிப்பீடும் நடவடிக்கையும்’’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் சி. பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை ‘அமைதி இல்லத்தின்’ உரிமையாளர் கொடிக்கால் ஷேக் அப்துல்லாவும், ‘‘சமூக நல்லிணக்க முன்னணியின்’’ தேசிய ஒருங்கிணைப்பாளர் இனாமுல் அசனும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

‘‘இந்த அரசமைப்புச் சட்டம் யாருக்கும் பயன்படாது; அதை எரிப்பதானால், நானே முதல் ஆளாக இருப்பேன்’’ என்று நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் மேதை அம்பேத்கர் முழங்கியதைச் சுட்டிக்காட்டியதோடு - சுவிட்சர்லாந்தில் இருப்பதைப் போல் உண்மையான கூட்டாட்சி முறை இந்தியாவில் ஏற்படுத்த வேண்டும் என்று பெரியசாமி வலியுறுத்திப் பேசினார்.

# உண்மையான கூட்டாட்சி எது?

- பேராசிரியர் **மு.நாகநாதன்**

**உ**ண்மையானக் கூட்டாட்சி என்ற இந்தத் தலைப்பே இந்தியத் துணைக்கண்டத்தில் கூட்டாட்சி இயல் இயங்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது. கூட்டாட்சி இயலும் மக்களாட்சி முறையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். மக்களாட்சிதான் எல்லாவித அரசமைப்புகளுக்கும் அடிப்படையாகும். ஒற்றையாட்சிமுறை கூட, மக்களாட்சிமுறையைத் தவிர்த்துச் செயல்பட முடியாது. அப்படிச் செயல்பட்டால் மன்னராட்சியைவிடக் கொடுமையான அரசாட்சி முறையாக அது அமைந்துவிடும். இங்கிலாந்து நாட்டில் அரசமைப்புச் சட்டம் என்ற ஒரு அமைப்பே கிடையாது. ஆனால் நாடாளுமன்றத்தில் இயற்றுகின்ற சட்டங்களே அரசமைப்புச் சட்டத்திற்கு சமமான நிலையையும் அதிகாரத்தையும் அளித்துவிடுகின்றன. இங்கிலாந்து நாட்டில் மக்களாட்சி முறையை ஒடுக்கிவிட்டு ஓர் ஒற்றையாட்சி முறையை நடைமுறைப்படுத்த முடியாது.

இங்கிலாந்து நாட்டின் பிரதமர் முழுமையான முறையில் நாடாளுமன்றத்திற்கும் அவர் சார்ந்திருக்கின்ற கட்சியின் சனநாயக இயல்புகளுக்கும் ஒருங்கிணைந்தே செயல்படவேண்டும். ஒரு சிறிய அளவில் சனநாயகத்தைக் கட்சியில் கடைப்பிடிக்காவிட்டால்கூட அவர் தூக்கி எறியப்படுவார். மக்கள் எப்போதும் ஜனநாயக அமைப்புகளைக் காப்பதில் விழிப்புணர்வோடு இயங்குவார்கள்.

சான்றாக இரண்டாவது உலகப் போர் முடிந்தவுடன் புகழ்பெற்ற அரசியல் தலைவர் வின்சன்ட் சர்ச்சில் தோற்கடிக்கப்பட்டார். அப்போது இரு காரணங்கள் சுட்டப்பட்டன. அதில் முதன்மையானது சர்ச்சில் போர்க்குணம் மிக்கத் தலைவர் அவர் தலைமைப் போர்க்கால நிகழ்வுகளுக்குப் போதுமானதாகும். போருக்குப்பின் இங்கிலாந்து ஆட்சியின் கீழ் இயங்கிய காலனி நாடுகளுக்கு விடுதலையை அளிக்க வேண்டிய சூழல்களை அனுசரித்துப் போகும் அட்லியைப் பிரதமராக்கினர். பிரதமர் அட்லியும் அவரது தொழிலாளர் கட்சியும் கடைப்பிடித்த அணுகுமுறையால்தான் இந்தியா உட்பட பல காலனி குடியேற்ற நாடுகளின் விடுதலைப் பயணம் விரைவுப்படுத்தப்பட்டது. ஒற்றையாட்சி முறையைப் பின்பற்றுகிற இங்கிலாந்தில், இன்று கூட எந்தப் பிரதமரும் இந்தியப் பிரதமர் மோடி போல் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் மதிப்பிழப்பு போன்ற நடவடிக்கையை அமைச்சரவையின் கருத்தைக் கேட்காமல் முடிவு செய்ய முடியாது. பிரதமர் தனி மனிதரல்ல. அவர் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பின் ஓர் அங்கமே ஆவார். இத்தகைய அணுகு முறையிலிருந்து யாரும் விலகிச் செல்ல முடியாது. கூட்டாட்சி இயலைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இந்தியாவில், பிரதமர் ஒரு சர்வாதிகாரியைப் போல செயல்படும் நிலையை உலகின் எந்த சனநாயக நாட்டிலும் காண முடியாது. புதுதில்லியின் பேராதிக்க பிரதமர் சனநாயகத்தையும் அதன் முதன்மையான நிர்வாகச் சட்டங்களையும் அமைப்புகளையும் முடக்கிவிட்டார். நெருக்கடி நிலை காலத்தில் அரசமைப்புச் சட்டமே முடக்கப்பட்டது. தற்போது பிரதமர் மோடி எல்லா அமைப்புகளையும் தனது அரசியல் நலத்திற்காக முடக்கி வருகிறார். கூட்டாட்சி இயலின் அடிப்படைக் கூறுகள் இன்று மோடி அரசால் சிதைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய போக்கினை முழுமையாக நீதிமன்றங்களால் கூடத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உச்ச நீதிமன்றத்தில் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கு ஒன்றிய அரசின் விருப்பமும் குறுக்கீடும் உள்ளதாக நீதிபதிகளின் ஊடகச் சந்திப்பிலிருந்து உணர முடிகிறது.

இதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. பிரிவினையைக் கோரும் உரிமையை 1950ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த அரசமைப்புச் சட்டம் வழங்கியது. அரசமைப்புச் சட்டத்தில் இதற்காக ஒரு பிரிவும் இணைக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஒற்றையாட்சிக் கூறுகளைப் பயன்படுத்தி ஒரு கொடுமையான சர்வாதிகார ஆட்சி இந்தியாவில் தோன்றிவிட்டால் பல இன சமய மொழி அடையாளங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகத்தான் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒடுக்கப்படுகிற தேசிய இனங்களின் சார்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் ஓர் அரசியல் கோரிக்கையாகவோ அல்லது ஓர் அரசியல் பேரமாகவோ எடுத்துக்கொள்கிற தன்மையை உருவாக்குவதற்குப் பிரிவினையைக் கோரும் சட்டப்பிரிவை அரசமைப்பு அவை இணைத்திருக்கலாம். ஆனால் நடந்தது வேறுவகையானது. 1962இல் அறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் பேசிய பிறகுதான் பிரிவினைத் தடை சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. மக்கள் விரும்பும் அரசியல் சனநாயக சக்திகளை ஒடுக்கும் அடக்குமுறை செயலாகத்தான் இதையும் கருத வேண்டும்.

1967இல் ஆட்சிப் பொறுப்பேற்ற அறிஞர் அண்ணா தமிழகச் சட்டமன்றத்தில் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டேன். ஆனால் அக்கோரிக்கைக்கான காரணங்கள் அப்படியே உள்ளன என்று குறிப்பிட்டார். மக்களாட்சிக் கூறுகளையும் கூட்டாட்சித் தன்மைகளையும் சிதைப்பதனால்தான் பிரிவினைத் தடைச் சட்டம் நிறைவேற்றிய பிறகும் காஷ்மீரிலும் வட கிழக்கு

மாநிலங்களிலும் பிரிவினை கோரும் கட்சிகளின் மக்கள் செல்வாக்கினைக் குறைக்க முடியவில்லை. உண்மை யான கூட்டாட்சிக் கூறுகளைத் தொடக்கக் காலத்திலேயே இணைத்திருந்தால், இந்தியத் துணைக் கண்டம் இன்று சந்தித்து வரும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு இருக்கலாம். ``கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம்'' என்பது போல, அண்மையில் மோடி அரசு நாகாலிம் பிரிவினை அமைப்பின் பின்வரும் கோரிக்கைகளை ஒப்புக்கொண்டு ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது. பிரிவினையை வலியுறுத்தும் நாகாலிம் வைத்த கோரிக்கைகள்.

1. பெரும் நாகாலாந்து மாநிலம்-Greater Nagaland-அமைவதைத் தடுக்கும் செயலாக மணிப்பூர் மாநிலக் காங்கிரசு அரசு, மணிப்பூர் மாநிலத்தில் 7 புதிய மாவட்டங்களை உருவாக்க நடவடிக்கைளை மேற் கொண்டது. இது நாகா குழுவினரோடு ஒன்றிய அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எதிரானதாகும். இதைத் திரும்பப் பெறவேண்டும்.
2. நான்கு மாதங்களாக நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட நாகா பழங்குடியினர் மாணவத் தலைவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்று உடனடியாக அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.
3. முத்தரப்புப் பேச்சினை ஒரு மாதத்தில் தொடங்க வேண்டும். மேற்கூறிய அனைத்துக் கோரிக்கை களும் ஒன்றிய அரசால் ஏற்கப்பட்டுள்ளன. 2017 மணிப்பூர் சட்டமன்றத் தேர்தலில் வெற்றிப்பெற்ற பா.ச.க. மாநில அரசும், ஒன்றிய அரசும், முத்தரப்பு ஒப்பந்தம் வழியாக நாகா குழுவினரின் கோரிக் கைகளை ஏற்றுள்ளன. இதன் வழியாக முழுமை யான பெருங் கூட்டாட்சிக் கூறுகள் -Confederal Set-up-ஏற்கப்படுகின்றன.

நெருக்கடி நிலை காலத்தில் பெருந்தலைவர் காமராசர் அவர்களை, எனது மாமனார் மார்க்சிய சிந்தனையாளர் விடுதலைப் போராட்ட வீரர் க.ரா. ஜமதக்னியுடன் சென்று சந்தித்த போது, காமராசர் கூறிய கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது: ``கூட்டாட்சி இயலில் சனநாயகத்தோடு இணைந்து வெற்றி பெற வேண்டுமென்றால் இந்திய நாட்டின் பிரதமர் பொறுப்பினை ஏற்பவர் ஒரு மாநில உணர்வுக்கு அப்பாற்பட்டு எல்லாத் தேசிய இனங்களுக்கும் பொதுவாக நடப்பவர்தான் தகுதி வாய்ந்த பிரதமராக இருக்க முடியும்'' என்று பெருந்தலைவர் காமராசர் குறிப்பிட்டார். தான் ஏன் காங்கிரசின் மூத்த தலைவராக இருந்த மொரார்ஜி தேசாயைத் தேர்ந்தெடுக்காமல், லால் பகதூர் சாஸ்திரி அமைச்சரவையில் தகவல் ஒலிபரப்புத் துறையின் அமைச்சராக இருந்த இந்திரா காந்தியைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்தேன் என்பதற்கான காரணத் தை விளக்கினார். மொரார்ஜி தேசாய் பிரதமரானால் குசராத்தி என்கிற எண்ண ஓட்டத்தில்தான் எல்லாச் செயல்களையும் நடைமுறைப்படுத்துவார் என்பதை, அவருடன் நீண்ட காலமாகப் பழகியதால் அறிந்து கொண்டேன் என்று குறிப்பிட்டார். மற்ற தேசிய இனங்களின் உணர்வுகளை மதிக்க மாட்டார்; அதன் காரணமாகத் தேசிய இனச் சிக்கல்கள் பெரும் அறைகூவலாக மாறிவிடும் என்றார். காமராசர் குறிப்பிட்டது போல மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த இரண்டு வருட குறுகிய காலத்தில் குசராத்தியர்களுக்கு ஒன்றிய அரசின் முதன்மையான துறைகளில் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. இந்திய ஆட்சிப் பணியில் பணிபுரிந்த எச்.எம். பட்டேல் என்பவரை இந்திய மைய வங்கியின் ஆளுநராக நியமித்தார். இன்று பிரதமர் நரேந்திர மோடி நியமித்துள்ள மைய வங்கியின் ஆளுநருக்கு இருக்கும் ஒரே தகுதி குசராத்தியரான அம்பானியின் நெருங்கிய உறவினர் என்பதுதான் எனப் பலர் குறிப்பிடுகின்றனர். நிதிக்குழு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அரசமைப்புச்சட்ட விதிகளின்படி நியமிக்கப் படும் ஓர் அமைப்பாகும். மாநிலங்களுக்குத் தேவையான நிதிப்பகிர்வை ஒன்றிய அரசின் வரி வருவாயிலிருந்து பிரித்துக் கொடுக்கும் ஒரு பெரும் பணியைச் செய்யும் அமைப்பாகும். இந்த அமைப்பிற்கும் நீதிபதி சீலாட் என்கிற குஜராத்திய இசுலாமியரைத்தான் தலைவராக பிரதமர் மொரார்ஜி நியமித்தார். 1977இல் உகாண்டாவில் இடிஅமின் ஆட்சி நடைபெற்றது. அப்போது ஆயிரம் குஜராத்தியர்கள் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதற்கான காரணம் தான் என்ன? தமிழ்நாட்டிலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் சார்பாக உகாண்டாவில் குடிநீர் வழங்கல் ஆலோசகராகப் பணியாற்றிய பொறி யாளர் திரு.குமாரசாமி சென்னையில் நடந்த ஒரு கூட் டத்தில் சில உண்மைகளை வெளியிட்டார். இடிஅமின் குசராத்தியர்களை வெளியேற்றிய நேரத்தில் தன்னை அழைத்ததாகவும், ஏன் அழைத்தார் என்று அறிய முடியாத நிலையில் ஒருவித அச்சத்துடன் தான் சென்ற தாகவும், ஆனால் இடிஅமின் தான் செய்த பணிகளைப் பாராட்டி நன்றித் தெரிவித்துவிட்டு தென்னிந்தியர்கள் வெளிநாட்டில் தொண்டு மனப்பான்மையோடு செயல் படுபவர்கள். குசராத்தியர்கள் அட்டைபோல இரத்தம் உறிஞ்சுபவர்கள் என்று கூறினார். இதன் காரணமாகத் தான் வட்டித் தொழில் செய்த உகாண்டாவின் பொரு ளாதாரத்தைச் சுரண்டிய பெரும் பணக்காரக் குசராத்தி யர்களை மட்டுமே நான் வெளியேற்றினேன் என்று கூறியதாகக் குறிப்பிட்டார். 1977இல் பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு இந்தச் செய்தி கிடைத்தவுடன் உடனடியாக ஏர் இந்திய விமானங்களை அனுப்பி ஆயிரம் குசராத்தி யர்களை தில்லிக்கு அழைத்து வந்துவிட்டார். இது குஜராத்தியரின் இரத்த பாசம்.

ஆனால் நாம் ஈழத்தில் கண்டதென்ன? 2009இல் முள்ளிவாய்க்காலில் குழந்தைகள் பெண்கள் உட்பட இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட போது எவ்வித அணுகுமுறையை வடநாட்டு ஆதிக்கச் சக்திகள் பின்பற்றின என்பதை எல்லோரும் அறிவர். இன்றைய குசராத்திய இந்தியப் பிரதமர் ராஜபக்சேவிற்கு இரத்தினக் கம்பள வரவேற்பை அளித்ததை நாம் மறக்க முடியாது. இன்றைய பிரதமர் மோடி மொரார்ஜி கடைப்பிடித்த குசராத்திய வெறியைப் பன்மடங்கு உயர்த்தி ஆட்சியியலில் கடைப்பிடிக்கிறார். பாஜக உட்கட்சி ஜனநாயகம் உள்ள கட்சி என்று தன்னைத்தானே புகழ்ந்து கொண்டது. மோடி பிரதமரானவுடன் சில மாதங்களுக்குள் உத்திர பிரதேசத்தைச் சார்ந்த ராஜ்நாத் சிங் தலைவர் பதவியில் இருந்து துரத்தப்பட்டு மற்றொரு குஜராத்தியரான அமித்ஷா தலைவராக நியமிக்கப்பட்டார். அமித்ஷா இன்று ஒன்றிய அரசின் அமைச்சரவைக்கு மேல் அமர்ந்திருக்கும் அதிகார மையமாக வலம் வருகிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மைய வங்கியின் தலைவராக ரகுராம் ராஜன் மிகத் திறமையாகச் செயல்பட்ட போதும், சுப்பிரமணியசாமியை விட்டு ஓட ஓட விரட்டினார்கள். எதற்காக? பணமதிப்பிழப்பு நடவடிக்கையைத்தான் நினைத்தவாறு செயல்படுத்துவதற்குக் குசராத்திய அம்பானியின் உறவினரான உர்ஜித் பட்டேலை இந்திய மைய வங்கியின் தலைவராகப் பிரதமர் மோடி ஆக்கினார்.

அரசமைப்புச் சட்டப்படி தேர்தல் ஆணையம் தன்னாட்சி அதிகாரமுடையது. அதன் தலைமைப் பதவிக்கும் குஜராத்தில் மோடி முதல்வராக இருந்த போது தலைமைச்செயலராக இருந்த ஜோதியைக் கொண்டு வந்து நியமித்தார். சீனப் பிரதமராக இருந்தாலும் சரி, இஸ்ரேல் பிரதமராக இருந்தாலும் சரி அகமதாபாத்தில் அவர்களின் பயணம் அமைய வேண்டும் என்பதற்காகத் தெரிந்தே பல திட்டங்களை அங்கிருந்து தொடங்குகிறார். குஜராத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே தேர்தலைச் சில காலம் தள்ளி வைக்க வேண்டும் என்று கோரிக்கையை வைத்து வெற்றி கண்டார். ஏறக்குறைய குசராத்தில் சிறு குறு தொழில்களைப் பாதிக்கும் சரக்கு சேவை வரியை 120 பொருள்களுக்குக் குறைப்புச் செய்தார்.

இந்தியப் பொதுத் துறை வங்கிகளுக்கு வாராக் கடனான எட்டு இலட்சம் கோடியில், 80 விழுக்காடு கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் குசராத்திய பெருமுதலாளிகளே ஆவர். பெருந்தலைவரின் காமராசரின் கணிப்பு மொரார்ஜி தேசாய்க்கு மட்டுமல்ல, மோடிக்கு அதிக அளவில் பொருந்துவதாக உள்ளது. இது போன்ற பல செய்திகளைக் கூறிய காமராசர் இந்தியாவிற்கு ஒரு பெரும் கூட்டமைப்புதான் (Confederation) சரியாக அமையும் அதுவும் குறிப்பாக தென்னக மாநிலங்களை இணைத்த ஓர் அரசமைப்பு முறை இந்தப் பெரும் கூட்டமைப்பு முறையில் இயங்க உறுதி செய்ய வேண்டும் என்று கூறினார்.

ஆனால் நமது இன்றைய ஒன்றிய ஆட்சி மாநிலத்திற்கு மாநிலம் ஒருவித அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. காஷ்மீரில் அடக்குமுறை; நாகாலாந்தில் அமைதி ஒப்பந்தம் எந்தக் கூட்டாட்சி இயல் நாட்டிலும் இது போன்ற தன்னிச்சையான சர்வாதிகாரப் போக்கினைக் காண முடியாது; முடியவே முடியாது. அங்கெல்லாம் சனநாயகத் தளத்தில் கூட்டாட்சி இயல் சிறப்பாகச் செயல்படுகிறது.

கடந்த 68 ஆண்டுகளாக இந்தித் திணிப்பு சமசுகிருதத் திணிப்பு இந்து மதத் திணிப்பு மாநில உரிமைகள் ஆண்டுக்கொன்றாகப் பறிப்புப் போன்ற தில்லிப் பேராதிக்க சக்திகளின் செயல்கள் முற்றிலுமாக இந்தியக் கூட்டாட்சி இயலைச் சிதைத்து வருகின்றன. இதற்கு ஒரே தீர்வு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் நாடாளுமன்றம் பரிந்துரை செய்யும் ஓர் அரசமைப்புச் சட்ட அவையை உருவாக்கி, உண்மையான இந்தியக் கூட்டாட்சி இயலை உள்ளடக்கிய ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதுதான் நிரந்தரத் தீர்வாகும். இல்லையென்றால் சோவியத் ஒன்றியம் போல் இந்தியா பல நாடுகளாகச் சிதறுண்டு போய்விடலாம். இதைத் தவிர்ப்பதற்கு இந்திய அரசியல் கட்சிகளும் மாநில அரசியல் கட்சிகளும் சரியான முறையில் இயங்குவதற்கு மக்கள் இயக்கங்கள் களம் அமைக்க வேண்டும் போராட வேண்டும்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா



### இ.அதியமான் - ச.சத்யா

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் பூ.சி.இளங்கோவன்-ஔவை இணையரின் மகன் இ.அதியமானுக்கும் தஞ்சாவூர் மாவட்டம் சுவாமிமலை ச.சோ.மா. சண்முகம்-கீதா இணையரின் மகள் ச.சத்தியாவிற்கும் வாழ்க்கை ஒப்பந்தவிழா 21-01-2018 ஞாயிற்றுக் கிழமை 9 மணிக்கு சிதம்பரம் வாண்டையார் திருமண மண்டபத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பூ.சி.இளங்கோவன் வரவேற்புரையாற்றினார். கீ.வீரமணி வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்தி வைத்தார். முன்னாள் அமைச்சர்கள் வி.வே.சுவாமிநாதன், க.பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோரும் கே.ஏ.மனோகரன், கோ.கோவிந்தராஜ், வ.மா.ச.சந்திர பாண்டியன், ஆறு.அழகப்பன், சீனி.கலியமூர்த்தி ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். பாரதபாபு நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

# தேசிய மருத்துவ ஆணையம்

- மரு. சா.மா. அன்புமணி

இந்திய மருத்துவக் குழுவுக்குப் (Medical Council of India-MCIO) பதிலாக, தேசிய மருத்துவ ஆணையத்தை அமைக்க நடுவணரசு முடிவு செய்தது. இதற்கான சட்ட முன்வரைவினை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா கடந்த 29-12-17 அன்று மக்களவையில் தாக்கல் செய்தார். கடந்த 2-1-18 அன்று மக்களவையில் இந்தச் சட்ட முன்வரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஆணையத்தை அமைப்பதற்கு மக்களவையில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதேபோன்று நாடு முழுவதும் மருத்துவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அன்றைய தினம் நாள் முழுவதும் மருத்துவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதையடுத்து சட்ட முன்வரைவு மீதான விவாதம் நடைபெறவில்லை. சட்ட முன்வரைவு நாடாளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இந் நிலையில் தேசிய மருத்துவ ஆணையம் தொடர்பான முதல் கூட்டம் வரும் 24-1-18 அன்று டெல்லியில் நடைபெற உள்ளது.

**இந்திய மருத்துவக் கவுன்சில்**

1933 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய மருத்துவக் கவுன்சில் அமைக்கப்பட்டது. நாடு விடுதலை அடைந்த பின் 1956 ஆம் ஆண்டு பல திருத்தங்கள் செய்யப்பட்டு இதுவரை இயங்கி வருகிறது.

நடுவணரசில் பா.ச.க. ஆட்சிக்கு வந்த பிறகு, பல அமைப்புகளைக் கலைத்துவிட்டது. குறிப்பாக, திட்டக் குழுவினைக் கலைத்து விட்டு, நிதி ஆயோக் என்ற புதிய அமைப்பை உருவாக்கியது. இந்த நிதி ஆயோக் பரிந்துரையின்படி இதுவரை இருந்த இந்திய மருத்துவக் குழுவைக் கலைத்து விட்டு, அதற்குப் பதிலாக, தேசிய மருத்துவ ஆணையம் அமைக்க முடிவு செய்யயப் பட்டுள்ளது.

தேசிய மருத்துவ ஆணையம் அமைக்கப்பட பல காரணங்கள் முன் வைக்கப்படுகிறது. அதில் முதல் காரணமாக ஊழல் குற்றச்சாட்டுகள் இடம் பெறுகிறது. இந்திய மருத்துவக் குழுவில், மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கும் முறைமையில் பெரும் ஊழல் புரிகிறது; **“தனியார் மருத்துவக் கல்லூரிகள் பெரும் தொகை யை வாங்கிக் கொண்டு தகுதி இல்லாத மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்த்து விடுகின்றன; இதனை மருத்துவக் குழுவால் தடுக்க முடியவில்லை. இதனால் திறமை தகுதி இல்லாத மருத்துவர்கள் உருவாகி வருகின்றனர். மருத்துவக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கையூட்டுப் பெறுகின்றனர். இதைத் தடுக்கவே தேசிய மருத்துவ ஆணையம்” என்கின்றனர்.**

மேலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மையே. மருத்துவக் குழுவின் தலைவராக இருந்த கேத்தன் தேசாய் செய்த பெரும் ஊழல் பேர்வழி. அவர் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல கோடிக்கணக்கான பணம், டன் கணக்கான தங்கம் எல்லாம் நாடறிந்த செய்தி.

இத்தகைய சூழலில் புதிதாக அமைய உள்ள ஆணையம் ஊழலைத் தடுக்குமா? என்றால் அதற்கான விடையே இல்லை. புதிதாகக் கொண்டு வரப்படும் விதிகள் ஊழலைத் தடுப்பதற்குப் பதில் ஊக்குவிக்கும் விதமாக உள்ளன.

புதிய விதியின் படி, தனியார் மருத்துவக் கல்லூரிகள் 60 விழுக்காடு இடங்களை அரசிடம் அளித்து விட்டு, 40 விழுக்காடு இடங்களைத் தங்கள் விருப்பம் போல கட்டணம் நிர்ணயம் செய்து நிரப்பிக் கொள்ளலாம் என்கிறது. இது நாள் வரை தனியார் மருத்துவக் கல்லூரிகளில் நிருவாக ஒதுக்கீட்டு இடங்களுக்கும் அரசே கட்டணத்தை நிர்ணயம் செய்தது என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால், தற்போது தனியார் மருத்துவக் கல் லூரிகளே கட்டணத்தை நிர்ணயம் செய்யலாம் என்பது, திருடன் கையில் சாவியைக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

இதற்கு முன் மருத்துவக் கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் எதுவாக இருந்தாலும் இளநிலை எம்பிபிஎசு, முதுநிலை எம்டி, எம்.எசு, மற்றும் உயர் சிறப்பு டிஎம், எம்சிஎச் போன்ற எந்தவொரு படிப்பைத் தொடங்க வேண்டும் என்றாலும், எத்தனை மாணவர்களை அனுமதிப்பது என்பதற்கு இந்திய மருத்துவக் கவுன் சிலின் இசைவைப் பெற வேண்டும். ஆனால், தற்போது அமையவுள்ள ஆணையம் இத்தகைய அனுமதியை வழங்கத் தேவை இல்லை என்கிறது. தனியார் கல்லூரிகள் தங்கள் விருப்பம் போல் இடங்களை உயர்த்திக் கொள்ளலாம், புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கலாம் என்கிறது. இதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுமதி பெற்றுக் கொள்ளலாம் என்கிறது. மேலும் ஆய்வின் போது தேவையான வசதிகள் கல்லூரியில் இல்லை எனில் தண்டத்தொகை மட்டுமே விதிக்கப்படும் . அதுவும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தண்டத்தொகை மட்டுமே விதிக்கப்படும். இதற்கு முன்பு தேவையான துறைசார் வசதிகள் இல்லை எனில், மேற்கொண்டு

அப்பிரிவில் மாணவர்களைச் சேர்க்க இயலாது. தடை விதிக்கப்படும். ஆனால் தற்போது அப்படி இல்லை. இந்த விதி, முன்பு ஊழல் பூனைகள் சிறிய சந்து வழியே சென்றதற்குப் பதிலாக , ஊழல் யானைகள் செல்வதற்குக் கதவுகளைத் திறந்து விட்டதற்கு ஒப்பாகும்.

### மாநில உரிமை பறிப்பு

இந்தப் புதிய ஏற்பாட்டின்படி ஏற்கெனவே இருந்த இந்திய மருத்துவக் குழுவில் மாநிலங்களின் நிதியைக் கொண்டு அதனால் அமைக்கப்பட்டவை என்ற தன்மையில் உரிமைகளைப் பறித்துவிட்டது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு மாநில அரசுக்கு இருந்த உரிமை வழி. இதுமட்டுமின்றி இடஒதுக்கீட்டுக்கு இசைவு தரும் தன் நிதி மருத்துவக் கல்லூரிகளின் இடங்களுக்கு மாநில அரசுத் தேர்வு செய்து நிரப்புவதற்கான உரிமையும் பறிக்கப்பட்டுவிட்டது. அதிகாரத்தையும் நீட் தேர்வின் வழியாகப் பறித்து விட்டது. புதிதாக அமைய உள்ள ஆணையம் மாநில அரசுகளுக்கு மருத்துவக் கல்வியில் எந்தவொரு குறிப்பிட்ட அதிகாரத்தையும் வழங்கவில்லை.

தற்போது அமைய உள்ள ஆணையத்தில் மாநிலங்களின் சார்பில் ஏதாவது ஐந்து மாநிலங்களின் உறுப்பினர்கள் மட்டுமே இடம் பெறுவர். மீதமுள்ள மாநிலங்கள் பங்கேற்க வாய்ப்பு இல்லை. அதுவும் சுழற்சி முறையில் தான் மாநிலங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் எனத் தெரிகிறது. ஆணையத் தலைவர், உறுப்பினர்கள் அனைவரும் நடுவண் அரசால் நேரடியாக நியமனம் செய்யப்படுவர். இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், வழக்குரைஞர்கள், கணக்காயர்கள், பொருளாதார வல்லுநர்கள், ஐஐடி, ஐஐஎம், இந்திய அறிவியல் கழகம் ஆகியவற்றின் இயக்குநர்கள், சமூக ஆர்வலர்கள் என மருத்துவம் சாராத பலரையும் மருத்துவ ஆணைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட வழிவகைகளை பாசக அரசு செய்துள்ளது.

இதன் மூலம் ஆர்எஸ்எஸ் தொடர்புடைய ஆள்களைத் தேசிய மருத்துவ ஆணையத்திற்குள் நுழைத்து, ஆணையத்தைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்து காவி ஆணையமாக்க முயற்சி செய்கிறது.

### மருத்துவத்தில் பன்முகத்தன்மை

ஆயுஷ் எனப்படும் ஓமியோபதி மற்றும் சித்தமருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, யோகா போன்ற முறைகளில் பயின்றவர்களுக்கு நவீன மருத்துவத்தில் ஆறுமாதப் பயிற்சி அளித்து, அவர்களை நவீன அறிவியல் மருத்துவம் செய்ய அனுமதி அளிக்கப்படும் என்கிறது ஒரு புதிய விதி. இதற்குப் பிரிட்ஜ் கோர்ஸ் (bridge course) எனப் பெயர். இந்தப் பயிற்சி பெற்றவர்கள் எம்பிபிஎஸ் மருத்துவர்கள் போலவே செயல்படலாம் என்கிறது. மேலும் எம்டி, எம்எஸ் போன்ற பட்ட மேற்படிப்புகளிலும் சேரலாம் என அனுமதி அளிக்க முயல்கிறது. இதனை நவீன மருத்துவர்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். ஆயுஷ் மருத்துவர்களை நவீன மருத்துவ முறைகளைக் கையாள அனுமதி அளிப்பது பொது மக்கள் உயிருக்குக் கேடு விளைவிப்பதாகும். மேலும் மாற்று மருத்துவ முறைகள் இத்திட்டத்தால் அடியோடு அழிந்து போக வாய்ப்புள்ளது.

**ஒருபுறம் மருத்துவக் கல்வியில் தரத்தை அதிகப்படுத்தப்படுகிறது என்ற பெயரில் ஏழை எளிய கிராமப்புற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எதிரான நீட் போன்ற தேர்வுகளைத் திணிக்கிறது நடுவணரசு. அது மட்டுமின்றி, எம்பிபிஎசு முடித்த மாணவர்களுக்கு அவர்கள் மருத்துவராகத் தொழில் செய்ய தேசிய அனுமதித் தேர்வு ஒன்றை நடத்துகிறது. இவ்வளவு ஆண்டுகளாகத் பல்கலைக்கழகத் தேர்வுகளில் வெற்றி பெற்று, பிறகு ஓராண்டு பயிற்சி மருத்துவராகப் பயிற்சி பெற்று அதன்பின்தான் மருத்துவராக அனைவரும் பணிபுரிவர்.**

இச்சூழலில் வெறும் நினைவாற்றல் திறனை மட்டுமே கணக்கிற் கொள்ளும் தேர்வு முறையை எதற்காக இளம் மருத்துவர்கள் மீது திணிக்க வேண்டும்? எம்பிபிஎசு படிப்பில் நுழையவும் பிறகு வெளியே வந்து மருத்துவராகத் தொழில் செய்யவும் கடுமையான தேர்வுகளைப் புகுத்தும் அதே வேளையில், ஆயுஷ் மருத்துவர்களை ஆறே மாதங்களில் நவீன மருத்துவராக மாற்றுவது பெரிய முரண்பாடு ஆகும். இதனால் முதலில் பாதிக்கப்படப் போவது பொது மக்களே. பொது மக்களின் உயிரை, உடல்நலத்தைப் பணையம் வைக்கும் முயற்சியில் அரசே ஈடுபடுவது கொடுமையல்லவா?

தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகளும் இடங்களும் மிக அதிகம். தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற இலக்கின் அடிப்படையில் நாட்டிலேயே அதிக அளவாக 23 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. ஆனால் இது போன்று வட மாநிலங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படவில்லை. அரசு மருத்துவமனைகளும், தொடக்க நல வாழ்வு நிலையங்களும், சிறப்பு மருத்துவ வல்லுநர்களும் உருவாக்கப்பட வில்லை. இது பற்றிய அக்கறை அம்மாநில அரசுகளுக்கு இல்லை என்பதையே புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

இந்நிலையில் பெருகிவரும் மருத்துவர்கள் தேவை, பொது மக்கள்: மருத்துவர் விகிதம் இவற்றை நிறைவேற்ற நடுவணரசிடம் உருப்படியான திட்டம் ஏதுமில்லை. மாநிலங்களுக்கும் உரிமைகள் இல்லை. அதனால்

மருத்துவக் கல்வியை வழங்குவதில் 100 தனியாரை ஈடுபடுத்த ஏதுவாக புதிய தேசிய மருத்துவ ஆணையமும் அதன் விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே, மருத்துவச் சேவை இந்தியாவில் 70% முதல் 80% வரை தனியார் மயமாகியுள்ளது. மக்கள் தமக்கான மருத்துவச் சேவைகளைப் பெறத் தமது வருமானத்தை, சேமிப்பைப் பெருமளவு செலவிடு கின்றனர். மருத்துவச் சிகிச்சை என்பது 100% தனியார் மயமாகிப் போயுள்ளது. அரசு பொது நலவாழ்வுத் துறை குற்றுயிரும் குலை உயிருமாய் ஆக்கப்பட்டுவிட்டது.

இந்த சூழலில் 50% தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள மருத்துவக் கல்வியை 100% தனியார் மயமாக்குவதற் கான கதவைத் திறந்து விட்டுள்ளது பா.ச.க அரசு. மக்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பெரிதும் மாநில அரசின் பொறுப்பில் உள்ளது. அரசு மருத்துவக் கல்லூரிகளும் மாநில அரசால் நிறுவப்பட்டு நடத்தப்படுகின்றன. ஆனால், மருத்துவக் கல்வியினை அடிமுதல் நுனி வரை நடுவணரசு முன்பு மருத்துவக் கவுன்சில் மூலமும் தற்போது மருத்துவ ஆணையம் மூலமும் கட்டுப்படுத்தி வருகின்றது.

இதனால், உள்ளூர் தேவைக்கேற்ப உடனுக்குடன் முடிவுகளை எடுப்பது செயல்படுத்துவது என்பது தடைப் படுகிறது. புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி நடத்த அனைத்து நிதி அதிகாரங்களையும் கொண்ட நடுவண் அரசு மாநிலங்களுக்கு உதவுவதில்லை. மாறாக பல தடைகளைப் போடுகிறது. நீட் போன்ற தேர்வுகள் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களாக உள்ள ஏழை கிராமப்புற மாணவர்கள் மருத்துவத் துறையில் நுழைவதைத் தடுக்கிறது. நகர்ப்புறங்களில் வாழும் உயர் பொருளாதார பின்னணி உடைய முன்னேறிய வகுப்பு மாணவர்கள் மட்டுமே இனி மருத்துவராக ஆக முடியும் என்ற சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு விட்டது. இப்பின்னணியில் இருந்து வரும் இளம் மருத்துவர்கள் ஊர்ப்புற மருத்துவ மனைகளில் பணிபுரிவது மிகவும் கடினமான ஒன்றாகும். இதனால் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பது மேலும் கடினமாகும்.

**மருத்துவச் சிகிச்சையில் பெரு நிறுவன மயம் மற்றும் காப்பீடு நிறுவன மயம், இது உலக வங்கி, பன்னாட்டு நிதியம் , உலக வணிகக் கழகம் வரையறுத்த கொள்கை.**

**இதுவே இந்திய நடுவண் அரசின் கொள்கை**

இது இந்நாட்டின் நூறு கோடிக்கும் அதிகமான ஏழை மக்களின் நலனுக்கு எதிரானது. ஏழைப் பொது மக்கள் மருத்துவச் சேவை பெறுவதில் உள்ள சிக்கல்களைப் போக்க, புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள தேசிய மருத்துவ ஆணை யத்தில் எதுவுமே இல்லை. அது புதிய மொந்தையில் பழைய கள். அவ்வளவே!

## மடல் பகுதி

அன்பு கெழுமிய சிந்தனையாளன் ஆசிரியர் வே. ஆனைமுத்து அவர்கட்கு, வணக்கம்.

சிந்தனையாளன் 2018 சனவரி இதழ் கிடைக்கப் பெற்றேன். மருத்துவர் க.மகுடமுடி தங்களின் உடல்நலனைச் சீராக்கித் தந்த நிலைகண்டு மன நிறைவடைந்தேன். உடல் நலனை முதன்மையாகக் கவனித்துக் கொள்ளுங்கள். பணிகளைப் பிறரை செய்விக்கச் செய்து சரிபார்க்கும் நிலையில் மட்டும் தங்கள் பார்வை இருக்க வேண்டும். க. முகிலன் அவர்களின் கட்டுரைகள் தொடர்ந்து சிந்தனை யாளனைச் சிறப்புச் செய்கின்றன. அவருக்கு எனது பாராட்டுகள்.

**தந்தை பெரியார் முழு வரலாற்றைத் தங்கள் பார்வை யில் எழுதி நிறைவு செய்திருப்பீர்கள் என எண்ணுகிறேன். இன்றேல் முதற்பணியாக அதனை நிறைவு செய்ய வேண்டு வது தங்கள் கடமையும் பொறுப்புமாகும். ஏனெனில் தங்களால் மட்டுமே நிறைவு பெற வேண்டிய பணி இது.**

எனவே விரைவில் இப்பணியை நிறைவு செய்து எத்தனை தொகுதிகள் வந்தாலும் முழுமையாக்கி முன்பதிவுத் திட்டத்தில் வெளியிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

வரும் 2019 பொங்கல் மலர் வெளியீட்டு விழாவுக்குள் இப்பணியை நிறைவு செய்திட ஆவன செய்யுங்கள். உடல் நலனையும் இப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுகிறேன். நன்றி.

முனைவர் **அ.ஆறுமுகம்,** திருமழப்பாடி

## ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள் கருத்தரங்கம்




திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 30.1.2018 செவ்வாய் மாலை 6 மணிக்கு சென்னை இராயப் பேட்டை விஜய் திருமண மண்டபத்தில் 'ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேத மரபுகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடை பெற்றது.

கு.அன்புதனசேகர் தலைமைத் தாங்கினார். க.சுகுமார் வரவேற்புரையாற்றினார். ந.அய்யனார் முன்னிலை வகித்தார். முனைவர் செ.சுந்தரவள்ளி, வாலாசா வல்லவன், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் கருத்துரை யாற்றினர். ஏராளமான இளைஞர்கள் பங்கேற்றனர்.

இரவு 9.30 மணிக்கு கருத்தரங்கம் நிறை வடைந்தது.

# சென்னை ஞாநி என்கிற சங்கரன் முதிராச் சாவு எய்தினார்!

சென்னை ஞாநி என்கிற சங்கரன் 15.1.2018 ஞாயிறு அன்று அதிகாலை தம் 64ஆம் அகவையில் மறைந்நார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இப்போது இந்தியர்களின் சராசரி வயது 70 அய்த் தாண்டிவிட்டது.

இவர் செங்கற்பட்டில் 1954இல் ஆங்கில இதழாளர் வேம்புசாமி-பங்காரு அம்மாள் இணையர்க்கு மகனாகப் பிறந்தார். தந்தை கல்வி பெற்றவர். எனவே சங்கரனும் நல்ல கல்வி பெற்றார்.

தமிழில் பெயர் பெற்ற பல கிழமை ஏடுகளில் பணியாற்றினார். தம் சொந்தப் பொறுப்பிலும் சில ஏடுகளை நடத்தினார். “தீம் தரிகிட” என்ற பெயரில் ஞாநி நடத்திய ஏட்டை நான் படித்திருக்கிறேன். அவரின் அரசியல் கிண்டலும் குத்தலும் சிந்திக்கத் தக்கவை.

அத்துடன் கதைகள், நாடகங்கள், தொலைக்காட்சி யில் குறும்படங்கள் இவற்றையும் வெளியிட்டிருக்கிறார்.

எடுத்துக்காட்டாக, முற்போக்கு எண்ணங்கொண்ட ஞாநி, தந்தை பெரியாரின் 95 ஆண்டுகால வாழ்க் கையில், (1879-1973), 1885 முதல் 1933 வரையி லான அவரின் பொது வாழ்க்கை பற்றி, 5 கட்டங் களைக் கொண்ட தொலைக்காட்சியில் திரைப்படமாகக் காட்டுவதற்கு ஏற்ற - 2 மணிநேரம் ஓடக்கூடிய குறும்பட ஆவணத்தை உருவாக்கி, இந்திய அரசு இயக்கும் “பொதிகை” தொலைக்காட்சிக்கு-தூர்தர்ஷன் பிரிவுக்கு “அய்யா” என்று பெயரிட்டு 2003 ஆகத்தில் அளித் தார். இந்திய அரசு 2004 ஏப்பிரலில் சென்னை தூர் தர்ஷன் பொதிகையில் திரையில் போட ஒப்புதல் வழங்கியது.

அந்த 8 மாத காலத்தில் ஞாநியும் இயக்குநர் ஆனந்தியும், கடன்பட்டுத் துன்பங்களை அனுபவித்த னர்.

சென்னையில் அண்ணாசாலையில் அமைந்துள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக அரங்கத்தில் பொதிகை தொலைக்காட்சியில் “அய்யா” என்ற ஆவணப் படத்தை 13.2.2005 முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை ஞாநியும், இயக்குநர் ஆனந்தியும் காட்சிப்படுத்தினர்.

ஞாநி அழைப்பின் பேரில் நான் அத்திரைப்படத் துக்குப் போனேன். என்னுடன் ஈரோடு பேராசிரியர் தோழர் மு.க. சுப்பிரமணியம் அவர்களும் வந்திருந் தார். அவர் இசை நாடகப் பிரியர்; சுவைத்து எழுதுபவர்.



ஈரோட்டுக்குப் போனவுடன் “அய்யா” குறும்படம் பற்றி 20.2.2005 அன்று ஒரு திறனாய்வுக் கட்டு ரையை ஆங்கிலத்தில் எழுதி, தனியார் தூது அஞ்சலில் விடுத்தார். ஆனால் அந்தோ! அன்று 20.2.2005 இரவே மாரடைப்பால் மு.க.சு.மறைந்துவிட்டார்.

அவர் எழுதிய ஆங்கில மதிப்புரை 2005 மார்ச்சு “PERIYAR ERA” இதழில் வெளிவந்தது.

13.2.2005இல் “பெரியார் குறும்படம் ஏன் இன்றியமையாதது?” என்பது பற்றியும், நான் “பெரியார் சிந்தனைகள்” நூலுக்கு 1974 சூலையில் எழுதிய என் முன்னுரையைப் பயன்படுத்தியே திரைப்படம் எடுத்தது பற்றியும், மேடையில் ஞாநியும் ஆனந்தியும் குறிப்பிட்டனர்.

“சுயமரியாதை இயக்க முன்னோடிகளைப் பற்றிய விவரங்களை அறியத் தமிழகம் தவறிவிட்டது” என தோழர் ஞாநி அவர்கள் குறிப்பிட்டார்.

**மனத்தில் பட்டதை மறைக்காமல் கூறிய - எழுதிய மறைந்த அந்த மாமனிதர் ஞாநியைத் தமிழகம் போற்ற வேண்டும்!**

வாழ்க ஞாநி சங்கரன் பெயரும் புகழும்!

**- வே. ஆனைமுத்து**

# இலாடபுரம் தந்த தன்மானத் தலைவர் இளையபெருமாள் செயபால் மறைந்தார்!



பெயரும் புகழும் பெற்ற பட்டதாரி ஆசிரியர் இளையபெருமாள் செயபால் அவர்கள். 6 அடிக்கு மேற்பட்ட உயரம்; நெடிய கால்கள்; உருண்டை முகம்; எவரிடமும் எப்போதும் எது பற்றியும் சிரித்துக் கொண்டே பேசுபவர்.

அவரிடம் நேர்காணல் கண்டு, அவரைப் பற்றிய விவரங்கள் முழுவதையும் புலவர் பூலாம்பாடி கு. வரதராசன் எழுதியிருந்தார். அதை 2017 நவம்பர் "சிந்தனையாளன்" இதழில் வெளியிட்டிருந்தோம் - பூரிப்புடன். அந்தப் பூரிப்பு 19.1.2018 வெள்ளி பகல் 2 மணிக்குத் துடைக்கப்பட்டுவிட்டது. 96 ஆண்டுகள் 3 மாதங்கள் 2 நாள்கள் நிறைவாழ்வு வாழ்ந்து, நம்மிடையே இருந்து விடைபெற்றார், இரா. இளைய பெருமாள் செயபால்.

பழைய பெரம்பலூர் வட்டத்தைச் சார்ந்த இலாடபுரத்தில் ஆதித்திராவிடர் வகுப்பைச் சார்ந்த இராமசாமி - காளியம்மாள் என்ற இணையருக்கு 17.10.1921இல் மகனாகப் பிறந்தார், இவர்.

தென்னார்க்காடு மாவட்டம் தொழுதூருக்கு அருகில் வாகையூரில் பிறந்த சுகிர்தாமணி அம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

இவ்விணையரை 1959 முதல் நான் அறிவேன். தென்னிந்திய கிறித்துவச் சபை (C.S.I.)யைச் சேர்ந்த இவர்கள், தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கையை மனமார ஏற்றவர்கள். மேதை அம்பேத்கரின் பிறவி சாதி ஒழிப்புக் கொள்கையை ஏற்றவர்கள். என் வகுப்புத் தோழர்கள் வாகையூர் முருகன், கோவில்பாளையம் ச.செவ்வண்ணன், நல்லான்பாளையம் கு. பாலகிருஷ்ணன், மு. அழகப் பிள்ளை, வாலிகண்டபுரம் அ. செல்லமுத்து ஆகியோரின் உற்ற தோழர் இவர். தோழர் இளைய பெருமாள் பெரம்பலூரில் வாழ்ந்த காலம் முழுவதிலும் அடிக்கடி திருச்சி பெரியார் மாளிகைக்குச் சென்று பெரியாருடன் கலந்து பேசுவார்.

**1930களில் இவர் ஈரோட்டில் படித்த காலம் முதற்கொண்டு, தந்தை பெரியாரை அறிந்திருந்தார்.**

பெரம்பலூர் வட்டத்திலும், நகரிலும் 1973 வரையிலும் அதற்குப் பிறகு தம் இறுதி நாள் வரையிலும் நாங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் இவருடைய குடும்பத்தினரும், மூங்கில் மண்டி மு. சின்னப்பன், பெரம்பலூர் இராமசாமி (ரெட்டியார்), துரைசாமி ஆகியோரும் உறுதுணையாக விளங்கினர்.

இவரை ஒத்த வயதுடைய அரும்பாவூர் மேட்டூர் இரா.சின்னசாமி அவர்கள் 31.12.2017இல் மறைந்தார். அவரும் எங்களுக்கு உறுதுணை புரிந்தவர் ஆவார்.

நான் 2016 திசம்பரில் பெரம்பலூரில் இளைய பெருமாள் செயபால் இணையரையும், மேட்டூரில் இரா.சின்னசாமி அவர்களையும் நேரில் கண்டு நலம் உசாவினேன்.

திருச்சி காவேரி மருத்துவமனையில் 19.1.2018 இல் மறைந்த இரா. இளைய பெருமாள் அவர்களின் உடல், 20.1.2018 சனி மாலை 4.30 மணிக்கு பெரம்பலூரில் C.S.I. இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. மா.பெ.பொ.க., தி.க., தி.மு.க. தோழர்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

உலகத்தார்க்கு உற்றுழி உதவி செய்பவராக இறுதி வரை விளங்கிய இரா. இளைய பெருமாள் செயபால் அவர்களை இழந்துத் துயருறும் அவர்தம் ஆருயிர் துணைவியார் சுகர்தாமணி அம்மையார், மக்கள் அறிவுடைநம்பி, வள்ளுவன் நம்பி, அருள் நம்பி ஆகியோருக்கும், இலாடபுரம் அய்யாக்கண்ணு குடும்பத்தினர்க்கும், பெரம்பலூர் மாவட்டப் பெரியார் தொண்டர்கள் அனைவருக்கும் என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் உரித்தாக்கு கிறேன்.

வாழ்க இளைய பெருமாள் செயபால் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2018 வெளியீட்டு விழா
# உண்மையான இந்தியக் கூட்டாட்சிக் கோரிக்கை மாநாடு

2018 சனவரி 7 அன்று காலை சென்னை, மேற்கு மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் கொடிகளாலும், தோரணங்களாலும் அணிசெய்யப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. முதல் நாள் இரவே தோழர்கள் கு. தொல் காப்பியன், மீ. டில்லிபாபு, சேடக்குடிகாடு சீனிவாசன், இரா.பகுத்தறிவாளன், துரை சித்தார்த்தன், ஆ. முத்தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட கட்சித் தோழர்கள் மாநாட்டு மண்டபத் திற்கு வரும் வழிநெடுகிலும் கட்சிக் கொடிகளைக் கட்டினர். நான்கு இடங்களில் பெரிய பதாகைகள் வைக்கப்பட்டன. தியாகராய நகர் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

தன் இளமைக்காலம் முதலே பெரியாரின் சுயமரியா தைக் கொள்கைகளை ஏற்று, வாழ்நாள் முழுவதும் அக் கொள்கைகளை வென்றெடுப்பதற்காக அரும்பணியாற்றிய - அண்மையில் மறைந்த கட்சியின் மூத்த தோழர் காஞ்சி அரங்க, சானகிராமன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், நிகழ்ச்சி அரங்கிற்கு அவர் பெயர் சூட்டப்பட்டது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக மிகக் குறைந்த அளவி லேயே பேருந்துகள் இயக்கப்பட்ட போதிலும், கட்சித் தோழர் களும், தோழமை இயக்கத்தவர்களும், தமிழ்த் தேசிய ஆர்வலர்களும் காலை 10 மணிக்கே அரங்கம் நிரம்பி வழியுமளவில் வந்து குவிந்தனர். காஞ்சிபுரத்திலிருந்து இரண்டு சிற்றுந்துகளிலும் திருவண்ணாமலை மாவட்டத் திலிருந்து ஒரு சிற்றுந்திலும் கட்சித் தோழர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மாநாட்டிற்கு வந்தனர் என்பது சிறப்புக் குரியதாகும். வெளியூர்களிலிருந்து வந்த தோழர்களுக்கு மாநாட்டு மண்டபத்தில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

1997ஆம் ஆண்டு முதல் மா.பெ.பொ.கட்சி தமிழ்ப்பெரு மக்களின் ஆதரவுடன், பல்துறை அறிஞர்களின் சீரிய கட்டுரைகளைத் தாங்கி வரும் சிந்தனையாளன் பொங்கல் மலரை வெளியிட்டு வருகிறது. அத்தன்மையில் 21ஆவது ஆண்டாக, சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழா நிகழ்ச்சி மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் 07.01.2018 அன்று முற்பகல் 10.30 மணிக்குத் தொடங்கியது. இந்நிகழ்ச்சிக்கு மா.பெ.பொ.க. சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் வாலாசா வல்லவன் தலைமை ஏற்று உரையாற்றி னார்.

காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர், தாம்பரம் மா. சுப்பிரமணி வரவேற்புரையாற்றினார். புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வேலூர் மாவட்டச் செயலாளர் மு. சாமிநாதன், மா.பெ.பொ.க. திருச்சி மாவட்டச் செயலாளர் இரா. கலியபெருமாள், சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் பா.வை. அருள்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி து. அரிபரந்தாமன் சிந்தனையாளன் பொங்கல் மலரை வெளி யிட்டார். மலரின் முதல் படியைத் திருமண மண்டபத்தை இலவயமாக வழங்கி உதவிய இலக்கியச் செல்வர் மாம்பலம் ஆ. சந்திரசேகர் பெற்றுக்கொண்டார்.

பொங்கல் மலரை வெளியிட்ட நீதிபதி து. அரிபரந்தாமன் அவர்களிடம் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆ.கு. ஆறுமுகம், சேலம் மாவட்டச் செயலாளர் செ. ஆனையப்பன், திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் பொ. சுப்பிர மணியன், நாகை மாவட்டச் செயலாளர் முத்து. அன்பழகன், பொறிஞர் சிவப்பிரகாசம், காஞ்சி நகரச் செயலாளர் மு. செயப்பிரகாசு, பெங்களூரு நகர அமைப்பாளர் கோ.மு. கறுப்பையா, அறக்கட்டளை வளாகப் பொறுப்பாளர் கு. தொல்காப்பியன், திருக்கழுக்குன்றம் பெரியார் தொண்டர் தி.ச. குணசேகரன் ஆகிய தோழர்கள் பொங்கல் மலர் படியைப் பெற்றனர்.

நீதிபதி து. பரந்தாமன், பொங்கல் மலரை வெளியிட்டு ஆற்றிய உரையில், நீதித்துறையும் மேல்சாதி ஆதிக்கத்திற் கும், இந்துத்துவச் சிந்தனைக்கும் ஆட்பட்டுவரும் அவல நிலை குறித்து விளக்கினார். காந்தியாரைக் கொன்ற கோபால் கோட்சே 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்ததும் விடுதலை செய்யப்பட்டார்; உறுதி செய்யப்படாத குற்றத்தின் பேரில் இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 26 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் விடுதலை செய்யப்படாமல் இருப்பதற்கு இவர்கள் சூத்திரர்களாகவும், தமிழர்களாகவும் இருப்பதுதான் காரணம் என்று கூறினார். பொங்கல் மலரின் முதல் படியைப் பெற்று உரையாற்றிய மாம்பலம் சந்திரசேகர், ஆரியப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து தமிழினத்தை மீட்பதற்கு திருக்குறளின் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று கருத்துரைத்தார்.

புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் மாநிலச் செயலாளர் கவிஞர் தமிழேந்தி, இயலாமைக்கு ஆட்பட்ட உடல்நிலையிலும் தமிழ்த் தேசிய விடுதலை குறித்த தன் கருத்துகளை எழுச்சியான கவிதைகளாக தன் அரிமாக் குரலில் முழங்கினார்.

இதனையடுத்து, சிந்தனையாளன் ஏட்டில் பல ஆண்டு களாக இதழ்தோறும் கட்டுரைகளும் சிறுகதைகளும் எழுதி வருபவரும், சிறந்த பெரியாரிய - மார்க்சிய அறிஞருமான தோழர் இராமியா எழுதிய "புறநானூறு அல்ல - இது புது நானூறு" என்ற நூலை மேனாள் அமைச்சர் திரு. எஸ்.ஆர். இராதா வெளியிட்டார். இராமியா எழுதிய சிறுகதைகள் அடங்கிய புதிய பாடம் எனும் நூலை, கலச. இராமலிங்கம் - கோவி இராமலிங்கம் இணையரின் மகன் கோ.ரா. வெற்றி வெளியிட்டார். இராமியா அவர்களின் சார்பில் கிட்டத்தட்ட நூறு பேர் மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இராமியாவின் நூல்கள் குறித்து எஸ்.ஆர். இராதா உரையாற்றினார்.

பொங்கல் மலர் வெளியீட்டையொட்டி, பொங்கல் மலர், தமிழர் திருநாள், தமிழ்த்தேசிய விடுதலை ஆகியவை குறித்து, தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளர் புலவர் கி.த. பச்சையப்பன், மா.பெ.பொ.க. காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன், வேளாண் அணித் துணைச் செயலாளர் கோ. கோதண்டராமன், அரியலூர் மாவட்டச் செயலாளர் புலவர் இரா. கலியமூர்த்தி, மகளிரணிச் செயலாளர் கோவி இராமலிங்கம், திருச்சி மாவட்ட புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் ந. கருணாகரன், மாணவர் - இளைஞரணித் தோழர் இரா. பகுத்தறிவாளன், மாணவர் - இளைஞர் அணிச் செயலாளர் முனைவர் ஆ. முத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக, பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து உரையாற்றினார். தன்னுடைய உடல்நலக் குறைவு காரண மாகப் பொங்கல் மலர் தொடர்பாக வழக்கம்போல் மாவட்டங் களுக்குச் சென்று கட்சித் தோழர்களை ஊக்குவிக்க முடியாத நிலையில், துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி அப்பொறுப்பை ஏற்று எல்லா மாவட்டங்களுக்கும் சென்று சிறப்பாகச் செயலாற்றியதை வே.ஆனைமுத்து பாராட்டினார். தான் இல்லாவிட்டாலும் பொங்கல் மலர் சிறப்பாக வெளி யிடப்படும் என்பதை மாவட்டச் செயலாளர்களும் மற்ற தோழர்களும் மெய்ப்பித்திருப்பதாக மனமகிழ்ந்து பாராட்டி னார். 2018 செப்டம்பர் மாதம் பெரியார் வாழ்க்கை வரலாறு நூலின் முதல் பாகம் வெளியிடப்படும் என்றும், அதற்கு ஆயிரக்கணக்கில் முன்பதிவு செய்து உதவ வேண்டும் என்றும் வே. ஆனைமுத்து வேண்டுகோள் விடுத்தார்.

முற்பகல் நிகழ்வான சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழாவின் நிறைவாக, வேலூர் நகரச் செயலாளர் மீ. டில்லிபாபு நன்றி கூறினார். அனைவருக்கும் பகல் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிற்பகல் 2.30 மணிக்கு, "உண்மையான இந்தியக் கூட்டாட்சிக் கோரிக்கை மாநாடு" தொடங்கியது. காஞ்சி தோழர் உலக ஒளி, புரட்சிகரப் பாடல்களைப் பாடினார். மா.பெ.பொ.க. தலைமைக்குழு உறுப்பினர் க. முகிலன், கூட்டாட்சி மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர் வரவேற்புரை நிகழ்த்தி னார். தமிழ்நாடு அரசு மேனாள் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் மாநாட்டைத் தொடக்கி வைத்து அறிவார்ந்த உரை நிகழ்த்தினார். கனடா நாட்டில் நிலவும் உண்மையான கூட்டாட்சி முறையைத் தான் நேரில் கண்ட அனுபவத்தை விளக்கினார். மோடி ஆட்சியில் மாநிலங்களிடம் எஞ்சியுள்ள அதிகாரங்களும் பறிக்கப்பட்டு மத்திய ஆட்சியில் குவிக்கப்படும் ஏதேச்சதிகாரப் போக்கு களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பேராசிரியர் நாகநாதன் வலியுறுத்தினார்.

அதன்பின், துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி, துணைப் பொதுச் செயலாளர் தி. துரை சித்தார்த்தன், தொழி லாளரணிச் செயாளர் சா. குப்பன், கடலூர் மாவட்டச் செயலாளர் பா. மோகன், புதுச்சேரி மாநிலச் செயலாளர் இரா. திருநாவுக்கரசு, பெரியார் ஈ.வெ.ரா.-நாகம்மை அறக்கட்டளை செயலாளர் துரை. கலையரசு ஆகியோர் கூட்டாட்சிக் கோரிக்கை குறித்து உரையாற்றினர். கூட்டாட்சி மாநாட்டின் தீர்மானங் களை முனைவர் ஆ. முத்தமிழ்ச்செல்வன் படித்தார்.

மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி சிறப்புரையாற்றினார். பன்னாட்டு நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய உலகமயச் சூழலில் கூட்டாட்சிக் கோரிக்கை குறித்து விரிவாக விவாதிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தில்லியிலிருந்து வருகை தந்த பேராசிரியர் பிரேம் சிங் ஆங்கிலத்தில் சிறப்புரை ஆற்றினார். கூட்டாட்சி என்பது மாநிலங்கள் முற்றதிகாரம் பெறுவதாக மட்டும் இருக்கக் கூடாது. கீழ் மட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் அதிக அதிகாரம் கொண்டவைகளாக இருக்கின்ற நிலையே உண்மையான மக்களாட்சியாகும் என்று அவருடைய உரையில் விளக்கி னார். பேராசிரியர் பிரேம் சிங்கின் ஆங்கில உரையைத் தோழர் இனாமுல் அசன் சுருக்கமாகத் தமிழில் கூறினார்.

தோழர் வே. ஆனைமுத்து நிறைவுரையாற்றினார். தனித்தமிழ்நாடு கோரிக்கை, கூட்டாட்சிக் கோரிக்கை ஆகிய இரண்டு கோட்பாடுகளையும் அவற்றுக்கிடையே உள்ள முரண்பாடுகளையும் விளக்கிப் பேசினார். இறுதியாக, சிந்தனையாளன் அலுவலகப் பொறுப்பாளர் ப. வடிவேலு நன்றி கூறினார்.

**மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தோழர்களின் அயராத முயற்சியால் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழாவும், கூட்டாட்சி மாநாடும் சிறப் பாக நடைபெற்றன.**

07-01-2018, ஞாயிற்றுக் கிழமை அன்று பிற்பகலில்,
சென்னை, மேற்கு மாம்பலம், சந்திரசேகர் திருமண மண்டபத்தில்
மா.பெ.பொ.க. சார்பில் நடைபெற்ற

# உண்மையான இந்தியக் கூட்டாட்சிக் கோரிக்கை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம் 1 :**

இந்தியாவில் 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 126 கோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாய்மொழிகளைப் பேசுகிறார்கள். அவற்றுள் முன்னூறு மொழிகள் வளர்ச்சி பெற்ற மொழிகள். இந்தியாவில் வாழும் மக்கள் பல்வேறு மதங் களையும், கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் கொண்டவர்களாக வாழ்கிறார்கள். இப்படிப் பட்ட இன்றைய இந்தியா 25000 பேர்களால் மட்டுமே பேசப்படுகின்ற சமஸ்கிருதம் கலந்த, "தேவ நாகரி வடிவிலான 40 கோடி மக்களால் பேசப்படுகின்ற இந்தி, இந்திய இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக இருக்கும்" என்று, இந்திய அரசமைப்புச் சட்டவிதி 343(1)இல் எழுதப் பட்டுள்ளது. இது, இந்தியா முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான தாய் மொழிகளைப் பேசுகின்ற இந்தி பேசாத எல்லா மக்களின் உரிமைகளையும் அடியோடு பறிப்பதாகும்.

எனவே, 'இந்திய அரசமைப்புச்சட்டத்தில் உள்ள விதி 343அய் இந்திய அரசும், நாடாளு மன்றமும் உடனடியாக நீக்க வேண்டும் என இம்மாநாடு இந்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 1 (அ) :**

இந்தி எந்த வடிவத்திலும் இந்தி பேசாத மக்கள்மீது திணிக்கப்படக் கூடாது என்று கோரி, இந்தி பேசாத எல்லா மொழி மக்களும் மொழி வேறுபாடு, கட்சி வேறுபாடு இவற்றை மறந்து ஒன்றுபட்டு இந்திய அரசிடம் கோரிக்கை வைத்துத் தொடர்ந்து போராடவேண்டும் என இம்மாநாடு கோருகிறது.

**தீர்மானம் 2 :**

மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 17ஆவது பகுதியில் உள்ள விதி 343 தவிர்த்த, விதி 344 முதல் விதி 351 முடிய உள்ள எல்லா விதிகளும் இந்தி மொழியின் பயன்பாட்டை எல்லாத் துறைகளுக்கும் விரைவுபடுத்துவதையும் இந்தியை வளம் பெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டவை. இந்திய ஒன்றியத்தின் எல்லாத் துறைகளின் பயன்பாட்டிலும் திணிக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளவை. இவை 12-க்கு மேல் உள்ள திராவிட மொழிகள் மற்றும் மராத்தி, குசராத்தி, பஞ்சாபி, ஒடியா, காஷ்மீரி முதலான இந்தியத் தாய்மொழி களையும், பழங்குடிகள் பேசுகின்ற மொழிகளின் உரிமை களையும் புறந்தள்ளிவிட்டு, அம்மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை அடியோடு பறிப்பதாக இருப்பதால், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது பகுதியை அடியோடு உடனே நீக்கிவிட வேண்டும் என இந்திய அரசை இம்மாநாடு கோருகிறது.

**தீர்மானம் 3 :**

இந்திய அரசமைப்புச் சட்டத்திலுள்ள பகுதி 17க்கு மாற்றாக, விதி 343(1) - இந்திய அரசமைப்பின் 8ஆவது அட்டவணையில் விதிகள் 344(1) மற்றும் 351 ஆகிய விதிகளின் "மொழிகள்" என்ற தலைப்பின்கீழ் உள்ள அசாமி, பெங்காலி, போடா, டோகிரி, குசராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, கொங்கணி, மைதிலி, மலையாளம், மணிப்புரி, மராத்தி, நேபாளி, ஒடியா, பஞ்சாபி, சமற்கிருதம், சந்தாலி, சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய 22 மொழிகளையும் இந்திய ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் எல்லாத் துறை அலுவலகங்களிலும் அன்றாட நிர்வாக அலுவல் மொழிகளாகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் பேசப்படும் மொழிகளாகவும், உச்சநீதிமன்ற நடவடிக்கைக்கு ஏற்புடைய மொழிகளாகவும் ஆக்கி, புதிய இந்திய அரசமைப்பு விதிகளை உருவாக்க வேண்டும் என இந்திய அரசையும், எல்லா இந்திய மொழிகளின் மக்களையும், எல்லாக் கட்சிகளையும் இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 3 (அ) :**

அய்க்கிய நாடுகள் அவையில் உறுப்பினர்களாக உள்ள 193 நாடுகளில், சுவிட்சர்லாந்து ஓர் அமைதியான நாடு. அந்நாட்டில் 2016ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 84 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுள், கீழ்க்கண்ட மொழிகளைப் பேசும் மக்கள்:

| | | |
|---|---|---|
| செர்மன் பேசுவோர் | - | 63.66 % |
| பிரெஞ்சு பேசுவோர் | - | 20.37 % |
| இத்தாலியன் பேசுவோர் | - | 6.46 % |
| அல்பேனியன் பேசுவோர் | - | 1.3 % |
| போர்ச்சுகீசு பேசுவோர் | - | 1.23 % |
| ஸ்பானிஷ் பேசுவோர் | - | 1.05 % |
| ரோமன்ஸ் பேசுவோர் | - | 0.48 % |

வாழ்கிறார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் இரண்டாவது பகுதியான கூட்டாட்சியின் அதிகாரமய்யங்கள் என்பதை அடுத்து "அரசியல் சட்ட மறுஆய்வு செய்தல்" அடுத்த

உள்ள பாகம் 5இன் கீழ் உள்ள இரண்டு விதிகள் குறிப்பிட்டத்தக்கவை. விதி 16 - மொழிகள் : செர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ரொமன்ஸ் ஆகிய நான்கு மொழிகள் சுவிட்சர்லாந்தின் தேசிய மொழிகள் (National Languages) என அழைக்கப்படுகின்றன.

விதி 117 - மொழிகள் : செர்மன், பிரெஞ்சு,இத்தாலியன் ஆகிய மூன்று மொழிகள் கூட்டாசியின் அலுவல் மொழிகள் (Official Languages) பின் பற்றத்தக்க உறுதி செய்ய என அறிவிக்கப் பட்டுள்ளன. இவை எல்லா இந்தியர்களும் அறியத்தக்கவை; சிந்திக்கத் தக்கவை.

**தீர்மானம் 4 :**

"இந்திய ஒன்றியம்" என்கிற பேரால் இயங்கும் இந்திய அரசின்கீழ் இந்திய அரசமைப்புச் சட்டப்படி, ஒன்றிய அரசு அதிகாரப் பட்டியல், மாநில அரசு அதிகாரப் பட்டியல், இந்திய அரசுக்கும் - மாநில அரசுக்கும் உள்ள பொதுவான அதிகாரப் பட்டியல் எனத் தொடக்கத்தில் மூன்று பிரிவுகளாப் பிரிக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த 1950 முதல் இன்று வரையிலான 68 ஆண்டுகளுக்குள் ஏறக்குறைய 105 அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1975-1976ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 42ஆம் அரசியல் சட்டத் திருத்தம், 1919ஆம் ஆண்டு முதல் மாகாணங்களுக்கும் மாநிலங்களுக்கும் இருந்த பல துறை அதிகாரங்களை அடியோடு பறித்துவிட்டது. குறிப்பாக, கல்வித்துறை அதிகாரம், பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது. இது மாபெரும் கொடுமை யாகும். எனவே, இப்படி மாநிலங்களின் அதி காரங்களைப் பறிக்கும் அதிகாரப் பகிர்வு முறையை அடியோடு மாற்றி, உண்மையான கூட் டாட்சியாக - கூட்டாட்சி முறை ஆட்சியாக (Confederation of India) மாற்றிட, இந்திய அரசும் இன்றைய ஆளும் கட்சியான பாரதிய சனதாக் கட்சியும், மற்றெல்லாத் தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும், இந்தக் கோரிக்கையை ஒரு முகமாகத் தூக்கிப்பிடிக்க வேண்டும் என, இம்மாநாடு கோருகிறது.

**தீர்மானம் 4 (அ) :**

உண்மையான கூட்டாட்சி என்பது, 1947ஆம் ஆண்டு காங்கிரசினாலும் முஸ்லிம் லீக்கினாலும் இந்தியக் கூட்டாட்சியின் மத்திய அரசிடம் முன்மொழியப்பட்டது.

1. பாதுகாப்புத் துறை (Defence)
2. பணத்தாள், நாணயம் அச்சிடல் துறை (Currency)
3. அயலுறவுத் துறை (External Affairs)

ஆகிய மூன்று துறைகள் தவிர்த்த மற்ற எல்லாத் துறை அதிகாரங்களும், எஞ்சிய அதிகாரங் களும் இந்தியக் கூட்டாட்சி அரசின் உறுப்புகளாக விளங்கும் மொழி வழிப்பட்ட - முழுத் தன்னாட்சி பெற்ற மாநில அரசுகளுக்கே (Full Autonomous States) வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு இந்திய மக்களையும் இந்திய அரசையும் வற்புறுத்திக் கோருகிறது.

**தீர்மானம் 4 (ஆ) :**

மேலே கண்ட தன்மையிலான கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்று, கூட்டாட்சி உறுப்புகளான மொழிவழி முழுத் தன்னாட்சி மாநிலங்களுக்கு, கூட்டாட்சி அரசமைப்புக்குக் கட்டுப்பட்டு இயங்கும் தனித்தனி அரசமைப்புச் சட்டமும், தனித்தனித் தேசியக் கொடியும் இருக்க உரிமையுள்ள உண்மையான இந்தியக் கூட்டாட்சிக்கான அரசமைப்புச் சட்டத்தை இயற்றிட எல்லோரும் முன்வர வேண்டும் என்றும், இன்றைய பாரதிய சனதாக் கட்சி அரசும் மற்றும் எல்லா மாநில அரசுகளும் இவற்றை நிறைவேற்ற வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறோம்.

07-01-2018 **வே. ஆனைமுத்து**

பொதுச்செயலாளர், மா.பெ.பொ.க

## கன்னியாகுமரியில் “அனைவருக்கும் இல்லம்” கட்டடம் திறப்பு விழா

கன்னியாகுமரியில் “அமைதி இல்லத்தில்” கொடிக் கால் ஷேக் அப்துல்லா தலைமையில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 23.1.2018 அன்று இந்நிகழ்ச்சியில் “அனைவருக்கும் இல்லம்” (Subka-Gar) என்ற கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. இந்த விழாவில் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி கலந்து கொண்டார்.

கன்னியாகுமரி கடற்கரையில் கோவளம் சாலை யில் பேருந்து நிலையம் அருகில் உள்ள “அமைதி இல்லத்தின்” பெரும் பகுதி இடத்தை “சமூக நல்லி ணக்க முன்னணி”க்காக - அதன் தலைமையிட மாகச் செயல்படுவதற்காக கொடிக்கால் ஷேக் அப்துல்லா நன்கொடையாக வழங்கினார். கொடிக் கால் ஷேக் அவர்களின் உயர்ந்த செயலைப் பாராட் டிப் பலரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய சி. பெரியசாமி, மனித குலத்தின் ஒற்றுமைக்கு - வளர்ச்சிக்கு மதம் என்ற அமைப்பே தேவையில்லை என்றும், அந்த நிலை வருவதற்கு முன்னோடியாக இந்தச் “சமூக நல்லிணக்க முன்னணி பாடுபட வேண்டும்” என்றும் பேசினார். மேலும் “மானிட சமுத்திரம் நானென்று கூவு; பிரிவில்லை எங்கும் பேதமில்லை” என்கிற சுப்புரத்தினத்தின் கவிதையையும், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்கிற வள்ளுவரின் வாக் கையும் விளக்கி உரையாற்றினார்.

## சென்னை, மேற்கு மாம்பலம், சந்திரசேகர் திருமண மண்டபத்தில் பொங்கல் மலர் வெளியீடு மற்றும் கூட்டாட்சி மாநாட்டுப் படங்கள்



மலர் வெளியீடு – வாலாசா வல்லவன் தலைமையுரை



வரவேற்புரை தாம்பரம் மா. சுப்பிரமணி



நீதிபதி அரிபரந்தாமன் மலரை வெளியிட
மாம்பலம் ஆ. சந்திரசேகர் முதல்படியைப் பெறல்



ஆ.கு.ஆறுமுகம் மலர் பெறல்



பொ.சுப்பிரமணியன் மலர் பெறல்




செ. ஆனையப்பன் மலர் பெறல்



தி.ச. குணசேகரன் மலர் பெறல்



கோ.மு.கறுப்பையா மலர் பெறல்



கு. தொல்காப்பியன் மலர் பெறல்



மு.செயப்பிரகாசு மலர் பெறல்



அ.மதிவாணன் மலர் பெறல்



மலரை வெளியிட்டு உரை : நீதிபதி து. அரிபரந்தாமன்



முதல்படி பெற்ற மாம்பலம் ஆ. சந்திரசேகர் உரை



பாவீச்சு – கவிஞர் தமிழேந்தி



புலவர் கி.த.பச்சையப்பன் உரை




ஆ.முத்தமிழ்ச்செல்வன் உரை



புலவர் இரா.கலியமூர்த்தி உரை



இரா. பகுத்தறிவாளன் உரை



ந.கருணாகரன் உரை



கோவிராமலிங்கம் உரை



சி.நடராசன் உரை



கோ.கோதண்டராமன் உரை



மீ.டில்லிபாபு நன்றி உரை



பகல் உணவு இடைவேளை

# கூட்டாட்சி மாநாடு



வரவேற்புரை : மோ.சி.சங்கர்



கூட்டாட்சி மாநாட்டு மேடையில் கருத்தாளர்கள்



தலைமை உரை : க.முகிலன்



மாநாட்டுத் தொடக்க உரை : பேராசிரியர் மு.நாகநாதன்




சி.பெரியசாமி உரை



தி.துரைசித்தார்த்தன் உரை



சா.குப்பன் உரை



இரா.திருநாவுக்கரசு உரை



துரை.கலையரசு உரை




பா.மோகன் உரை



மாநாட்டுத் தீர்மானங்கள் படித்தல் : ஆ.முத்தமிழ்ச்செல்வன்





சிறப்புரை திருமுருகன் காந்தி




பேரா. பிரேம்சிங் அவர்களுக்குக் கட்சியின் ஆங்கில நூல்களை
சி.பெரியசாமி வழங்கல்



பேரா.பிரேம்சிங் சிறப்புரை



நிறைவுரை வே.ஆனைமுத்து



நன்றிஉரை ப.வடிவேலு



பார்வையாளர்கள்



கட்சியின் நூல்கள் விற்பனை

# வைரமுத்துகளுக்கு எச்சரிக்கை

- இராமியா

தருண் விஜய் என்ற பா.ச.க. தலைவர் ஒருவர் திருக்குறளின் மேல் ஆர்வம் கெண்டு அதன் அருமை பெருமைகளைப் பரப்புரை செய்து வருகிறார். அப்படிச் செய்வதன் மூலம் தமிழக மக்களைக் காவி வட்டத் திற்குள் இழுத்துப் போகவும் கடுமையாக முயல்கிறார். ‘‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்’’ என்ற திருக்குறளின் உயிருக்கு நிகரான கருத்தைப் புறந்தள்ளி விட்டு, அதற்கு நேர் எதிரான வர்ணாசிரம அதர்மத்தை வலுப்படுத்த முனையும் அவரது நோக்கத்தைத் தமிழக மக்கள் பலர் புரிந்து கொண்டு உள்ளனர். ஆனால் ஆளும் வர்க் கத்தை அனுசரித்துப் போனால் ஆதாயம் கிடைக்கும் என்று நம்பும் சிலர், அவருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்கவும் செய்தனர். அப்படிப்பட்டவர்களுள் வைரமுத்துவும் ஒருவர்.

வைரமுத்து அத்துடன் நிற்கவில்லை. காவிகளை மேலும் மேலும் புகழ்வதன் மூலம் தனக்குப் பேரும் புகழும் கூடும் என நினைத்தார். மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்களை "நட்டு வைத்த வேலுக்குப் பொட்டு வைத்தது போல் நிமிர்ந்து நிற்கிறார்" என்று புகழ்ந்து தள்ளினார். அதன் தொடர்ச்சியாக வைரமுத்து வுக்கு ஞான பீட விருது கிடைக்கும் என்பது போன்ற ஊகம் கசியத் தொடங்கியது. பின் பிரதமர் நரேந்திர மோடியையும் அவரது ஆளுமையையும் புகழ்ந்தார். ஞான பீட விருது என்று கசிந்த ஊகம் நீர்த்தாரை வடிவம் பெறத் தொடங்கியது. ஆனால் செய்தியாக உருவெடுக்க வில்லை.

இந்திய ஆளும் வர்க்கமாகிய பார்ப்பனர்கள் புகழ்ச்சி யை மட்டும் ஏற்றுக் கெண்டு எந்தவிதமான பிரதி பலனையும் அவ்வளவு எளிதாக வழங்கிவிட மாட்டார்கள். அவாளுக்கு வேண்டியது எல்லாம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் ஒற்றுமை இன்மையும், அடிமைப் புத்தியும், காட்டிக் கொடுக்கும் தன்மையும் தான். இந்தத் திசையில் செல்வோரைத் தான் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வார்கள். இதைப் புரிந்து கொண்ட ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்கள் பலர் அத்திசை வழியில் சென்று "பலனை" அடைந்து இருக் கிறார்கள்.

தருண் விஜயை வரவேற்று, தமிழக மக்களி டையே ஒற்றுமை இன்மைக்கு ஆதரவு தெரிவித்தாகி விட்டது. மக்கள் நலனுக்கு எதிரான நோக்கம் கொண்டு மட்டும் அல்ல; அதைச் செயல்படுத்துவதில் நிர்வாகத் திறமையும் இல்லாத மோடியைப் புகழ்ந்து தள்ளி அடிமைப் புத்தியைக் காட்டியாகிவிட்டது. இன்னும் ஞான பீட விருது ஊகமாகத் தானே இருக்கிறது? எப்பொழுது செய்தியாக மலரும்? ஆழ்ந்து சிந்தித்த கவிஞருக்கு அவாளுக்கு மிகவும் பிடித்த காட்டிக் கொடுக்கும் செயலைச் செய்யவில்லையே? அதனால் தான் சுணங்குகிறதோ? என்று தோன்றியது போலும். அதையும் செய்து விடலாம் என்று முடிவெடுத்தார்.


எங்கே (இண்டியானா பல்கலைக் கழகத்தில்)-யாரோ? (சுபாஷ் சந்திர மாலிக் என்பவர்), ‘‘ஆண்டாள் தேவதாசியாக இருந்தார்’’ என்று எழுதியதைச் சுட்டிக் காட்டினார். அதன் மூலம் "ஆண்டாளைப் பற்றி இப்படிக் கூறியது யார்? அவனைச் சும்மா விட்டு விடக் கூடாது" என்றெல்லாம் பார்ப்பனர்கள் வெகுண்டு எழுவார்கள் என்று எதிர்பார்த் தார். அவ்வாறு தங்களுக்குத் தெரியாத ஒரு சனாதன "எதிரியைக்" காட்டிக் கொடுத்ததற்குப் பரிசாக ஞான பீட விருது எனும் கனவு உண்மை உருவம் பெறும் என்றும் எதிர்பார்த்தார் போலும். ஆனால் அவாளை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொண்டு விட முடியுமா? அவாளின் ஒரே இலக்கு பராசர ஸ்மிருதியில் 8வது அத்தியாயத்தில் 25வது ஸ்லோகத்தில் கூறி உள்ளபடி "பிராமணன் இழிந்தவனாக இருந்தாலும் வழிபடத் தக்கவன்; சூத்திரன் உயரிய நற்குணங்கள் உருவெடுத்தவனாக இருந் தாலும் உயர்நிலைக்கு வரத் தகாதவன்." என்பதுதான். சமூகத்தை இத்திசையில் நகர்த்திச் செல்லவே அவாள் விரும்புகின்றனர். வைரமுத்து காட்டிக் கொடுக்கும் சுபாஷ் சந்திர மாலிக் மீது பாய்வதால் சமூகத்தை இந்தத் திசையில் நகர்த்திச் செல்ல முடியுமா? அதற்குப் பதிலாக "ஆண்டாளை அவமதித்து விட்டார்" என்று வைரமுத்து மீது பாய்ந்து, தமிழ் நாட்டில் பெரும் சர்ச்சையைக் கிளப்பினால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களிடையே இந்து மத வெறி உணர்வை வளர்க்கலாம். அதன் மூலம் பராசர ஸ்மிருதி சொல்லும் சமூக அமைப்பை நோக்கி நகர்த்தலாம். இவற்றை எல்லாம் கணக்கிட்டுத்தான் வைரமுத்து மீது பாய்ந்து இருக்கிறார்கள். அதிலும் ஆண்டாளை அவமதிக்கும் எண்ணம் தனக்குச் சிறிதும் இல்லை என்றும், தன்னுடைய உரை முழுமையிலும் ஆண்டாளைப் புகழ்ந்தே இருப்பதாகக் கூறியதுடன் மட்டும் நிற்காமல், தன்னுடைய உரையால் யார் மனதாவது புண்பட்டு இருந்தால் அதற்காக வருந்து வதாகக் கூறிய பின்னும் சர்ச்சையைப் பெரிது படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

வைரமுத்துவின் ஞான பீட விருதுக் கனவு தகர்ந்து போய்விட்டது. தான் ஆரத்தி எடுத்து வரவேற்ற தருண் விஜய், நட்டு வைத்த வேலுக்குப் பொட்டு வைத்தாற் போல் எனப் புகழ்ந்து தள்ளிய நிர்மலாத் சீதாராமன், இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்த மோடி யாருமே வைரமுத்து வுக்குத் துணைவரவில்லை. வைரமுத்துவைப் போல் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில் பலர் இருக்கிறார்கள். காவிகளுக்கு அனுசரணையக நடந்து கொள்வதன் மூலம் ஏதாவது பலனை அடையலாம் என்ற நப்பாசை அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது. அவாளைப் பொறுத்த மட்டில் பராசர ஸ்மிருதியில் சொல்லப்பட்டு உள்ள நோக்கத்தில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். சமூகத்தை அதை நோக்கி உறுதியாக நகர்த்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் அதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், இரண்டு மூன்று தலைமுறை களுக்குப் பின் வர்ணாசிரம அதர்மம் வெளிப்படை யாகவே சட்டமாகி விடும். நம் எதிர்காலத் தலைமுறை யினர் நாம் இது வரையிலும் போராடிப் பெற்று இருக்கும் உரிமைகளைப் பறிகொடுத்து விட்டு, அடிமைச் சேவக வேலைகளைச் செய்ய வேண்டி வரும். அப்படி இல்லாமல், மகாத்மா புலே, தந்தை பெரியார், மேதை அம்பேத்கர் அரும்பாடுபட்டு ஈட்டிக் கொடுத்த உரிமை களை முழுமையாகப் பெற வேண்டும்; நமது எதிர்காலத் தலைமுறையினர் அவாளுக்கு அடிமைகளாகி விடக் கூடாது என விரும்பும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் அனைவரும் அவாள் முன்னெடுக்கும் சர்ச்சையில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே! அனைத்து வகுப்பு மக்களிலும் அனைத்து நிலைத் திறமை உடையவர் களும் இருக்கிறார்கள் என்பது மாற்ற முடியாத இயற்கை நியதி. அதன்படி கல்வி, வேலைவாய்ப்பு, பிற சமூக நடவடிக்கைகளில் அனைத்து வகுப்பு மக்களும் அனைத்து நிலைகளிலும் பங்கு பெற்று இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் பொதுப் போட்டி முறையில் சூது நிறைந்து உள்ளது என்று புரிகிறது அல்லவா? இதை மாற்றி இயற்கை நியதிப்படி அனைத்து வகுப்பு மக்களும் அனைத்து நிலை வேலைகளிலும் பங்கு பெறும் விதமாக விகிதாச்சாரப் பங்கீடு முறையைச் செயல்படுத்த வேண்டும் என்ற இலக்கை நோக்கி அல்லவா நமது போராட்டம் இருக்க வேண்டும்? அதை விடுத்து நம்மை திசை திருப்பும் (ஆண்டாள் சர்ச்சை உட்பட) பிற சர்ச்சைகள் தேவையா?

**ஆண்டாள் சர்ச்சை வைரமுத்துவுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை அல்ல. உண்மையில் அது வைரமுத்து களுக்கு அதாவது காவிகளுக்கு அனுசரணையாக நடந்து கொள்ள விரும்பும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் அனைவருக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை.**

## பெரம்பலூர் மாவட்டம், அ.மேட்டூர் மே.இரா. சின்னசாமி வயது (94) மறைவு



70 ஆண்டுகளுக்கு முன்னர் தந்தை பெரியார் தலை மையை ஏற்று, சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டுத் தொண்டாற்றியவர். 1950 ஏப்ரல் 2இல் குன்னத்தில் நடை பெற்ற பெரம்பலூர் வட்ட தி.க. மாநாடு குன்னம் ந. கணபதி ஆசிரியர், திரு. வே.ஆனைமுத்து, மே.இரா. சின்ன சாமி இவர்களின் முயற்சியால் பெரும் பெற்றி மாநாடாக நடைபெற்றது. இம்மாநாட்டில் தான் வே.ஆனைமுத்து அவர்கள் முதன்முதலாக தந்தை பெரியார் அவர்கள் முன்னிலையில் பேசினார் என்பது குறிப்பிடத் தக்கது. இம்மாநாட்டை ந.கணபதி ஆசிரியர் அவர்கள் முன்னின்று சிறப்பாக நடத்தியமையால் தந்தை பெரியார் அவர்கள் கணபதி ஆசிரியரைப் பார்க்கும் வேளையில் “வாங்க குன்னம்” என்றே அழைப்பார். முன்னாள் அமைச்சர் கக்கன் இவரது நெருங்கிய நண்பர். இவர் ஒரு அறக்கட்டளையை நிறுவி அரும்பாவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களில் முதல் மூன்று இடம் பெறும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இவரது குடும்பத்தார் பரிசு வழங்குகிறார்கள். சிந்தனையாளன் வளர்ச்சியில் நாட்டம் கொண்டவர். சட்ட எரிப்பு போராட் டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு அன்றே விடுவிக்கப் பட்டார். இவரது இளவல் மே. இரா. வெங்கடாசலம் சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒன்றரையாண்டு கடுங் காவல் பெற்றார். சிறை மீண்ட வீரர்களைப் பாராட்டி, அ.மேட்டூரில் தந்தை பெரியார், வே.ஆனைமுத்து இவர் களை அழைத்து 1962இல் ஒரு பெரும் மாநாட்டை நடத்தியவர்.

இவர் தம் 94ஆம் அகவையில் 31.12.2017இல் மறைந்தார். இவருக்கு மூன்று மகன்களும், ஏழு மகள் களும் உள்ளனர். இவரது துணைவியார் சில ஆண்டு களுக்கு முன்னர் மறைவுற்றார். இவரது மக்கள், சுதந்திரன், பி.எஸ்ஸி (வேளாண்மை), பாண்டியன், இரவீந்திரன், இன்னமுது ஆகியோர் உள்ளனர். இம்மக்கள் ஆதரவுடன் நன்முறையில் இருந்தார்.

இவரது மறைவு செய்தியறிந்து பூலாம்பாடி கு. வரதராசன், விவசாயச் சங்கத் தலைவர் ஆர். இராசா சிதம்பரம், கரும்பு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ந.ப. அன்பழகன், எல்.வி. நீலகண்டன் மற்றும் திரளான விவசாய சங்கத்தினரும், பொது மக்களும் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

செய்தி : பூலாம்பாடி **கு. வரதராசன்**

கட்டுரைத் தொடர்-57

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1940 ஆகஸ்டு 24, 25 தேதிகளில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் தந்தை பெரியார் ஆற்றிய தலைமையுரையின் இறுதிப் பகுதி.

**இந்து-முஸ்லிம் ஒற்றுமை**

திராவிட நாட்டில் திராவிடர்களிலிருந்து திராவிட சமயத்தவர்கள் என்பவர்கள் நீங்கலாக, முஸ்லிம்கள் என்னும் பேரால் ஒருபெரும் எண்ணிக்கையுள்ள சமூக மக்கள் இருக்கிறார்கள் என்பது யாவரும் உணர்ந்ததே யாகும். அவர்கள் பெரும்பாலோர் உண்மையில் திராவிடர் களாகவே இருந்து சமயக்கொள்கைகள் காரணமாகவே வேறுபட்ட மக்களாக இதுவரை கருதிக்கொண்டிருக்க நேர்ந்தது. இப்போதும் இப்படிப்பட்ட வேறுபட்ட எண்ணத் திற்கு இந்துமதக் கொள்கைகள் தான் காரணமேயொழிய உண்மையில் சமயத்தின் பேரால்கூட முஸ்லிம்களுக்கும் மற்ற திராவிடர்களுக்கும் பெரியதான வித்தியாசம் ஒன்று மில்லை என்பதை நாளுக்கு நாள் உணர்ந்து வருகிறோம். இது விஷயத்தில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய இரகசியமும் எதிரிகளின் சூழ்ச்சிகளும் பல இருக்கின்றன. என்னவெனில் வடநாடுகள் பலவற்றில் இந்துக்கள் என்ப வர்களை விட முஸ்லிம்கள் எண்ணிக்கை அதிகமாகவும் குறிப்பிடத் தகுந்தபடியும் இருக்கின்றது. அவர்களில் பலர் செல்வவான்களாகவும் ஜமீன்தார்களாகவும் ராஜாக்களாகவும் இருக்கின்றார்கள். திராவிட நாட்டில் எப்படி ஆரியர்களைவிட திராவிடர்கள் எத்தனையோ மடங்கு அதிகமிருந்தாலும் சமய சமுதாய அரசியல் முதலியவற்றில் ஆரியர்களுக்கு நாம் அடிமையாக்கப்பட்டுவிட்டோமோ அதேபோல் வடநாட்டு முஸ்லிம்கள் எண்ணிக்கையில் அதிகமிருந்தாலும் ஆரியர் களுக்கு அடிமைப்படுத்திவிட வேண்டுமென்பது ஆரியர் முயற்சி. அம்முயற்சி அந்நாடுகளில் சரிவர பலிக்காததால் அவர்கள் பல வேஷங்கள் போட்டுக்கொண்டு அதாவது “இந்திய தேசியம்” என்றும், “இந்துமகாசபை” என்றும் சொல்லிக் கொண்டு நம் நாட்டுக்கு வந்து இங்கு இந்து முஸ்லிம் கலவரத்தை உண்டாக்கிப் பிரித்து தங்களுக்குப் பலம் தேடிக்கொள்ள முயற்சிக்கிறார்கள்.

வடநாட்டில் ஆரியர்கள் முஸ்லிம்களை மிக்க கேவல மாகவும் கொடுமையாகவும் கருதுகிற மாதிரி நம் நாட்டில் கருதப்படாமையே இங்கு இந்து முஸ்லிம் பேதம் ஏற்படாமல் ஒற்றுமை வளர்ந்து வருகிறது. ஆதலால் ஆரியர்கள் வட நாட்டார் நன்மைக்கு ஆக இந்நாட்டில் செய்யப்படும் இந்து மகாசபை விஷமப் பிரசாரத்திற்கு நாம் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.



இந்நாட்டில் இந்து முஸ்லிம் பிணக்கு ஏற்பட்டால் ஆரியருக்கு நன்மையும் திராவிடருக்குத் தீமையுமான காரிய முமாகும். இந்த விஷயங்கள் எல் லாம் நம்மவர்கள் அறிந்திருப்பதா லேயே இந்நாட்டில் நம் இரு கூட்டத் தாரிடையும் உள்ள வேற்றுமைகள் ஒழிந்து மேலே குறிப்பிட்டது போல் நாளுக்கு நாள் ஒற்றுமை அதிகரித்துக் கொண்டே வரப் படுகிறது. இது ஒரு நற்குறியேயானாலும் இனியும் மேலும் மேலும் இந்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் அத்தனை பேரும் தங்களைத் திராவிடர்கள் என்று உணர்ந்து முஸ்லிம் அல்லாத திராவிடர்கள் அத்தனை பேரும் முஸ்லிம்களை தங்கள் இனத்தவர் என்றே உணர்ந்து இரு வகுப்பாரும் முன்னேற்ற மடையவும் இரு வகுப்பாரின் எதிரிகளை எதிர்த்து நிற்கவும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டுமென்பது எனது ஆசையும் வேண்டுகோளுமாகும். இதற்கு முஸ்லிம்களின் ஒப்பற்ற ஏக தலைவரான ஜனாப் ஜின்னா அவர்களும் மனப்பூர்த்தியாக ஆதரவு அளித்து இருக்கிறார்கள் என்பதை இச்சமயத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திராவிடர் - ஆதிதிராவிடர்**

நம் நாட்டில் திராவிட மக்களுக்குள்ளாகவே திராவிடர் - ஆதிதிராவிடர் என்கின்ற ஒரு பிரிவு இருக்கிறது என்பதோடு ஆதிதிராவிட சமூகம் மிகப்பெரும் எண்ணிக்கை கொண்ட மக்களைக் கொண்ட சமூகமாக இருந்து வருகிறது. திராவிட நாட்டில் எப்படி வெளியிலிருந்து வந்த ஆரியர்களுக்கு திராவிட மக்கள் தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்களோ, அப்படி திராவிடர்களுக்கு ஆதிதிராவிடர்கள் அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த நிலைமை திராவிட சமுதாயத்துக்கே ஒரு பெரும் மானக்கேடான நிலைமையாகும் என்பதோடு திராவிடர்களை ஆரியர்கள் தீண்டப்படாத மக்களென்று வகுத்திருப்பதையும் நத்துவதை யும் அரண் செய்கிறது. ஆகையால் ஆதிதிராவிடர் என்கின்ற பெயரே மாற்றப்பட்டு இருவரும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் என்கின்ற பெயராலேயே வழங்கப்பட வேண்டு மென்பதும் திராவிடருக்கும் ஆதிதிராவிடருக்கும் சமுதாயத் துறையிலுள்ள எல்லா வித்தியாசங்களும் பேதங்களும் ஒழிந்து ஒரே சமூகமாக ஆகவேண்டும் என்பதும் எனது ஆசை. இந்த ஒரு நோக்கமும் ஜஸ்டிஸ் கட்சியின் நோக்கங் களில் பட்டதென்பது எனது அபிப்பிராயமாதலால் கட்சியின் பேரால் இவற்றைச் சொல்லுகிறேன்.

உத்தியோகம் கல்வி முதலிய விஷயங்களில், ஆதித் திராவிடர் என்பவர்களுக்குத் தனி சலுகை காட்டி, சீக்கிரத்தில் நம்மோடு சரிசமத்துவம் அடையும்படியான நிலைமை ஏற்படுத்த வேண்டியது நம் கட்சியின் தனிப்பட்ட கடமைகளில் ஒன்று என்பதையும் இச்சமயத்தில் வலியுறுத்த ஆசைப் படுகிறேன்.

**கிறிஸ்தவர்கள்**

இந்நாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள் எல்லோருமே திராவிடர் களேயானதால், அவர்களும் எந்தக் காரணத்தைக் கொண்டும் நம்மைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. திராவிட மக்களும் கிறிஸ்தவர்களைச் சமயம் காரணமாகத் தாழ்ந்தவர்கள் என்று கருதுவதும் அறிவுடைமையாகாது. ஆதலால் அவர்களுடைய பூரண ஒத்துழைப்பையும் நேசத் தையும் பெறவேண்டியதும் நம் கட்சியின் கடமையாகும்.

**தொழிலாளர்கள்**

நம் இயக்கமே தொழிலாளர் இயக்கமானதாகும். ஏனெனில் திராவிடர்கள் எல்லோருமே தொழிலாளர் என்கின்ற ‘‘சூத்திர’’ வகுப்பில் சேர்க்கப்பட்டிருப்பதால் அதி லிருந்து விலகிக் கொள்ளவே நாம் முயற்சி செய்கிறோம். மற்றும் மேலே கண்ட எனது சில அபிப்பிரயாங்களால் நான் தொழிலாளிகளுக்கென்று ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை யானாலும், நமது திட்டத்தில், தொழிலாளர்களுக்கென சில விதிகள் வகுக்கப்பட்டுமிருக்கின்றன.

**பெண்கள்**

திராவிடப் பெண்மணிகள் ஒரு காலத்தில் உலகத்தில் உள்ள பெண்களுக்கெல்லாம் மேம்பட்ட நிலையில் இருந்து வந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் இன்று வெறும் இயந்திரங்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலைமாறி ஆண்களைப் போன்ற சகல உரிமைகளும் பெற்று மேம் பாடடைய நாம் பாடுபட வேண்டும். அதற்கு தாய்மார்களும் துணிந்து வெளியில் வந்து தக்கபடி தொண்டாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

தோழர்களே! அதிக நேரம் பேசி விட்டேன். இவ்வளவு நேரம் பொறுமையாய் எனது வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்ததற்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# 27ஆம் ஆண்டாக முன்னாள் மாணவர் ப. வடிவேலு சிறுநாத்தூர் ஊ.ஒ.ந.நி. பள்ளியில் பரிசளிப்பு

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் வட்டம், சிறுநாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு, பொங்கல் விழா, மூலிகைக் கண்காட்சி, குடியரசு நாள் என முப்பெரும் விழா 26.01.2018 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமை ஆசிரியர் பா. வேலு தலைமை தாங்கினார். கள விளம்பரத்துறை தகவல் ஒலிபரப்பு அமைச் சகம், வேலூர் உதவியாளர் மு. ஜெய்கணேஷ் வரவேற் புரையாற்றினார். இந்திய அரசு கள விளம்பரத் துறை தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல இயக்குநர் எம். அண்ணாதுரை, இ.ஆ.ப. அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி விழாப் பேருரையையாற்றினார். மேலும் சென்னை இம்காப்ஸ் இயக்குநர் டாக்டர் கே.பி. அர்ச்சுனன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த மூலிகைக் கண்காட்சியையும் ஆவணப் படக்காட்சியையும் திறந்து வைத்துப் பார்வை யிட்டார்.

முன்னாள் மாணவர் ப. வடிவேலு, 27ஆம் ஆண்டாக வும் தமிழரசன் 6ஆவது ஆண்டாகவும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்க பரிசுப் பொருள்களும் புத்தகங்களும் திரு. எம். அண்ணாதுரை மண்டல இயக்குநர் மூலம் வழங்கப்பட்டன. மேலும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நினைவுப் பரிசாகக் கோ.இரா. வெற்றியின் ‘‘பிறப்புரிமையும் அதன் தடைகளும்’’ என்ற தலைப்பில் தந்தை பெரியார் 29.12.1926இல் கோவையில் ஆற்றிய உரையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூலை அளித்தும் மற்றும் சால்வைகளை அணிவித்தும் சிறப்பிக்கப்



பட்டது. இளம்தளிர் இயக்கத்தினர் மரக்கன்றுகளும் ஊர் இளைஞர் சங்கத்தினர் குறிப்பேடுகளையும் புத்தகங்களை யும் வேலூர் கள விளம்பரத் துறையினர் சாவிக்கொத்தும் அனைத்து மாணவர்களுக்கும் கொடுத்து ஊக்குவித்தனர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், பேச்சுப் போட்டி களும் சிறப்பாக நடைபெற்றன. முன்னாள் மாணவர் ப. வடிவேலு மற்றும் கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் வே. ஸ்ரீராமுலு சிறப்புரைக்குப் பின் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய தமிழாசிரியர் சி.அ. முருகன் இறுதியாக நன்றி யுரையாற்றினார். மா.பெ.பொ.க. சார்பில் தோழர்கள் கோ. கோதண்டராமன், பாவலர் வையவன், சு. காளியப்பன், சீ. சுகுணா வடிவேலு, வே. கர்ணன், க. சுந்தரம், ப. கிருஷ்ணன் மற்றும் ஊர் மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இனிப்பும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

செய்தி : ப.சு. காளியப்பன்

# வாளோடு......மூத்தகுடி

- பாவலர் வையவன்



கல்லோடும் மண்ணோடும்
காட்டு விலங்கோடும் தோன்றிய குடி
தொல்பழங்குடி

இயற்கையின் படைப்பை
இன்னும் அடையாளம்
காட்டிக்கொண்டிருப்பவர்கள்
இவர்கள்

நகர நாகரிகத்தை
நமக்குக் கையளித்துவிட்டு
மனித நாகரிகத்திலிருந்து
மாறாதிருப்பவர்கள்

உணவு, உடை, இருப்பிடத்தின்
எல்லாப் பரிணாமங்களும்
உதிரம் பாய்ச்சி
இவர்கள் வளர்த்தவை

அரசியல், ஆன்மிகம், விஞ்ஞானம்
எனும் எல்லா நஞ்சுகளுக்கும்
எப்போதும் 'முதல்பலி'
பழங்குடிகளே

தொழில், பொருளாதார வளர்ச்சிகளின்
முதல் பேரிடி
இவர்கள் தலையில்தான் விழும்

இராணுவம் குறித்தும்
காவல்துறை குறித்தும்
மக்களைவிட அதிகமாய்
மலைவாசிகளுக்கே தெரியும்

பூத்துக்குலுங்கும் சுதந்தர நாடுகளில்
பூச்சிகளிவிடச் சுருங்கிக் கிடக்கிறார்கள்
பூர்விகக் குடிகள்

கல்வி, மின்சாரம் எதுவுமின்றி
ஆயிரமாயிரமாண்டுக் காலமாய்
மலைகளிலும் காடுகளிலும் வசிக்கும்
இவர்களுக்கு...
அடிக்கடி அரசாங்கம் வைக்கும் பெயர்
"மாவோயிஸ்டுகள்" "நக்சலைட்டுகள்"
"தீவிரவாதிகள்"

கடவுள்கள் இப்போது
காடுகளுக்குள்ளும்
நுழையத் தொடங்கிவிட்டார்கள்

கார்ப்பரேட் வணிகர்களுக்கும்
சாமிகளுக்கும்
காடுகளில் கிடைக்கிறது
கைநிறைய வரம்

தொடர்ந்து
வன்முறைகளுக்கு ஆளாகிவரும்
பழங்குடிகளுக்கு...
மீண்டும் தேவைப்படுகிறது
ஈட்டியும் வாள்அம்பும்!

# நோயாளிகளின் குருதியைக் குடிக்கும் தனியார் மருத்துவமனைகள்

புகழ்பெற்ற இரண்டு தனியார் மருத்துவமனை களில் டெங்கு காய்ச்சலுக்கு மருத்துவம் செய்து கொண்ட இருவர் அண்மையில் இறந்துவிட்டனர். இவர்களில் ஒருவர் 22 நாள்கள் மருத்துவமனையில் இருந்ததற்கான செலவு உருவா 16 இலட்சம். மற்றொருவர் 15 நாள்கள் மருத்துவ மனையில் இருந்த தற்கான செலவு உருவா 15.6 இலட்சம். இந்த இரண்டு மருத்துவமனைகளுக்கும் பல கிளை மருத்துவ மனைகள் உள்ளன. இந்த இரண்டு இறப்புகளும் இந்தியாவில், அரசு, மக்களுக்கு அளிக்க வேண்டிய பொது மருத்துவம் எந்த அளவுக்குப் பாழ்பட்டுக் கிடக்கிறது என்பதை யும், தனியார் மருத்துவம் எந்த அளவுக்குப் பகல் கொள்ளை யில் ஈடுபட்டு வருகிறது என்பதையும் தெளிவாக உணர்த்து கின்றன. தனியார் மருத்துவமனையில் சேருபவர்களில் பெரும்பாலோர் கடுமையான நிதிச்சுமைக்கு ஆளாக்கப்படு கின்றனர்.

கடந்த சில பத்தாண்டுகளாக இந்தியாவில் மக்கள் நல்வாழ்வுத் துறை சீரழிந்து வருவது குறித்து தேசிய அளவிலும் பன்னாட்டு நிலையிலும் வெளியிடப்பட்ட அறிக் கைகளில் தெரிவிக்கப்பட்ட விவரங்களை 2017ஆம் ஆண்டிற் கான தேசிய சுகாதார அறிக்கை உண்மை என உறுதி செய்கிறது. மக்கள் நல்வாழ்வுக்கு அரசு செலவிடும் தொகை குறைந்து கொண்டே வருகிறது. அதனால் தனியார் மருத்து வம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. ஆகவே மக்கள் தனியார் மருத்துவத்தை நாடும் நிலைக்குத் தள்ளப்படு கின்றனர். எனவே தங்கள் சொந்தப் பணத்தைச் செலவிடுவதால் ஏழைகள் கடனாளிகளாகின்றனர்.

பொது மக்களின் மருத்துவச் சேவைக்கு அரசு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்குவதால், அதை யடுத்து தரமான மருத்துவம் கிடைக்காமையால் மிகவும் ஏழைகளாக இருப்பவர்கள்கூட தனியார் மருத்துவ மனைகளைத் தேடிச் செல்கின்றனர். தனியார் மருத்துவ மனைகளில் அதிகம் செலவாகும் என்று தெரிந்துள்ள போதிலும் வேறு வழியில்லாமல் ஊரகப் பகுதியில் 61 விழுக்காட்டினரும், நகரப் பகுதியில் 69 விழுக்காட்டினரும் தனியார் மருத்துவமனைக்குச் செல்கின்ற னர். தனியார் மருத்துவமனையில் படுக்கையில் சேர்ந்து மருத்துவம் செய்துகொள்ளும் போது, நகர்ப்புறத்தில் 5 குடும்பங்களில் ஒரு குடும்பம், ஊரகப் பகுதியில் நான்கில் ஒரு குடும்பம் மருத்துவச் செலவைக் கட்டுவதற்காகக் கடன் வாங்குகின்றன. அல்லது தங்கள் உடைமை களை விற்கின்றன. நாட்டின் மொத்த சுகாதாரச் செலவில் மக்கள் செலவிடும் தொகையின் அளவு 63 விழுக்காடாகும். தேசிய சுகாதர அறிக்கையின்படி, சராசரியில் ஒருவருக்கு உருவா 3,826 செலவாகிறது; அதில் நோயாளி செலவிடும் தன் சொந்தப் பணம் உருவா 2,394 ஆகும்.

இந்நிலையிலும், அரசு, மக்களுக்கான பொது மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தாமல், தனியார் மருத்துவத்தை ஊக்குவிப்பது பெருங்கொடுமையாகும். தனியார் மருத்துவ மனைகளை ஒழுங்குபடுத்துவதற் கான திட்டவட்டமான விதிகளை அரசு வகுக்கவில்லை. அதனால் தனியார் மருத்துவ மனைகள் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்ற நிலை இருக் கிறது. ஆகவே அவை எந்த நெறிமுறைக்கும் கட்டுப் படாமல் இலாபம் ஒன்றையே குறியாகக் கொண்டு செயல்படுகின்றன.

குறை மாதத்தில் பிறந்த ஒரு குழந்தையை உயிருடன் இருக்கும்போதே இறந்துவிட்டதாக அண் மையில் தில்லியில் உள்ள புகழ்பெற்ற ஒரு மருத்துவ மனை அறிவித்தது. குழந்தையைப் பெற்றுக்கொண்ட பெற்றோர் குழந்தை சாகவில்லை என்பதை அறிந்து வேறொரு மருத்துவமனையில் சேர்த்தனர். ஒரு கிழமை உயிருக்குப் போராடிய பின் அக்குழந்தை இறந்துவிட்டது. இது பெரும் பிரச்சனையாக வெடித்தது. உடனே தில்லி அரசு முதலில் அக்குழந்தை இறந்த தாக அறிவித்த தனியார் மருத்துவமனையின் மற்றும் அதன் கிளை மருத்துவமனைகளின் உரிமத்தை இரத்துச் செய்தது. அதனால் அந்த மருத்துவமனை யில் இருந்த உள் நோயாளிகள் பெரும் துன்பத்துக்கு ஆளாயினர். தனியார் மருத்துவமனை தவறு செய் தால் அரசுகளும் நடவடிக்கை எடுக்கும் என்று மக் களிடம் நற்பெயரை வாங்க வேண்டும் என்பதற் காகவே நோயாளிகளின் துன்பத்தைப் பொருட்படுத் தாமல் தில்லி அரசு இப்படி ஒரு தவறான நடவடிக் கையை எடுத்தது.

2010ஆம் ஆண்டில் தனியார் மருத்துவமனைகள் (பதிவு செய்தல் மற்றும் ஒழுங்காற்றல்) சட்டம் இயற்றப் பட்டது. இச்சட்டத்தை இந்திய அரசும், மாநில அரசு களும் முறையாக நடைமுறைப்படுத்தியிருந்தால். பணம் பறித்தல் மற்றும் பிற வகையிலான முறை கேடுகளைத் தடுத்திருக்கலாம். நெறி முறை தவறி செயல்படும் மருத்துவமனைகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்க இச்சட்டம் வழிகோலுகிறது. ஆனால் இச்சட்டம் ஏட்டளவிலேயே இருக்கிறது.

அண்மையில் நடுவண் அரசு ஒருவரின் இதயக் குருதிக் குழாய் அடைப்புக்காக “ஆஞ்சியோ பிளாஸ்டி” செய்து, அடைப்பு இருந்த இடத்தில் பொருத்தப்படும்

ஸ்டன்ட் (Stent) விலைக்கு வரம்பு விதித்தது. ஆயினும் தனியார் மருத்துவ மனைகள் ஸ்டன்ட் விலையில் குறைக்கப்பட்ட தொகையை வேறு பெயர்களில் நோயாளியிடம் வசூலித்துவிடுகின்றன. அதனால் இதயக் குருதிக் குழாயில் ஸ்டன்ட் பொருத்துவதற்கு முன்பு எவ்வளவு பணம் நோயாளியிடம் வாங்கப் பட்டதோ அதே தொகைதான் இப்போதும் மருத்துவ மனையால் வசூலிக்கப்படுகிறது.

கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தனியார் மருத்துவமனைகள் அதிகாரம் மிக்கவையாக வளர்ந்து விட்டுள்ளன என்பதை அண்மையில் கருநாடக மாநிலத் தில் நடந்த நிகழ்வு மெய்ப்பிக்கிறது. மருத்துவம் அளிப்பதில் ஏற்படும் பொறுப்பின் மையாலோ, மற்ற முறைகேடுகளாலோ நோயாளி பாதிக்கப் பட்டால் அது தொடர்பான மருத்துவர், மருத்துவமனை மீது தண் டனைக்குரிய நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு சட்டம் 2017 நவம்பரில் கருநாடகச் சட்டப் பேரவையில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை மருத்துவர்களும் தனி யார் மருத்துவமனை முதலாளிகளும் தீவிரமாக எதிர்த்துப் போராட்டம் நடத்தினர். அரசு பொது மருத்துவ மனைகளைவிட தனியார் மருத்துவமனைகளில் பல மடங்கு நோயாளிகள் உள்ளனர். மருத்துவர்களின் போராட்டத்தால் தனியார் மருத்துவமனைகளின் நோயாளிகள் பாதிக்கப்பட்டதால், மக்களின் சினம் அரசுக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டது. அதனால் இறுதி யில் அரசு, அச்சட்டம் நீர்த்துப் போகும் தன்மையில் மாற்றியமைக்க ஒப்புக்கொண்டது. இந்திய அளவில் மொத்த உற்பத்தி மதிப்பில் (GDP) 1.1 விழுக்காடுதான் அரசு, மருத்துவத்துக்குச் செலவிடுகிறது. கருநாடக மாநில அரசு 0.7 விழுக்காடுதான் செலவிடுகிறது. கருநாடகத்தில் தனியார் மருத்துவம் எந்த அளவுக்குக் கோலோச்சுகிறது என்பதை இது காட்டுகிறது.

2017ஆம் ஆண்டின் தேசிய சுகாதார அறிக்கை யின்படி, 130 கோடி மக்களுக்கு மருத்துவம் செய்வதற் குப் பத்து இலட்சம் ஆங்கில முறை மருத்துவர்கள் இருக்கின்றனர். இந்தப் பத்து இலட்சம் மருத்துவர் களில் 10 விழுக்காடு மருத்துவர்கள் மட்டுமே அரசின் பொது மருத்துவமனைகளில் பணிபுரிகின்றனர். இதே போன்று அரசு மருத்துவமனைகளில் போதிய அளவுக் குச் செவிலியர்கள், பிற வகையிலான சுகாதாரப் பணி யாளர்கள் இல்லை. மேலும் மருத்துவ வசதி கிடைத்தல், தரமான மருத்துவம் ஆகியவற்றில் மாநிலங் களுக்கு இடையில் பெரும் ஏற்றத்தாழ்வு இருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. தொற்று அல்லாத நோய் களால் (Non-Communicable Diseases) நாட்டில் ஏழைகள் பெரும் துன்பத்திற்கு ஆளாகி இருப்பது பற்றியோ, மருத்துவ வசதிகளைப் பெறுவதில் ஊரகப் பகுதிக்கும் நகரப் பகுதிக்கும் இடையில் உள்ள ஏற்றத் தாழ்வு குறித்தோ மருத்துவக் கல்வியில் மாணவர் களுக்குக் கற்பிக்கப்படுவதில்லை.

2017ஆம் ஆண்டில் தேசிய சுகாதார அறிக்கை ஜி.டி.பி.யில் (GDP) ஒரு விழுக்காடாக உள்ள மருத்துவத் திற்கான நிதி ஒதுக்கீட்டை 2020க்குள் 2.5 விழுக்கா டாக உயர்த்தப் போவதாகக் கூறுகிறது. ஆனால் இதில் உலக சராசரி 5.99 விழுக்காடு என்பதை ஒப்பிடும் போது மக் களுக்கு அரசு மருத்துவ சேவை அளிப்பதில் எந்த அளவுக்குப் பின்தங்கியிருக்கிறது என்பது புல னாகும். எனவே அரசு மக்களுக்குப் பொது மருத்துவ சேவையை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பேராசைப் பிடித்த தனியார் மருத்து வர்கள் - மருத்துவமனைகள் என்னும் கொள்ளைக்காரர் களிடமிருந்து நோயாளிகளையும் அவர்களின் குடும் பங்களையும் மீட்பதற்கான - தனியார் மயத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அரசியல் உறுதிப் பாடு ஆளும் வர்க்கத்திடம் ஏற்படுமா?

(நன்றி : Economic and Political Weekly,
ஆசிரியவுரை, திசம்பர் 23, 2017.
தமிழாக்கம் : க. முகிலன்)

## புலவர் கு.சீத்தா - இந்திராணி முத்துவிழா

புலவர் கு.சீத்தா-இந்திராணி இணையரின் முத்து விழா 27.1.2018 சனிக்கிழமை காலை 8 மணிமுதல் தியாகதுருகம் தாய் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. பொன். இராமகிருட்டிணன் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. மருத்துவர் சீத்தா அன்புச் செல்வி வரவேற்புரை யாற்றினார். நா.புகழேந்தி, பா.கலியபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் க.வேங்கடபதி, புலவர் கி.த.பச்சையப்பன் த.பழமலை, சி.மா.பால தாண்டாயுதம் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

முத்துவிழா மலரை மருத்துவர் மகுடமுடி வெளி யிட்டார். பொன்.இரா.மணிமாறன் பெற்றுக் கொண் டார். சு.வேல்முருகன் மலரினைத் திறனாய்வு செய்தார்.

விருது அளிக்கும் அரங்கிற்கு முன்னாள் அமைச்சர் க.வேழவேந்தன் தலைமைத் தாங்கினார். இராம. புகழேந்தி, ம.சுப்புராயன், மிசா.பொன். இராமக் கிருட்டிணன், மா.கோமுகி மணியன், தா.உதய சூரியன், டாக்டர் மாசிலாமணி முதலானோர்க்கு தலைவர்களின் பெயர்களிலான விருதுகள் வழங்கப் பட்டன. இரா.துரைமுருகன் தொகுப்புரை வழங்கி னார்.

கவிதா அறிவண்ணல் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

சென்ற இதழ் தொடர்ச்சி...

# புரட்சியாளர் அம்பேத்கர்

மரு.க.சோமாஸ்கந்தன்

**மகாத்மா காந்தி அம்பேத்கர் சந்திப்பு**

மகாத்மா காந்தி, 1931 ஆகஸ்டு 6ஆம் நாள், அம்பேத்கரை சந்திக்க விரும்பி, அவரை எப்பொழுது எங்கு சந்திக்கத் தான் வரலாம் என்று கேட்டுக் கடிதம் எழுதினார் அம்பேத்கர் உடல் நலம் குன்றியிருந்தார். எனினும், உடல் நலம்பெற்றதும் தானே நேரில் வந்து சந்திப்பதாக பதில் எழுதியிருந்தார்.அதன்படி ஆகஸ்டு 14 ஆம் நாள் பகல் 2 மணிக்கு பம்பாய் மலபார் பகுதியில் இருந்த மணிபவனில் மகாத்மா காந்தியை தன் நண்பர்களுடன் சந்தித்தார் அம்பேத்கர்.

காந்தியார் :- என் மீதும், காங்கிரஸ் மீதும் மிகுந்த சினம் கொண்டுள்ளீர்கள் என்று அறிகின்றேன். நான் சிறுவனாக இருந்த போதே தீண்டத்தகாதோரின் அவலங்களைக் குறித்து கவலை கொண்டிருந்தேன் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். காங்கிரஸ் தலைவர்கள், தீண்டாமைப் பிரச்சினை, சமய, சமூகப் பிரச்சினையாகும். அதனை அரசியலுடன் கலக்கக்கூடாது என்று எதிர்த்தனர் : என்றபோதும், தீண்டாமை ஒழிப்பினை காங்கிரஸின் வேலைத் திட்டங்களில் சேர்த்திட நான் மேற்கொண்ட கடும் முயற்சிகளை அறிவீர்கள். மேலும் காங்கிரஸ் 20 இலட்சம் ரூபாய்கள் தீண்டப்படாதோர் நலனுக்காகச் செலவு செய்துள்ளது. ஆனால் உங்களைப் போன்றோர் என்னையும் காங்கிரஸையும் எதிர்ப்பது எனக்கு வியப்பாய் உள்ளது. என்றார்.

அம்பேத்கர் :- தங்கள் முயற்சியால் தான் தீண்டாமைப் பிரச்சினையை காங்கிரஸ் வேலைத்திட்டத்தில் ஏற்றுக் கொண்டது என்பதை ஏற்கிறேன். ஆனால் காங்கிரஸ் பெயரளவில் அங்கீகாரம் கொடுத்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை காங்கிரஸ் 20 இலட்சம் ரூபாய்கள் தீண்டப்படாதோர் நலனுக்காகச் செலவு செய்துள்ளது என்று கூறுகிறீர்கள். அவை அனைத்தும் வீண் என்று குறிப்பிட விரும்புகின்றேன். அந்தப் பணம் என்னிடம் இருந்திருந்தால் என் மக்களின் கல்வி, பொருளாதார நிலைகளில் வியப்பூட்டும் வகையில் மாற்றங்களைக் கொண்டு வந்திருப்பேன். தீண்டாமை ஒழிப்பில் காங்கிரஸுக்கு உண்மையில் ஈடுபாடு இருக்குமேயானால், காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகக் கதர் அணியவேண்டும் என்று விதி உள்ளதைப் போல் தீண்டாமை ஒழிப்பையும் ஒரு நிபந்தனையாக விதித்திருக்க வேண்டும். அத்தகைய நிபந்தனை இருந்திருந்தால் ஒரு மாவட்டத் தலைவர் தீண்டத்தகாதவர் கோயில் நுழைவினை எதிர்த்திட்ட அவலம் நிகழ்ந்திருக்காது. எங்கள் பிரச்சினையில் இந்துக்களிடம் சிறிதும் மனமாற்றாம் ஏற்படவில்லை. மனமாற்றம் ஏற்படாத நிலையில் இந்துக்களையும் காங்கிரஸையும் நாங்கள் நம்பமாடோம். நாங்கள் சுயமரியாதையிலும் சுயமுற்சியிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம். பெரிய தலைவர்களிடமோ, மகாத்மாக்களிடமோ நாங்கள் நம்பிக்கை வைக்கத் தயாராக இல்லை. காங்கிரஸ் காரர்கள் ஏன் எங்கள் இயக்கத்தை எதிர்க்கவேண்டும்? ஏன் என்னைத் துரோகி என்று அழைக்கவேண்டும்? காந்திஜீ எனக்குத் தாயகம் என்பதில்லை

காந்தி: (அதிர்ச்சி அடைந்தவராக) உங்களுக்குச் சொந்த நாடு இருக்கிறது. வட்டமேசை மாநாட்டில் நீங்கள் ஆற்றிய செயல்களின் மூலம் நீங்கள் சிறந்த நாட்டுப்பற்று மிக்கவர் என அறிந்து கொண்டேன்.

அம்பேத்கர்: எனக்கு நாடு உள்ளது என்று கூறுகிறீர்கள். ஆனால் நான் மீண்டும் கூறுகின்றேன். எனக்கு நாடு இல்லை. இந்த நாட்டை என் நாடென்றோ, இந்து மதத்தை என் மதம் என்றோ எவ்வாறு என்னால் கருதமுடியும்.? நாய்கள், பூனைகளைவிடக் கேவலமாக நடத்தப்படுகின்றோம். பொது நீர் நிலைகளிலிருந்தும் தண்ணீர் எடுக்கும் உரிமையும் கிடையாது. இந்த நிலையில் சுயமரியாதையுள்ள எந்தத் தீண்டப்படாதவன் இந்த நாட்டைத் தன் நாடாகக் கருதுவான்? நாட்டுப் பற்று எங்களுக்கு இல்லை என்றால், அதற்கு நாங்கள் பொறுப்பு ஆகமாட்டோம். இந்த நாடே பொறுப்பாகும். என்னைத் துரோகி என்றால் அதற்கு நான் பொறுப்பு இல்லை இந்த நாடே பொறுப்பாகும். என் மனச்சான்று காட்டும் நெறிப்படி என் மக்களுக்கு மனித உரிமைகளைப் பெற முயற்சி மேற்கொண்டிருக்கிறேன். இந்நாட்டிற்குக் கேடு சூழ வேண்டும் என்று எள்ளலவும் மனதாலும் நான் எண்ணுவதில்லை, செயல்படுவதுமில்லை. சூழ் நிலை விரும்பத் தக்காதாயில்லை. காந்தியார் பொறுமையிழந்தார் அந்த நிலையில் இந்தச் சந்திப்பின் நோக்கம் பற்றிய முக்கியக் கேள்வியை அம்பேத்கர் கேட்டார்.

அம்பேத்கர்:- தீண்டப்படாதவர்களைவிட, சமூக, அரசியல் பொருளாதார நிலைகளில் உயர்ந்த நிலையில் முஸ்லீம்களும், சீக்கியர்களும், உள்ளனர். முதல் வட்ட மேசை மாநாட்டில் முஸ்லீம்கள், சீக்கியர்கள் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அரசியல் அங்கீகாரம் கொடுக்கப் பட்டுள்ளன. காங்கிரஸ் அவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த மாநாட்டில் தீண்டப்படாதவர்களின் அரசியல் உரிமைகளும் ஏற்கப்பட்டுள்ளன. அவர்கள் போதிய அளவு பிரதி நிதித்துவம் பெறவும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இவை எம் மக்களுக்கு நன்மைப் பயப்பனவாகும். இவை குறித்தத் தங்கள் கருத்தை அறிய விழைகின்றேன்.

காந்தியார்:- இந்துக்களிடமிருந்து தீண்டப்படாதவர் களை அரசியல் ரீதியாகப் பிரிப்பதை நான் எதிர்க் கின்றேன்.. அது தற்கொலைக்கு நிகரானது, என்றார்

அம்பேத்கர்:- உங்கள் கருத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியதற்கு நன்றி. உங்கள் நிலையை நான் அறிந்து கொண்டேன். விடைபெற்றுக் கொள்கின்றேன், என்று கூறிவிட்டு வெளியேறினார் இனி, தம் மக்களின் மனித, அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தந்திட தீவிரமாகச் செயல்பட உறுதி பூண்டார்.

காந்தி இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் வரையில், அம்பேத்கர் ஒரு பிராமணர் என்றே கருதியிருந்தார், அவர் அரிசனங்கள் நலனில் அக்கறைகொண்டிருந்ததால் வரம்பு கடந்து பேசினார் என்று காந்தி எண்ணிக்கொண்டிருந்தார்.

**இரண்டாவது வட்டமேசை மாநாடு:-**

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அம்பேத்கர் அழைக்கப்பட்டிருந்தார். கூட்டாட்சி துணைக்குழுவில் அம்பேத்கர் இடம் பெற்றிருந்தார். இந்தக் குழுதான் இந்தியாவுக்கு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் முதன்மையாக விளங்கியது.

அம்பேத்கர் 1931 ஆகஸ்டு15 ஆம் நாள், வட்டமேசை மாநாட்டில் பங்கேற்க லண்டனுக்குப் பயணமானார்; ஆகஸ்டு 29அன்று லண்டன் சென்றடைந்தார்

மகாத்மா காந்தி 1931 ஆகஸ்டு 29 இல் சரோஜினி நாயுடு, பண்டிட் மதன் மோஹன் மாளவியா முதலி யோருடன் இங்கிலாந்திற்குப் பயணமானார் செப்டம்பர் 12 இல் இலண்டனை சென்றடைந்தார்.

செப்டம்பர் 7 ஆம் நாள் இரண்டாவது வட்டமேசை மாநாடு தொடங்கியது. வட்டமேசை மாநாட்டின் முக்கியப் பணி கூட்டாட்சி அமைப்புக் குழுவிலும் சிறுபான்மை யினர் குழுவிலும் தான் பெரிதும் அமைந்திருந்தது. கூட்டாட்சி அமைப்புக் குழுவில் செப்டம்பர் 15 ஆம் நாள் தன் முதல் உரையை நிகழ்த்தினார் காந்தி. அப்பொழுது அவர், இந்தியமக்களின் பிரதிநிதி காங்கிரஸ் கட்சி மட்டுமே என்றும் தான் அக்கட்சியின் பிரதிநிதி என்பதால் தான் மட்டுமே இந்தியமக்களைப் பிரதிநிதிப் படுத்துவதாகவும் குறிப்பிட்டார் .மேலும் மற்றவர்கள் எல்லாம் அரசால் நியமிக்கப்பட்டவர்கள்; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் அல்லர் என்றும் குறிப்பிட்டார். இப்படிக் கூறியதன் மூலம் அம்பேத்கரும் அவரது ஆதரவாளர்களும் கூறு கின்ற கருத்துகள் இந்தியர்களைக் கட்டுப்படுத்தமுடியா தென்று மறைமுகமாகச் சொன்னார். பல்வேறு வகுப்புகள் தனிப்பிரதிநிதித்துவம் கோருவது குறித்து காந்தி தன் கருத்தைக் கூறினார், இந்து, முஸ்லீம், சீக்கியர் என்றள வில் மட்டுமே தனிச்சலுகை அளிக்கப்படல் வேண்டும். தீண்டப்படாதரின் நலனில் காங்கிரஸுக்கு மிகுந்த அக்கறையுண்டு. ஆகவே மேலும் தனிப்பிரதிநிதித்துவம் கேட்கும் எந்தக் கோரிக்கையையும் நான் கடுமையாக எதிர்ப்பேன் என்றார். காந்தியாலும் காங்கிரஸாலும் தீண்டப்படாத மக்கள் மீது தொடுக்கப்பட்ட போர் தான் இது என்று அம்பேத்கர் கூறினார்.

1931 செப்டம்பர் 27 அன்று இரவு 9 மணிக்குமேல் சரோஜினி நாயுடு இருப்பிடத்தில் அம்பேத்கர், காந்தியைச் சந்திக்க தேவதாஸ் காந்தி ஏற்பாடு செய்திருந்தார். அந்தச் சந்திப்பில் அம்பேத்கர் தன் கருத்துகளை எடுத்துரைத் தார். ஆனால் காந்தி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினார். மற்றவர்கள் ஒப்புக்கொண்டால் அம்பேத்கரின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் காந்தி கூறினார்.

செப்டம்பர் 28 இல் சிறுபான்மைக்குழுக் கூட்டம் கூடியது. அம்பேத்கர், தீண்டப்படாத வகுப்பினருக்கு தனித் தொகுதி ஒதுக்கீடும் தனி வாக்காளர் பட்டியலும் வேண்டும் என்று கோரினார். சிறுபான்மைக் குழுவின் உரையாடல்களில் கலந்து கொள்பவர் யாராகிலும் அது காந்தியானலும் மற்றவர்களானாலும் அவர்கள் முழு அதிகாரம் பெற்றவர்கள் அல்லர்; அவர்களின் கருத்துகள் எங்களைக் கட்டுப்படுத்தாது என்று உறுதியுடன் கூறினார். மேலும் சிறுபான்மையினர் பிரச்சினையை சிறுபான் மைக்குழுவே தீர்க்கவேண்டும்; அல்லது பிரிட்டிஷ் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர் தன் நிலையைத் தனக்கே உரிய பாணியில் தெளிவாகக் கூறிவிட்டார், என்று பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டு குறிப்பிட்டார்.

அன்று இரவு இந்து முஸ்லீம் உடன்பாடு காண்ப தற்காக முஸ்லீம் தலைவர்களைக் காந்தி இரகசியமாகச் சந்தித்தார். இதுகுறித்து அம்பேத்கர் லண்டனிலிருந்து டைம்ஸ் ஆப் இந்தியா ஏட்டுக்கு எழுதிய கடிதத்தில் 12-10-1931 இல் குறிப்பிட்டார்: முஸ்லீம்களின் பிரதிநிதி களுடன் பேசும்போது, அவர்களின் 14 அம்சக் கோரிக்கை களை ஏற்றுக்கொள்வதற்குமுன் நிபந்தனை விதித்தார் காந்தி. தாழ்த்தப்பட்டோர் பிரச்சனை எழுப்பப்படும்போது அதனை எதிர்க்கவேண்டும் என்று நிபந்தனையை விதித்தார். எல்லாரும் ஏற்றுக்கொண்டால் தானும் சம் மதிப்பதாக ஒத்துக்கொண்ட காந்தியார் இம்மாதிரி செயல்பட்டது மகாத்மா என்பவருக்கு அழகா? தாழ்த்தப் பட்டோரின் நண்பராக அவர் செயல்படவில்லை என்ப தோடல்லாமல் ஒரு நாணயமான எதிரி என்பதாகக்கூட செயல்படவில்லை, என்று அம்பேத்கர் எழுதினார்.

காந்தியாரின் அந்தரங்கச் செயலாளர் பியாரேலால் காந்திஜியின் எண்ணவோட்டத்தைக் கீழ்க் கண்டவாறு பதிவு செய்துள்ளார். தீண்டப்படா தவர்களுக்குத் தனி அடையாளம் கிடைத்துவிட்டால் அவர்கள் முஸ்லீம் களுடன் கைகோர்த்து சாதி இந்துக்களை கொல்வார்களே என்று தமது நெருங்கிய நண்பரிடம் காந்தி சொன்னாராம். காந்தியாரின் இந்தப் போக்கு பிரிட்டிஷ் அமைச்சரை

மட்டுமல்ல, இந்தியரான வித்தல்பாய் பட்டேல் போன்ற வர்களையும் அதிர்ப்தி அடையச் செய்தது.

சிறுபான்மைக் குழுவின் கடைசிக் கூட்டம் நடை பெற்றபோது முஸ்லீம்கள், தீண்டப்படாதவர்கள், கிறித்து வர்கள், அய்ரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் ஆகியோரின் முதன்மைப் பிரதிநிதிகள் கூட்டறிக்கை அளித்தனர். அரசுப் பணிகளில் சேர்வதற்கும், எந்தவொரு தொழிலைச் செய்வதற்கும் சாதி, மதம் என எந்தப் பாகுபாடும் காட்டக்கூடாது என்றும், தீண்டப்படாதவர்களை காவல் துறையிலும் இராணுவத்திலும் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்துடன் அம்பேத்கரும் இரட்டை மலை சீனிவாசனும் இணைந்து ஒரு துணையறிக்கை அளித்தனர். எல்லா மாநில மத்தியச் சட்டசபைகளிலும் தீண்டப்படாத மக்கள் தொகைக்கேற்பத் தனிப் பிரதி நிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும், தனி வாக்காளர் தொகுதி வேண்டுமென்றும் கோரியிருந்தனர். சிறுபான்மையினர் உடன்படிக்கை அறிக்கையில் தீண்டப்படாதவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வழங்கப்பட்டதை காந்தி எதிர்த்தார்.

சிறுபான்மையினர் சிக்கலைத் தீர்ப்பதில் கருத் தொற்றுமை ஏற்படவில்லை. இச் சிக்கலைத் தீர்ப்பதற்கு பிரிட்டிஷ் பிரதமர்க்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அவரெடுக்கும் முடிவினை ஏற்றுக்கொள்வதாக அம் பேத்கர் தவிர அனைவரும் கையெழுத்திட்டனர்

காந்தி லண்டனிலிருந்து 1931இல் பம்பாய் வந்த டைந்தார். 8000 தீண்டப்படாத மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் காந்திஜியைக் கண்டதும் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். காந்திஜியை வரவேற்கக் கூடியிருந்த காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் தீண்டப்படாத மக்கள் மீது கற்களை வீசினர் தடியடியும் அவர்கள் மீது நிகழ்த்தப்பட்டது. இரு சாராரும் கை கலந்தனர். அவ்விடம் கலகப் பூமியாக மாறியது. அகிம்சா மூர்த்தி காந்திக்கு அவருடைய மண்ணில் வழங்கப்பட்ட வரவேற்பும் எதிர்ப்பும் இறுதியில் இரத்தம் சிந்துவதில் முடிந்தது. வருத்தப்படவேண்டிய நிகழ்வாகும்.

இதற்கு முழுமுதற் காரணம் காங்கிரஸ் தலைவர் களிடையே சகிப்புத் தன்மையின்மை என்பதும், அம்பேத்கர் குறித்து வெளியிட்ட அவதூறு பரப்புரைகளும் ஆகும்...அம்பேத்கரை பிரிட்டிஷ் கைக்கூலி, துரோகி, புதரிலுள்ள நாகப்பாம்பு, சாருவாகனன் என்றெல்லாம் பழித்தனர். அதன் விளைவே காந்திக்கு எதிரான கறுப்பு கொடி ஆர்ப்பாட்டம்.

ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் அலகாபாத்தில் அம்பேத்கருக்குக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்திருந் தனர். அம்பேத்கர் மராத்தியர் என்பதால். அதற்கு எதிர்வினையாக மராட்டியத்தில் காந்திக்கு, அவரது தீண்டப்படாதார் எதிர்ப்பு நிலைக்காக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## செங்கம் சி.ஆறுமுகம் மூத்தமகள் மணிமேகலை மறைந்தார்



தோழர் வே. ஆனைமுத்து வின் அணுக்கத் தோழர் செங்கம் சி. ஆறு முகம் அவர்களின் மூத்த மகள் மதுரை, திருவேங்கடபுரம் மறைவுற்ற டி.சுப்பிர மணி அவர்களின் துணைவியார் திருமதி. ஆ.மணிமேகலை, மாரடைப்பு காரணமாக தம் 68ஆம் வயதில் கால மானார்.

**தோழர் சி. ஆறுமுகம் அவர்கள் குடும்பத்தில் தோழர் வே.ஆனைமுத்து நடத்தி வைத்த திரு மணங்களின் முதல் திருமணம் அந்த அம்மையாருடையது என்பது குறிப்பிடத்தக்கது.**

அவரின் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்வு 21.1.2018 ஞாயிறு முற்பகல் செங்கத்தில் அவரது இல்லத்தில் நடை பெற்றது. நிகழ்வுக்கு அவரின் மூத்த இளவல் ஆ. ஒளிவாணன், தலைமை ஏற்றார். தாயார் சந்திராம்பாள், இளவல்கள் ஆ.பன்னீர்செல்வம். ஆ.குறள் நெறி முன்னிலை வகித்தனர். மகன் சு.கார்த்திகேயன் வரவேற்றார். மா.பெ.பொ.க. சார்பில் தோழர்கள் மா. முருகேசன், கோ.இராமசாமி பல்வேறு இயக் கங்கள், கட்சிகள் சார்பினர், உறவினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மகள் சு. புவனேசுவரி நன்றி கூறினார்.

செய்தி : **மா. முருகேசன்,** தீத்தாண்டப்பட்டு

## மறைமலைநகரில் பொங்கல் புத்தாண்டுப் பெருவிழா



மறைமலைநகர் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் 26.1.2018 அன்று மாலை பாலாஜி திருமண மண்டபத்தில், பொங்கல் புத்தாண்டுப் பெருவிழா தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கு. வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்றது. மு. பிச்சுமுத்து வரவேற்புரை நிகழ்த்தினார். திருமதி. டாக்டர் சு.பிரீதா அபிநய நாட்டியாலா குழுவினரின் தமிழிசை நடன நிகழ்ச்சி நடைபெற்றது. திருக்குறள் போட்டி, பேச்சுப் போட்டி, தமிழில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குச் சிங்கார வேலர் உருவச் சின்னம், நூல்கள், சான்றிதழ்கள் வழங்கி, பேராசிரியர் க. அருணன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியை மா. சமத்துவமணி ஒருங்கிணைத்தார். ச.இலெனின் காவிரிச் செல்வன் நன்றி கூறினார். குடும்பத்தினருடன் திரளாகக் கலந்துகொண்ட புத்தாண்டு விழா சிறப்பாக நடந்தேறியது.

## தோழர் இராமியா எழுதிய

# “புறநானூறு அல்ல இது புது நானூறு”, “புதிய பாடம்”

## நூல்கள் வெளியீட்டு விழா



வரவேற்புரை இராமியா சுமதி



மேனாள் அமைச்சர் எஸ்.ஆர்.இராதா புறநானூறு அல்ல இது புது நானூறு நூலை வெளியிட எஸ்.முத்துகிருட்டிணன் பெறல்



புதிய பாடம் நூலை கோ.ரா.வெற்றி வெளியிட இரா.ஈசுவரலால் பெறல்



மேனாள் அமைச்சர் எஸ்.ஆர். இராதா உரை

சிந்தனையாளன் ஏட்டில் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதிவரும் தோழர் இராமியா எழுதிய “புறநானூறு அல்ல, இது புது நானூறு”, “புதிய பாடம்” ஆகிய இரண்டு நூல்கள் 7.1.2018 அன்று முற்பகல் மாம்பலம் சந்திரசேகர் திருமணத்தில் நடைபெற்ற 2018ஆம் ஆண்டின் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டன. ஆர்.ஆர். குநேந்திரன் எனும் இயற்பெயர் கொண்ட இவர் தனது குடும்பப் பெயரான “இராமியா” எனும் பெயரில் எழுதி வருகிறார். இலண்டன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் மற்றும் அரசியல் விஞ்ஞானத்தில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டமிடலில் பட்ட மேற்படிப்பைப் படித்த இவர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் தலைமைத் திட்ட அமைப்பாளராகப் பணியாற்றி 2010ஆம் ஆண்டில் பணிஓய்வு பெற்றவர். மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய சிந்தனையாளர்.

இராமியா எழுதிய “புறநானூறு அல்ல, இது புது நானூறு” எனும் நூலை எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது அவருடைய அமைச்சரவையில் அமைச்சராக இருந்த எஸ்.ஆர். இராதா அவர்கள் வெளியிட்டார். அந்நூலின் முதல்படியைச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் முன்னாள் உதவித் திட்ட அலுவலர் எஸ். முத்துகிருட்டிணன் பெற்றுக் கொண்டார். புதிய பாடம்

எனும் சிறுகதைத் தொகுப்பு நூலைக் கலச இராம லிங்கம் - கோவி இராமலிங்கம் இணையரின் மகன் கோ.ரா. வெற்றி வெளியிட, ''ஜுட்டிசன்ஸ்'' பத்திரிகையின் ஆசிரியர் இரா. ஈசுவரலால் அதைப் பெற்றுக் கொண்டார். இராமியாவின் இரண்டு நூல்கள் குறித்து மேனாள் அமைச்சர் எஸ்.ஆர். இராதா உரையாற்றினார். பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் முதன்மையை வலியுறுத்தியும், தன் மக்களுக்குச் சுயமரியாதைத் திருமணம் செய்ததையும் தான் இன்றளவும் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளின்படி வாழ்வது குறித்தும் எஸ்.ஆர். இராதா விளக்கிப் பேசினார். இந்நிகழ்ச்சியை இராமியா அவர்களின் துணைவியார் இராமியா சுமதி தொகுத்து வழங்கினார். இராமியாவின் அழைப்பை ஏற்று இந்நூல்களின் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் வந்திருந்தனர். சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீடு மற்றும் கூட்டாட்சிக் கோரிக்கை மாநாட்டிற்காக இராமியா - இராமியா சுமதி இணையர் ரூ.15,000/- நன்கொடையாக வழங்கினர்.

# தோழியர் மருத்துவர் வசந்தாவின் கணவர் தோழர் மேத்தால் கோ. மதியழகன் மறைந்தார்



அரியலூர் நகரில் நடராசன்-செல்லம்மாள் இணையருக்கு மூன்று மகன்கள், மூன்று மகள்கள், மகள்களுள் வசந்தா என்பவர் கடைக்குட்டி.

தோழியர் வசந்தா மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்றவர். அவருடைய தந்தையார் நடராசன், ஆசிரியர் பணியில் இருந்தார். அவர் உள்ளூரில் இருந்த பெரிய மனிதர்கள் எல்லோருக்கும் வேண்டியவர். நல்ல பேரோடும் புகழோடும் விளங்கியவர்.

தோழர் மதியழகன் அரியலூருக்கு மேற்கிலுள்ள மேத்தாலில் பிறந்தவர். மதியழகனும் வசந்தாவும் படிப்பு நிலையில் ஏற்றத்தாழ்வு உள்ளவர்கள், அவர்கள் 1979இல் காதல் திருமணம் செய்துகொண்டனர். எடுத்துக்காட்டான வாழ்க்கைத் துணைவர்களாக நல்ல பெயரோடும் புகழோடும் விளங்கினர்.

உடல்நலமில்லாமல், வீட்டோடு இருக்கும் என்னைப் பார்க்க தாம்பரத்திற்கு இருவரும் வந்து, மூன்று மாதங்களுக்குமுன் பார்த்தார்கள்; நலம் உசாவிச் சென்றார்கள்.

தோழர் மதியழகன் உடல்நலமில்லாமல் இருந்தார். அதையும் பொருட்படுத்தாமல் தாம்பரத்திற்கு வந்து என்னைப் பார்த்துச் சென்ற அவர், தம் 67ஆம் வயதில், 26.12.2017இல் மறைவுற்றார். 2017 திசம்பருக்குள் அவர் மறைவு பற்றிய செய்தி எங்களுக்குக் கிடைக்கவில்லை.

அவர்கள் இருவரையும் அரியலூர் வட்டாரத்தில். நான் இயக்கப் பணியாகச் சென்ற போதெல்லாம் அவர்கள் வீட்டுக்குச் சென்று பார்ப்பேன். அவர்கள் இருவரும் மா.பெ.பொ.க., தி.க., தி.மு.க. நிகழ்ச்சிகளில் மகிழ்ச்சியோடு பங்குபெற்றனர். மகளிர் தொடர்பான நிகழ்ச்சிகளில் தோழியர் வசந்தா மதியழகன் ஆர்வத்தோடு உரையாற்றினார்.

வசந்தா - மதியழகன் இணையருக்கு ஒரு மகன்; அவர் பெயர் ஆம்ஸ்ட்ராங். மகள் பெயர் பத்மா. இவர்கள் இருவருக்கும் நல்ல கல்வி கொடுத்து, வாழ்க்கைக்கு வசதி செய்தார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்து விட்டது; நலமாக உள்ளனர்.

மா.பெ.பொ.க. மேற்கொண்ட முயற்சிகளுக்கும், தி.க. மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் இயக்க வேறுபாடு கருதாமல் பொருளுதவி செய்தார்கள். இப்படிப்பட்ட இயக்கக் குடும்பத்தைச் சேர்ந்த தோழர் மதியழகன் இவ்வளவு விரைவாக மறைவுறுவார் என்று நான் கருதியிருக்கவில்லை. 26.12.2017இல் மறைவுற்ற கோ. மதியழகன் உடலை, அவர் பிறந்த ஊரான மேத்தாலுக்கு எடுத்துச் சென்று ஊரார் பார்வைக்கு வைத்தனர். அங்கேயே, அவருடைய சொந்தத் தோட்டத்தில் 27.12.2017இல் அடக்கம் செய்தனர்.

மறைந்த தோழர் கோ. மதியழகன் படத்திறப்பு நிகழ்ச்சி புழல் ஆசிரியர் பு.இரா. இராசேந்திரன் தலைமையில் மேத்தாலில் நடைபெற்றது. தி.க. மாவட்டத் தலைவர் விடுதலை நீலமேகன், மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் புலவர் இரா. கலியமூர்த்தி இருவர் முன்னிலையில் திருமழப்பாடி பேராசிரியர் முனைவர் அ. ஆறுமுகம், மதியழகனின் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் கிருஷ்ணமூர்த்தி, புலவர் திருநாவுக்கரசு, புலவர். அரங்கநாடன், மருத்துவர் வானொலி மற்றும் பலர் இரங்கலுரை ஆற்றினார்கள். நிறைவாக மருத்துவர் வசந்தா தன் ஆற்றாமையை நெகிழ்வான உரையுடன் படத்திறப்பு நிகழ்ச்சியை முடித்து வைத்தார்.

படத்திறப்பு நினைவாக, ''சிந்தனையாளன்'' வளர்ச்சிக்கு ரூபா.1000/- மருத்துவர் வசந்தா வழங்கினார்.

கோ. மதியழகன் புகழ் ஓங்குக!

**- வே.ஆனைமுத்து**

# மதவாதத்தின் நச்சுப் பரவலும் பெரியாரியத்தின் தற்காலக் கடமைகளும்

- சேலம் மு.ப. சதாசிவம்

சுற்றும் குதிரைகள் குளம்படி
சுற்றிலும் கேட்கிறது – அதில்
பற்றும் நெருப்புப் பொறியினிலே
ஓர் பாதை தெரிகிறது.

விடுதலை பெற்ற இந்தியாவில் சாதியமும் பணநாயகமும், சனநாயகமாகிப் போன காலம். தற்போது நாட்டை ஆண்ட பேராயக் கட்சி (காங்கிரசு) மதவாத நெருப்பை அணைக்கவில்லையானாலும் மதச்சார்பு அற்ற கொள்கை கொண்டிருப்பதாய்ப் பறைசாற்றியது.

காந்தியார் படுகொலைக்குப் பிறகு பல்வேறு வடிவெடுத்த மதவாதம், படிப்படியாய் ஏற்றம் கண்டு பாசிசப் பெருவடிவாய் மத்தியில் கோலோச்சுகிறது. கலப்புப் பொருளாதாரமென தொடங்கிய நேரு ஆட்சி, பின்னர் சோனியா காலத்தில் தனியார் மயம், தாராள மயம், உலக மயம் என உருக் கொண்டது. முகவரை மாற்றும் மக்களாட்சியில், "பொருள் உங்களுக்கு-இந்துத்துவம் எங்களுக்கு" எனும் பெரு முதலைகளின் பேரத்தில், 'மோடி' முகவராய் அடையாளம், பெற்றார். ஒரே நாடு, ஒரே மதம், ஒரே சட்டம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே அடையாளம் என்ற முழக்கத்தோடு இலட்சிய பாசிசம் நீட்டும் நச்சுக்கரங்களில் பட்டும் படாமல் தமிழ்நாட்டு (நடைமுறை) அரசியல் அமைப்புகள் நல்லுறவு பேணுகின்றன.

தமிழ், தமிழர், தமிழ்ப் பண்பாடு, சமூக நீதி என்பவை கொலைக் களத்திற்குக் காத்திருக்கின்றன. உலகமயம், அனைத்திற்கும் தீர்வல்ல. பன்முக சமுதாயத்தின் வேர்களைக் கெல்லியெறியும் கோடரி என்று பெரும்பான்மைத் தமிழ்ச் சமூகம் உணரும் நிலையில் இல்லை. ஒரு சமுதாயம் பட்டினி கிடப்பினும் உயர்ந்த விழுமியங்களைக் கொண்டிருப்பின் அதனை அடிமைப்படுத்த முடியாது. எனவே, விழுமியங்களை விழுங்கும் பாசிச மதவாதம், தமிழ் மண்ணில் வேரூன்ற, கிளை பரப்ப அனுமதித்தலாகாது என்று உணரச் செய்ய வேண்டும். இதனை யார் செய்ய வல்லவர் எனில், மார்க்சியப் பெரியாரியக் கோட்பாட்டாளர்களே என்று தெளிவுற முடியும்.

### பெரியார் ஒரு கலகக்காரர்

அறிவு உயர்வு தரும் என அனைவருக்கும் கல்வி வேண்டினோம். பின் கல்வி கடைச்சரக்கு ஆயிற்று. வாங்கிய பொருளை விற்க முடியாத சிறு வியாபாரி போல, படித்த படிப்புக்கு வேலை கிடைக்காத இளைஞர்க்கு உலகமயம் வழிகாட்டும் என்றனர். தேசம் துறந்த - மக்களை மறந்த - மானுடமற்ற எந்திர வாழ்வு கிட்டியோர் போக, எஞ்சியோர் எட்டாத உயரத்து, கிட்டாத வேலைக்கு ஆலாய்ப்பறந்து பொழைக்கத் தெரியாத பசங்களாய்ப் பரிதவிக்கும் மண்ணில், கண்ணீர்த்துளிகளும் காட்டாத சமத்துவத்தை, காணப் பெரியாரியம் வழிகாட்டும்,

**ஆர்க்கின்ற முரசங்கள், விம்முகின்ற தாரைகள், கொம்பு, குழல், மத்தளங்கள் இசையெழுப்ப, காவித் தோரணங்கள் கருப்பு, சிவப்பு பதாகைகளோடு உயரப் பார்க்கின்றன. தன்னையே நோக்கியப் பார்வையைத் திருப்ப வேண்டிய தமிழரினம், வடவருக்கு வால் பிடிக்கும் காலமிது. கிளர்ச்சிப் பெரியார், கலகப் பெரியார், கருத்துப் பெரியார், களம் கண்ட பெரியார், முன்னெப்போதைக் காட்டிலும், இப்போது தேவைப் படுகிறார்.**

### அம்பேத்கரியப் பெரியார்

பெரியாரியச் சிந்தனைகளை. அம்பேத்கரியத்தைப் பின்பற்றும் சிந்தனையாளர்களும் மற்றும் இயக்கங்களும் ஏற்றுக்கொள்வதில் இன்னமும் தயக்கமிருப்பினும், அம்பேத்கரது பங்களிப்பை அவர் தம் கருத்துகளைப் பெரியார் காலந்தொட்டே திராவிடர் கழகம் ஏற்றுக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. 'இரட்டை வாக்குரிமையை'க் கைவிடக் கோரி காந்தி நடத்திய உண்ணாநோன்புக்காக, பெற்ற உரிமையை இழக்க வேண்டாம் என அம்பேத்கருக்குத் துணிவுடன் சொன்னவர் தந்தை பெரியார் என்ற உண்மையிலிருந்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடையூறு அற்ற சம வாய்ப்பு வேண்டும் என்ற நிலைப்பாட்டில் முனைப்புக் காட்டியவர் என்பதை யாரும் மறக்க இயலாது.

பெரியாரது இரஷிய நாட்டுப் பயணமும் அதற்கென அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் அங்கிருந்த தொழிற்சாலைகளையும், தொழிலாளர் உணவுக் கூடங்களையும் நேரில் பார்த்தறிந்த அவர், 1932 'மே தின' விழாவில் சிறப்புப் பார்வையாளராகப் பங்கேற்று நாடு திரும்பினார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையையும் வெளியிட்டார். பின்னாளில் "பகத் சிங்கின்" "நான் ஏன் நாத்திகனானேன்" எனும் கட்டுரையையும் வெளியிட்டார். இவற்றினின்று அவருக்கிருந்த பொதுவுடைமை அமைப்புப் பார்வை வெளிப்படுகிறது. பெரியாரின் மறைவுக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து, பொதுவுடைமைக் கட்சியினர் பெரியார் ஒரு 'கலகக்காரர்' எனப் பெயர் சூட்டி ஏற்றுக் கொண்டனர்.

காங்கிரசு பல பிரிவுகளான போதும் அதற்கான பெரியாரின் பங்களிப்பை யாரும் மறுப்பது இல்லை. சங்கப் பரிவார் அமைப்புகளைத் தவிர்த்த அனைத்துத் தமிழ்நாட்டுக் கட்சிகளும், தன்னாட்சி கோரும் தமிழ்த்தேசிய இயக்கங்களும் பெரியாரை ஏற்கின்றன; பாராட்டுகின்றன; ஆனால், பெரியாரின் சாதி ஒழிப்பு, சமற்கிருத எதிர்ப்பு, பெண் விடுதலை இவற்றை முன்னெடுத்துச் செல்வதில், நடைமுறை அரசியல் பார்வை கொண்டிருப்பதால் தயங்கித் தவிர்த்து விடுகின்றனர். இருபெரும் திராவிடக் கட்சிகள், அண்ணாவை மேற்கோள் காட்டவே தயங்குகிற சூழலில், கலைஞருக்குப் பிறகு பெரியார் எனும் கருத்துப் பிம்பம் காப்பாற்றப்பட வேண்டிய வரலாற்றுக் கடமை பெரியாரிய இயக்கங்களை நம்பியிருக்கிறது.

### பெரியாரின் பெரும் பற்றாளர்

ஆனால் பெரியாரிய இயக்கங்கள் கருத்தளவில் ஒன்றுபட்டாலும், செயலளவில் வேறுபட்டிருக்கின்றன. தந்தை பெரியாரது திராவிடர் கழகத்தை வழிநடத்தும் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் 80 அகவை கடந்தவர். வாய்ப்பும் வசதிகளும் பெற்ற அமைப்பின் முன்னோடியான அவர் மற்றவர்களை அழைக்க வேண்டிய அவசியமில்லாமிருக்கலாம்.

பெரியாரது மிகச்சிறந்த தோழர் சிந்தனையாளர் அய்யா வே. ஆனைமுத்து அவர்கள், சமூக நீதிச் சுடரை வடபுலத்து மாநிலங்களில் ஏற்றி வைத்து, மண்டலை நடைமுறைப் படுத்தி, கமண்டலத்தைக் கதறச் செய்தவர். அகவை 93-ஐத்தாண்டி இன்றும் அயராது பணியாற்றுபவர். சிறியதொரு அறக்கட்டளை வழி பெரியாரியல் கல்வி வகுப்புகளை நடத்தி, இளையோரிடம் பெரியார் பற்றிய புரிதலையும், பற்றுதலையும் உருவாக்கி வருபவர். மார்க்சிய, அம்பேத்கரியப் புரிதலோடு, பெரியாரது சிந்தனைகளுக்கு வலுவூட்டுபவர்.

பல்வேறு இடர்ப்பாடுகள், தளைப்பாடுகள் இருப்பினும், தமிழ், தமிழர், பெரியார் எனும் பேராண்மையோடு தனித்து இயக்கம் கண்டவர் பெரியாரியத் தொண்டர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள். விடுதலைப் புலிகள் பெயரை உச்சரிக்க அஞ்சிய காலத்தில், புலிகளுக்கு உற்ற துணையாய் நின்று, ''தடா'' சட்டம் கண்டு மீண்டவர். இளைஞர்கள் ஏற்கும் தோழராய் இன்றும் வலம் வரும் இவரை எல்லாக் கட்சியினரும் அடையாளங்கண்டு அங்கீகரிக்கின்றனர்.

செயல்பாட்டு வடிவில் தன்னுணர்வோடு, நினைத்ததை நடத்திக் காட்டும் திறம் படைத்த அரசியல் செயல் வீரர் தோழர் கு.இராமகிருஷ்ணன், மக்கள் விரோத நடவடிக்கைகளை மற்றவர்கள் அறிக்கை வழியே கண்டிக்கும் வேளையில், உடனடிப் போராட்டத்தின் வழியே தமது இயக்க எதிர்ப்பை உணர்த்திடும் தடுமாற்றமில்லாச் சிந்தனையாளர்.

### விடுதலைக் களம்

**இவர்களது அனைவரது களமும், பெரியாரியப் போராட்டச் சிந்தனைக் களம். எது வரினும் அஞ்சாத விழுமியங் கொண்ட பெரியார் வீழ்ந்து விடவில்லை. தமிழ்க் களப் போராட்டத்தில் உயிர் வாழ்கிறார் என ஒவ்வொருவரும் உணர்த்தும் உயிர்ப் பொருள் எனலாம். இவர்களது களங்கள் வெவ்வேறாயினும், எண்ணிக்கை எத்தனையானாலும் தமிழர் நலம், அறிவியல் சார்ந்த அணுகுமுறை, வீழ்த்த முடியாத விவேகம், இவற்றால் இவர்கள் தாம் இன்று பெரியாரின் வழித்தோன்றல்கள். இவர்களை ஒட்டித்தான் பெரியாரியம் இம்மண்ணில் உயிர்த்திருக்க முடியும். முத்துக் குமாரும், செங்கொடியும் இன்னும் பல இளங்குருத்துகளும் ஈகம் செய்த இம்மண்ணில் இன்றைய சூழலில் பெரியாரியமே வலிமை மிக்க ஆயுதம். மாறிய சூழலில் அது கூர்மைப்படுத்தப்பட வேண்டும்; பல்கிப் பெருக வேண்டும்.**

### வரலாற்றுக் கடமை

காலம் உங்களிடம் ஒன்றைக்கோரும் போது அதனைத் தட்டிக்கழித்துப் புறக்கணித்துவிட முடியாது. மகத்தான மனிதர்கள் மகத்தான கனவுகள் கொண்டிருந்தால் மட்டும் போதாது. மகத்தான காரியங்களை நிகழ்த்திக் காட்டி, வரலாற்றில் பதிவு பெற வேண்டும். பெரியார் எனும் மகத்தான ஆளுமையின்றி, இருபதாம் நூற்றாண்டு தமிழ் நாட்டுச் சரித்திரம் அமையாது. இருபத்தி ஓராம் நூற்றாண்டு கூட, பெரியாரது கருத்தாளுமையைக் கோருகிறது. பெரியார் வழித்தோன்றல்களும் அவர்களது செயல்பாட்டு ஒற்றுமையின்றியும் பெரியாரின் கொள்கைகள் நிறைவுறா. **எனவே, பெரியாரிய இயக்கங்கள் மன வேறுபாடுகளை மறந்து, ஒருங்கிணைந்திடல் காலத்தின் கட்டாயம். எல்லா இயக்கங்களும் இணைந்து ஓரியக்கமாக, உரத்தக் குரலில் இக்காலத்திற்கேற்ற, மதவாத, பாசிச அமைப்புகளுக்கு முடிவு கட்டவும், நடைமுறை அரசியலாளர் நடை திருத்தவும், தமிழகத்து மண்ணில் நாட்டோர் நலம் காக்கும் நல்லரசியலுக்கு மட்டுமே இடமுண்டு எனும் புதிய பிரகடனம் ஒன்றை வெளியிட வேண்டும். அந்த நாள் நாட்டை பீடித்திருக்கும், நச்சுக்கிருமிகளுக்கு முடிவு கட்டும் முதல் நாளாய் இருக்க வேண்டும். அதற்கு மார்க்சியப் பெரியாரிய இயக்கத்தார் நால்வரும் மற்றும் பெரியார் பெருந்தொண்டர்களும் இதற்கான கருத்தொருமித்தலைத் திட்டமிடுங்கள் என, பெரியாரின் பெயரால் தலை தாழ்த்தி வேண்டுகிறேன்.**

**எனவே பெரியாரியச் சிந்தனையாளரின் பார்வையும் பரிசீலனையும் வேண்டி இந்த வேண்டுகோளை விடுக்க விழைகின்றேன்.**

# கொலை செய்ய உரிமையா?

ஊடகவியலாளர் கௌரி இலங்கேசு துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாக்கப்பட்டது, தடையற்ற சிந்தனை யாளர்களின் நெஞ்சில் பாய்ந்த மற்றுமொரு குண்டு போன்றது. கொலையாளிகள், நக்சல்பாரிகள் என்றும், கொலையுண்ட கௌரியின் வழக்குரைஞர் மற்றும் அவர் போன்றோர் இது இந்துமத வெறியர்களின் வன் முறை அமைப்பின் வெறிச்செயல் என்றும் சொல்லப் பட்டு வருகிறது. கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலை தொடர்கிறது.

இந்துத்துவா ஈடுபாடுடைய நாதுராம் கோட்சேயால் காந்தி படுகொலை செய்யப்பட்டது தொட்டு, இக்கொலை யும் அவர் போன்றோரால்தான் செய்யப்பட்டது என வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை. இசுலாமிய, மாவோயிஸ வெறியர்கள் செய்யும் கொலைகளுக்குப் பொதுவாக அவர்கள் பெறுப்பேற்பர். அண்மையில் பகுத்தறிவாளர்களான தபோல்கர், கல்புர்கி. பன்சாரே ஆகியோரைக் கொலை செய்த கொலைக்காரர்களே கௌரி கொலையையும் செய்திருப்பர் என்ற அய்யம் நிலவும் நிலையில், சிலர் தளை செய்யப்பட்டிருக் கின்றனரேயன்றி குற்றவாளிகளென நிறுவப்பட வில்லை. கௌரியைக் கொலை செய்தோர் யாரெனத் தெரியவில்லை. எனினும் யார் கொலையைக் கொண்டாடி மகிழ்கின்றனர் என்பதை அறிகிறோம். கௌரியைக் கொலை செய்தோர் பெருமைக்குரிய இந்து தேசிய வாதிகள் என மகழ்ச்சியுடன் சமூக ஊடகங்களில் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். அவர்களைத்தான் கௌரி தன் கொடுமையான எதிரிகள் என்பார். இந்துத் தேசியம் நாளும் புதிய எதிரிகளைத் தேடியலைகிறது.

கௌரி உயிருடனிருந்து ஏதிலிகளான ரோகிங்கா இசுலாமியர்களை இந்தியா வெளியேற்றக் கூடாது எனத் தெரிவித்திருப்பாரெனில், அவரைத் தேசத்தைக் காட்டிக் கொடுத்தவர்; நாட்டுக்கெதிரான கொலையாளி; நக்சலைட் என முத்திரையிட்டு சினங்கொண்ட தேசியத் தொலைக்காட்சி ஊடகங்கள் அவரை நோக்கி அலறி யிருப்பார்கள்.

வன்முறை எண்ணம், வன்முறை மொழிநடை, வன்முறைப் பேச்சு ஆகியவை வன்முறைச் செயல் களுக்கு அடிகோலும். வன்முறை நியாயப்படுத்தப் படுவது, ஏற்கப்படுவது ஒரு தேர்தல் தொகுதியை உருவாக்குவதற்கான ஒரு வழி என்றும் கூடக் காணப் படும். அந்தச் சூழலில் தேசத்தைக் காட்டிக் கொடுப்ப வன் செயல் போரின் பகுதியாகவும் ஆகிவிடும். அதாவது இந்துத் தேசியவாதியாக இருக்கமாட்டேன் என வலியுறுத்தும் உரிமை, கடவுள் மறுப்பாளராக, பகுத்தறிவுவாதியாக அல்லது மூடப்பழக்கவழக்கங் களைக் கண்டனம் செய்வது அல்லது மாட்டுக்கறி உண்பது, அரைப்பாவாடை அணிவது. ஓரினச் சேர்க்கை யாளராக இருப்பது, ஜம்மு-காஷ்மீர் குறித்த அரசின் கொள்கையைக் கண்டிப்பது, சவகர்லால் நேரு பல் கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவாகப் பேசுவது ஆகியவற்றுக்கு எதிரான போர் எனக் கருதப்படும்.

தேசியவாதி, தேசத்தைக் காட்டிக் கொடுப்பவர் இடையேயான வேறுபாடு ஆழமான கவனத்திற்குரிய கவலையாகும். கௌரி வலிமையான கருத்துக்களைக் கொண்டிருந்தார். இந்துத்துவா அரசியலுக்கு எதிராகப் பேசினார். சாதி வேறுபாட்டைச் சாடினார். நக்சலைட்டுகள் துப்பாக்கிகளைக் கைவிட அழுத்தம் தந்தார். பெண்களின் பாலியல் விடுதலைக்காகப் பொறுமையுடன் விவாதித் தார். பழமை போற்றப்படும் ஒரு தீவிரவாதச் சூழலில் அவரின் குரல் சிலருக்குச் சினமூட்டுவதாக இருந்திருக் கலாம். அதற்கு அவருக்கு எதிர்க் கருத்துரைப்பதை விடுத்து அவரின் குரலை முற்றாக நிறுத்திவிடலாமென தீர்மானித்துவிட்டனர். இவரைக் கொலை செய்தோர் ஒரு துப்பாக்கியைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் வெளிப்படையாகப் பழிசாட்டி மாணவர் போராளித் தலைவர்களான கன்னையகுமார் மற்றும் உமர்காலிட் (Symbolic) தலைகளுக்கு பெயரளவிலான துப்பாக்கிக் குறி வைத்தனர். பெண் ஊடகவியலாளர் கௌரிக்கு அடுத்துத் குறிவைத்துத் தாக்கப்படுவோர் பட்டியலை வெளியிடுவது அவர்கள் தலைக்குமேல் துப்பாக்கி தொடங்க விடுவது போலல்லவா? இது ஒருவகை கொசு, பெருகி பலரை இரத்தக் காய்ச்சல் பற்றிக் கொள்ளும் வேகத் தைக் காட்டிலும் மாற்றுக் கருத்துள்ளோருக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிடப்படுவது போலல்லவா உள்ளது.

குறிப்பாக ஊடகத்துக்கு எதிராக வன்முறைக் குரல் ஒலிக்கிறது. ஊடகத்தை ஊடக வேசி எனப் பழித்து ஒரு பா.ச.க. நாடாளுமன்ற உறுப்பினர் பெயர் பெற்ற ஒரு எழுத்தாளரை ஈப்பு உந்தில் கட்டி இழு எனக் குரல் கொடுப்பது இழிவாக வசைபாடும் முறைகேடா னவர் உரம் பெறுவதுடன், அரசியல் உயர் தலைமை யால் தாம் பின்பற்றப்படுவதாகச் சட்ட வலிமையும் கூடப் பெறுகின்றன.

குறிப்பாக உண்மையைக் கூறுவது தனக்கே உலைவைத்துக் கொள்வது போன்ற சூழல் உள்ள புறப்பகுதிகளில் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்படுவர்; மிரட்டப்படுவர்; கொலை செய்யப்படுகின்றனர். ஆனால் தற்போது ஊடகத்தினர் தாக்கப்படுவதைப் பொறுத்துக் கொள்ளமுடியாது என முழங்குவதை விடுத்து கௌரி கொலைக்கு மேம்போக்கான கண்டனங்களை வெளி யிடுவது ஊடகத்தினர் தாக்கப்படுவதை ஆளும்கட்சி ஏற்றுக்கொள்கிறது. அரசு ஊடகத்திற்கு எதிரான நிலை யெடுப்பதில் பெருமிதம் கொள்வதும், ஊடகவியலா ளர்களை ஆளும்கட்சி அமைச்சர்கள் புறக்கணிப்பதும்,

அவர்களில் துடிப்பானவர்களைப் புறம்தள்ளுவதும், அவர்களைச் ‘செய்தி வணிகர்கள்’ என அரசியல் தலைமையால் முத்திரை குத்தப்படுவதும், பெண் செய்தியாளர்கள், வழக்குரைஞர்கள் அடிக்கப்படுவதைக் கண்டனம் செய்யாமல் விடுவதும் இன்னும் ஊடகத்திற்கெதிரான வன்முறையை ஊக்குவிக்கும் சூழலை அரசே உருவாக்குகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது.

அரசியலில் அளவுக்கு மிஞ்சி மதக் கோட்பாடுகளைத் திணிப்பது சமூகத்தில் வன்முறையைத் தூண்டும். மென்மையான இசுலாமியர் அல்லது மென்மையான இந்துத்துவாவை ஆட்சியாளர்கள் பின்பற்றுவதால் பிற்போக்குத் தீவிரவாதிகள் ஊடுருவி சட்டப்படியான உரிமைகளைப் பெற்றுவிடுகின்றனர். இப்போது இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இடையே உள்ள பிளவு மிகவும் கேடாகக் கூர்சீவி விடப்படுவதால் அசான் அல்லது மாட்டுக்கறிக்குத் தடை அல்லது வந்தே மாதரம் போன்ற ஒவ்வொரு செய்தியிலும் வன்முறைக் கும்பல் ஈடுபடுவதும் அவர்களின் கோபத்திற்குரிய இலக்குகளை நேரடியாகத் தாக்கவும் செய்கின்றன.

குரல் கொடு! கொலை கூடாது என்பதுதான் சனநாயகப் பண்பாக இருக்க வேண்டும். ஆனால் அறிவுக்கொவ்வாத மதக்கோட்பாடுகளுடன் சனநாயகம் இணையும் போது குரல்கொடு என்பது சுடுவதற்கு வலுவான அனுமதி அளிப்பது போன்றாவதுடன் நாடாளுமன்றச் சனநாயக மரபுகளெல்லாம் குருட்டு நம்பிக்கை மேலோங்கியவர்களால் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன.

**சேவைத் துறை சார்ந்த பொருளாதார வளர்ச்சியடைவதற்கு வெளிப்படைத் தன்மை மிக முக்கிய மான தேவை என மத்திய ரிசர்வ் வங்கி மேனாள் ஆளுநர் இரகுராம் ராசன் ஒரு விவாதத்தில் சொன்னார்.**

தேசத்தைக் காட்டிக் கொடுப்போருக்குச் சட்டப்படியான தண்டனை அளிப்பது போன்றது கௌரி கொலை என்று சொல்கின்ற அளவுக்கு சங் பரிவார் சென்று விட்டனர். வெளிப்படைத் தன்மைக்கும் மாறுதலாக எண்ணத் துணிவோருக்கு இயற்கையானது கொலை தான் என்கின்றனர்.

சமூகமாக நாம் இப்போது பேசாவிட்டால் பல கொலைகள் நடக்கும். ஒவ்வொரு ‘தேசிய எதிராளி’ கொலையும் எப்போதுமில்லாததாக பெரும் ஆரவாரமாகக் கொண்டாடப்படும். இது எதிரிகளை முழுமையாக அப்புறப்படுத்தும் கொலை பாதக அறைகூவல். வன்முறையைச் சட்டமுறைப்படுத்துவது விரிவடையும். எனவே கௌரியைக் கொலை செய்த குற்றவாளிகளைப் போன்றோர் வன்முறையைக் கொண்டாடுபவர்கள் என்பதால் அவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

((Sagarika) சகரிகா, 13.9.17 நாளிட்ட
டைம்சு ஆஃப் இந்தியா இதழுக்கு நன்றி)
தமிழாக்கம் : **இரா. பச்சமலை**

## மடல் பகுதி

தோழர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு, வணக்கம்.

சிந்தனையாளன் பொங்கல் மலர் 07.01.2018 அன்று சென்னை, மாம்பலத்தில் வெளியிடப்பட்டது. மற்றும் இந்தியக் கூட்டாட்சி மாநாடும் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு நானும் எனது கணவர் எம். ரமேஷ் மற்றும் எனது இரு மகன்கள் ஆர். ராஜி, ஆர். ராஜேஷ் இவர்களும் எனது மாமா மு. ஜெயப்பிரகாஷ் அழைத்ததின் பேரில் குடும்பத்துடன் கலந்து கொண்டோம். அந்த மாநாட்டு விழாவில் இந்தியக் கூட்டாட்சியின் தத்துவத்தை இந்த மாநாட்டின் மூலம் பல்வேறு செய்திகளைத் தெரிந்து கொள்ளும் நல்வாய்ப்பினைப் பெற்றேன்.

அதுமட்டுமல்லாமல், நான் சென்னை அறிவாலயத்தில் 2010இல்நடைபெற்ற பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் நூல் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. அந்நிகழ்ச்சிக்கு எனது தந்தை, என் இரு சகோதரர்களுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன்.

எனது மாமா இல்லத்திற்கு அரங்க. சானகிராமன் அவர்கள் அடிக்கடி வருவார். அவர் எப்பொழுதும் கட்சியினுடைய கொள்கைகளையும், செயல்பாடுகளையும் கலந்துரையாடிக் கொண்டு இருப்பார். இதை நான் நேரில் கேட்கின்ற வாய்ப்பு பலமுறை கிடைத்தது.

எனது மாமா மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் காஞ்சி நகரச் செயலாளர் மு. ஜெயப்பிரகாஷ் அவர்கள் கட்சியின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களை எங்களுக்கு எடுத்துரைப்பார். தமிழகத்திலிருந்து குடும்பம் குடும்பமாக வந்த தோழர்கள், தோழியர்களின் தோழமை உணர்வும், நட்பும் எனக்கு கிடைத்தது. இதில் எனக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் கொள்கை புரிதலும் ஏற்பட்டது.

- பெரிய காரை கிராமம் **ஆர். வரலட்சுமி**

## புதிய இல்லத் திறப்பு விழா

காஞ்சிபுரம், முருகேசன்-தெய்வநாயகி அவர்களின் நினைவாக மு.ரமேஷ்-வனிதா இணையர் புதியதாக கட்டியுள்ள இல்லத் திறப்பு மகிழ்வாக சிந்தயைாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- அளித்தனர்.

## பூங்குழலி தோற்றம்

காஞ்சிபுரம் கு.இராசா-துளசி இணையரின் மகன் கலைவாணன்-நித்யா இணையருக்கு பெண் மகவு பூங்குழலி பிறந்ததின் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- அளித்தனர்.

## துணைப்பொதுச் செயலாளர் சி. பெரியசாமியின் நன்றி அறிவிப்பு

"என் இறுதிப் பயணத்திற்கு முதல் மணி அடித்து விட்டது" என்று பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து பொதுக்குழுவில் கூறிய போது, கட்சித் தோழர்கள் பலருக்கும் வருத்தம் மேலிட்டது.

சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியிடு வதற்கு, ஆண்டுதோறும் தனியொருவராகப் பயணம் செய்து நிதி திரட்டும் தோழர் வே. ஆனைமுத்து "2018 பொங்கல் மலருக்காக நான் பயணம் மேற்கொள்ள வாய்ப்பு இல்லை; அதனால் நீ பயணம் செய்து மலருக்கும் மாநாட்டுக்கும் சிந்தனையாளன் ஏட்டுக்கும் அதிக அளவில் நிதி திரட்ட வேண்டும்" என்று என்னிடம் கூறினார். அதன்படி 2017 நவம்பர் 21 அன்று தொடங்கி 40 நாள்கள் இடைவிடாமல் பயணம் செய்தேன். தொடர் பயணத்துக்கு ஏற்ற மகிழுந்து வசதி இல்லாத தால், தொடர் வண்டி, பேருந்து, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் மூலம் அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கோவை, ஈரோடு, வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணா மலை, தாம்பரம், புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், நெய்வேலி, சென்னை ஆகிய இடங்களுக்கு நேரிலும் பிற மாவட் டங்களுக்குத் தொலைப்பேசி மூலமும் தொடர்பு கொண்டு - மலருக்கு விளம்பரம், நன்கொடை, சிந்தனையாளன் இதழுக்குப் புரவலர் கட்டணம் என நிதி திரட்டினேன்.

என் தனிப் பொறுப்பில் பொங்கல் மலருக்கு ரூபாய் இரண்டு இலட்சம் திரட்டினேன். சிந்தனையாளன் புரவலர் கட்டணம் ரூபாய் இரண்டு இலட்சம் பதிவு செய்துள்ளேன்.

இந்தப் பயணத்திற்குக் கட்சிக்கு அப்பாற்பட்ட நண்பர்கள், கட்சித் தோழர்கள், மாவட்டச் செயலா ளர்கள் அனைவரும் சிறிதும் தயக்கமில்லாமல் மன முவந்து பெருந்தொகையான சுமார் நான்கு இலட்சம் கிடைத்திடப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி. பொதுக் குழுவும், பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து அவர் களும் என்னை நம்பி ஒப்படைத்த பணியை என் னால் இயன்ற வரையில் முழுமையாகச் செய்துள் ளேன் என்ற மனநிறைவும், மகிழ்வும் எனக்குள்ளது. என்னுடைய இந்த மகிழ்ச்சிக்குக் காரணமான அனை வருக்கும் நன்றி, நன்றி, நன்றி!

**- சி. பெரியசாமி**
துணைப் பொதுச்செயலாளர், மா.பெ.பொ.க.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி பிப்ரவரி-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - பிப்ரவரி-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.272/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.272/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**